JOHN EVERETT CLOUGH Moses of 19th Century

ஜான் எவரெட் க்ளோ

19ஆம் நூற்றாண்டு மோசே

K. ஃபிராங்க்லின் ஜெயராஜ்

(வானொலி அண்ணய்யா)

FOREWORD BY Dr SIGA ARLES

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

19ஆம் நூற்றாண்டு மோசே

ஜான் எவரெட் க்ளோ

தொகுப்பு

K. பிராங்க்லின் ஜெயராஜ்
(வானொலி அண்ணய்யா)

Mysoul Trust (R.), Udupi
Shantha Sadan, Mission Compound
UDUPI - 576 101, South India.

"John Everett Clough" by K. Franklynn Jayaraj, Published by Mysoul Trust (R.), Udupi, Shantha Sadan, Mission Compound, Udupi - 576101 with the collaboration of Centre for Contemporary Christianity, Bangalore.

Published in November 2006
Copies : 2,000
Price : Rs. 35/-

Publishers :
Mysoul Trust (R.) Udupi
Shantha Sadan, Mission Compound
Udupi - 576 101
and
Centre for Contemporary Christianity
Bangalore.

Printed at Laveena Offset Printers, Katapady - 574 105, Udupi.

சமர்ப்பணம்.

ஆண்டவருடைய அழைப்புக்கிணங்கி செல்வம், புகழ், அந்தஸ்துகளுக்கு முதுகுகாட்டி, கபட மில்லாமல் அவருடைய ஊழியத்திற்கு தங்களை ஒப்புக்கொடுத்து ஆயிரக்கணக்கான ஆத்து மாக்களின் ஆதாயத்திற்காய் உழைத்துவரும் உத்தம ஊழியர்களைக் கௌரவித்து இந்த நூலை கர்த்தருடைய மகிமைக்காய் சமர்ப்பிக்கிறேன்.

தொடக்க உரை

"சேவாபாரத்" சங்கத்தினர் சிறுவர்களின் CBS பாடங்களைக் கன்னட மொழிப்பெயர்ப்புக்காக 1997 ல் என்னிடம் ஒப்புவித்தபோது அதில் 'ஜான் எவரெட் க்ளோ' என்னும் மகாப்பெரிய ஊழியரின் ஒருசில விஷயங் களால் கவர்ச்சிக்கப்பட்டு அதனைப் புத்தகவடிவில் வெளியிடவேண்டுமென்ற வாஞ்சையுடன் 2002-லிருந்து ஜெபித்துக்கொண்டிருந்தேன். மட்டுமல்ல "வருகையின் தூதன்" என்னும் பத்திரிக்கையில் 16 தொகுப்புகளாக அதனை வெளியிட்டேன், அதற்கு அமோக வரவேற்பு கிடைத்தது. பிறகு பல வேதாகம நூலகங்களுக்குச் சென்று தேடிப்பார்த்ததில் சிறு சிறு விவரங்களும் கிடைத்தன.

நான் 2005-ம் ஆண்டு நவம்பர் கடைசியில் இந்த மாபெரும் மிஷனெரி ஊழியம் செய்த ஆந்திரா மாநிலத்தின் ஓங்கோல் என்னுமிடத்திற்குச் சென்று, அவர் வாழ்ந்துவந்த பங்களா, நிறுவின பள்ளிக்கூடம் கல்லூரிகளின் விவரங்கள், 1900 -த்தின் ஆரம்பக்காலத்தில் தலை தூக்கி வந்த பயங்கர பஞ்சக்காலத்தில் மக்கள் தொற்று நோய்களால் ஈக்களைப்போல் பசி பட்டினியால் மரித்துக் கொண்டிருந்த வேளையில் ஆங்கில அரசாங்கம் நமது ஊழியர் க்ளோ தலைமையில் பல நூறு மைல்கள் அளவில் ஏற்படுத்தின 'பக்கிங்ஹாம்' கால்வாயின் மூலம் ஒரு இலட்சத்திற்கு மேல் மக்களைக் காப்பாற்றின விவரம், அப்போதைய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறைகள் மற்றும் இவைகளின் போட்டோ படங்கள் போன்ற எல்லா விவரங்களையும் சேகரித்துக்கொண்டு வரமுடிந்தது. 15,000 பேர் அமர்ந்து ஆராதனை செய்யக் கூடிய அளவுக்கு இட வசதியுள்ள ஓங்கோலின் 'த ஜேவட் மெமோரியல் பாப்டிஸ்ட் தேவாலய'த்தின் முக்கிய சபை போதகரான டாக்டர். D. J. அகஸ்டின் அவர்களின் ஆலோசனையின்படி சிகந்த்ராபாத்திலுள்ள ஆந்திரா கிறிஸ்தவ வேதாகம கல்லூரிக்குச்சென்று அங்குள்ள நூலகம் மற்றும் கோப்புக்கட்டு அறைகளில் தேடி பல செய்திகளையும் சேகரித்தேன். அங்கு க்ளோ மற்றும் ஜேவெட் பற்றிய பல விஷயங்கள் தாராளமாக கிடைத்தன. ஒரு மாதகாலம் அங்கேயே தங்கியிருந்து அவைகளை

இடைவிடாமல் வாசித்தாலும் படித்துத் தீராத அளவுக்கு மண்டிக்கிடக்கும் விஷயங்கள் அங்கே இருக்கின்றன.

அந்தக் கோப்புக்கட்டு அறையில் கிடைத்த ஒரு தாளில் க்ளோவின் சொந்த கையெழுத்தில் இருந்த குறிப்புகளை நான் வாசித்தேன். அவருக்கிருந்த ஆ... ஆத்துமாக்களின் பேரிலுள்ள அவரது அன்பு, ஊழியத்திற்கென ஒப்புக்கொடுத்த அவருடைய மனோ பாவனைகள், ஊழியத்தினிமித்தமாக அவர் சந்தித்த எதிர்ப்புகள், அனுபவித்த கொடுமைகள், சரீரப்பாடுகள், சமுதாயத்தில் அவருக்கிருந்த பதவி, அந்தஸ்து, மக்களின் புகழ்ச்சிகள் மற்றும் தற்புகழ்ச்சிகளை எதிர்த்து நின்ற அவருடைய தாழ்மை, மற்றும் மனக்கிலேசம், வறட்சிக் காலத்தில் தரித்திரத்தில் மடிந்துக்கொண்டிருந்த மக்களுக்காக அவருக்கிருந்த மன உருக்கம்- இவைகளை வாசித்து மனம் நொறுங்கியவனாக அங்கேயே நான் என்னைத் தாழ்த்தி முழங்காலில் விழுந்து அப்படியே என்னை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தேன். "கர்த்தாவே, உம் ஊழியத்தைச்செய்ய எனக்கு இப்படிப்பட்ட அர்ப்பணிப்பின் இருதயத்தைத் தாரும்," என்று வேண்டினேன். வாலிப சந்ததியினரின் மேல் நோக்கமுடையவனாக சிறுவர்களும் வாசித்துப் புரிந்துகொள்ளும் வகையில் இந்த நூலை எழுதியுள்ளேன். இன்றைய ஊழியர்களுக்கு இது ஒரு வழிகாட்டியாகவும், வாலிபர்களுக்கு சவாலாகவும், அற்புதங்களைச் செய்யும் தேவன் இன்னும் ஜீவிக்கிறார் என்பதை ஞாபகப்படுத்தவும் உங்கள் முன்னிலையில் இதை வைக்கிறேன்.

விசேஷமாக ஒரு சாதாரண மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய சித்தத்திற்குத் தன்னை ஒப்புக் கொடுக்கும்போது, என்னென்ன அற்புதங்களைச் செய்ய இயலும் என்பதை இந்த ஊழியரின் வாழ்கையிலிருந்து நாம் தெரிந்துக்கொள்ளலாம். உங்களுக்கு இது எப்படியிருக்கவேண்டும் என்பதாக யோசிக்காமல் எனக்குள், "தேவனே, உமது ஊழியத்தில் நான் முழுவதும் உண்மையுள்ளவனாக இருக்கும்படி எனக்கு உதவிபுரியும்" என்றும், "உண்மையான அர்பணிப்பில் (Mysoul-My Commitment) என்னைப் புதுப்பித்தருளும்" என்றும் ஜெபித்து இந்தப் புத்தகத்தை முன்வைக்கிறேன். உங்களுக்கு

ஆசீர்வாதமாக இந்த புத்தகம் இருக்குமானால் ஒரு வரியில் உங்கள் கருத்தை எனக்கு எழுதி தெரியப் படுத்துங்கள். நானும் உங்களுடன் மகிழுட்டும்.

November, 2006

K. Franklynn Jayaraj
(வானொலி அண்ணய்யா)
மைசோல் ட்ரஸ்ட் (ரி) உடுபபி
சாந்தி சதனா,
மிஷன் கம்பௌண்டு,
உடுப்பி - 576 101
Phone : 0820 - 4295225
Mobile : 9845970025
E-mail : franklynnannaiah@hotmail.com

முன்னுரை

ஊழியப்பணியிடங்களின் சரித்திரப்பக்கங்களில் பல விசுவாச வீரபுருஷர்களை நாம் காணமுடியும். அவர்கள் தேவனுடைய அழைப்புக்கு இணங்கி, கீழ்ப்படிந்து வாழ்ந்துவந்த வாழ்க்கை நம் இருதயங்களையும் மனதையும் மெய்சிலிர்க்க வைக்கிறது. அவர்களுடைய வாழ்க்கை மற்றும் பிரயாணம் மிகவும் கடினமானதாக இருந்தது. செய்தித்தொடர்பு மற்றும் எந்த விதமான வசதிகளுமின்றி, குழந்தைப் பருவமுதற்கொண்டே, உடல் நலக்குறைவால் அவர்கள் மிகுந்த செலவினங்களால் அவதிப்பட்டு வாழ்ந்திருந்த நாட்களில் செய்த ஊழியங்களே மகாப்பெரிய அற்புதங்களாகும். இப்போதைய ஊழியப்பணித்தளங்களுக்கு தங்களை ஒப்புக்கொடுத்தவர்களுக்கு, முந்தைய வீரர்களின் சாட்சி மற்றும் எழுத்துக்களை கொடுப்பதன் மூலம் சவாலளிக்கும் இக் காரியங்கள் பல ஆண்டுகளாக சர்ச்சைக்கிடமாகியுள்ளது.

மேற்கத்திய தேவ ஊழியர்களைப்பற்றி பல தகவல்கள் ஒழுங்காக சேகரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் உள் நாட்டு வீரர்களின் சரித்திரங்கள் சேகரிப்புக்குறைவினால் அப்படியே மூடப்பட்டுவிட்டன. இதனால் ஊழியப்பணித் தலத்தில் ஒரு குறை ஏற்ப்பட்டுள்ளது.

கர்நாடகத்தில் "பானுலி அண்ணய்யா" என்றழைக்கப்படுகிற (வானொலியில் சிறுவர்களுக்காக உழைக்கும் ஊழியர்) கெ. ப்ராங்க்லின் ஜெயராஜ் என புகழ்பெற்ற நண்பராவார். உள்ளூர் மற்றும் உள்நாட்டு ஊழிய ஸ்தாபனங்களின் ஊழியர்களுடைய கபடற்ற தரிசனங்களையும், அவர்களுடைய ஊழியசாட் சிகளையும் வெளியிட முயற்சியெடுத்ததற்காக நான் உண்மையாகவே மிகுந்த நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

பிராங்க்லின் பல தாலந்து மற்றும் வித்தியாசமான அனுபவங்களைக் கொண்ட ஒரு அபூர்வ மனிதனாவார். கர்நாடக போக்குவரத்துக் கழகத்திலிருந்து விடுப்பட்டு, சிறுவர்

ஊழியச்சங்கத்தில் சேர்ந்து சிறிது காலம் உழைத்தார். பின்பு, சிறுவர் நல மேம்பாட்டிற்காக உழைத்தார். பின்பு சிறுவர்களுக்குக் கதை சொல்லுவதன் மூலமாக பத்திரிகை ஊழியத்தைத் தொடங்கினார், பின்பு பத்திரிகை பதிப்பாசிரியராக அயராது உழைத்துவரும் இவர் தன் திறமையை ஊழியத்தின் எல்லாப் பணிகளிலும் காண்பித்து, எல்லா இடங்களிலும் மிகச் சரியாக செயலாற்றி வருகிறார். தற்போது கன்னட மொழியில் 'வருகையின் தூதன்' என்னும் மாதாந்திரப் பத்திரிகையின் ஆசிரியராகவும், கிறிஸ்தவக் கல்வியின் படச்சுருளின் இயக்குநராகவும் 'சிறுவர்களின் மாத இதழை கன்னட மக்களுக்கு சேர்க்கும் நோக்கத்துடன் செயலாற்றி வருகிறார். அன்றாட ஊழியங்களில் இந்த மிஷனெரியின் வாழ்க்கை வரலாற்றின் சிறு புத்தகமும் ஒன்று.

அமெரிக்கன் பாப்டிஸ்ட் சபை மிஷனரியான ஜான் எவரெட் க்ளோவின் வாழ்க்கை மற்றும் ஊழியச் சரித்திரமானது ஆர்வத்துடன் வாசிக்ககூடிய சிறு சிறு கதைகளடங்கியுள்ளது. அவருடைய ஊழியம் தைரியம் நிறைந்த சாட்சிகளால் க்ளோ அமோக சாகசம் புரிந்தவரென்பதை காட்டுகிறது. இவருடைய வார்த்தையில் சூழ்நிலைக்கேற்றவாறு, மூல ஆதாரமாக விளங்கும் தலைமையில் செயலாற்றும் இவருடைய பங்கு மற்றும் விசுவாச சாட்சிகள், இவை நமக்கு போதனையாகவும் ஊக்குவிக்கும் பொருளாகவும் நம் வாழ்க்கையை நிரப்புகிறது. இதனை பிரயோஜனப்படுத்திக் கொள்ளும்படி வாசகர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜான் எவெரெட் க்ளோவின் வாழ்க்கையை நாம் பார்க்கும்போது அவரை "இன்றைய மோசே" என்றே அழைக்கலாம். கல்வியளித்த தன மூலமாகவும், தொழில் வழிக்காட்டியாகவும் தரித்திரர்களை விடுதலையின் பாதைக்குள் நடத்தி, இன்று நமது ஊழியப்பணித்தலங்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் திகழ்கிறார்.

ஜான் எவரெட் க்ளோவின் வாழ்க்கை மற்றும் ஊழியத் தைப்பற்றி எழுதப்பட்ட இந்த நூல், பாண்டித்திய செயலாயிராமல் ஊக்குவிக்கும் பொருளடங்கியதொன்றாகும். விசுவாச வளர்ச்சியில் தைரியமாக முன்னேறவும், சாதாரணமாக படுக்கும் நேரத்தில் வாசிக்கும் புத்தகமாகவும் இது உள்ளது. இப்படிப்பட்ட

பல தேவ ஊழியர்களின் வாழ்க்கை, ஊழியத்தின் போக்கு, இவற்றின் இலக்கியம் நமது கரங்களில் அதிகமாக கிடைக்கப் பெறவேண்டும். இவைகள் மேற்கத்திய தேவ ஊழியர் களின் சரித்திரங்கள் மட்டுமல்ல, நமது இந்திய கிறிஸ்தவ ஊழியச்சரித்திரத்தை புதியதாக உருவாக்கிய உள்நாட்டு ஊழியர்களின் சரித்திரங்களும், வாழ்க்கைமுறைகளும் பிரசுரிக்கப்படவேண்டுமென்று விரும்புகிறேன்.

இந்த ஒரு பெரிய காரியத்தின் முயற்சிக்காக பிராங்க்லின் அவர்களை வாழ்த்தி, அவர் தந்துள்ள இந்த படைப்பை உங்கள் முன்னிலையில் வைத்துள்ளேன். அதே சமயத்தில் வெளிச்சத்துக்குள் வந்துள்ள, அல்லது வராமல் உள்ளே அடங்கிவிட்ட பல கிறிஸ்தவ மகா ஊழியர்களின் வாழ்க்கை சரித்திரங்களை வெளிப்படுத்தி பலருக்குள் தங்களை கர்த்தருக்கு அர்ப்பணிக்கும் மனதை உண்டுபண்ணும் தீப்பொறி பற்றியெரியவைக்க உற்சாகப்படுத்துகின்றேன்.

ஜான் எவெரெட் க்ளோவின் வாழ்க்கை மற்றும் ஊழியங்கள் நமது சீஷத்துவத்திற்கு ஆசீர்வாதமாக இருக்கவேண்டும், இது நமது இன்றைய ஒழுங்கான சுவிசேஷ ஊழியத்திற்கு அடித்தளமாக அமையவேண்டுமென்றும் ஜெபிக்கிறேன்.

DR Siga Arles, Ph.D

(இவர் மீசியாலஜி பேராசிரியரும், கர்நாடகா மிஷன் நெட் வொர்க்கின் தலைவரும், Centre for Contemporary Christianityயின் இயக்குநருமாக உழைத்துவருகிறார்.)

19ஆம் நூற்றாண்டு மோசே

ஜான் எவரெட் க்ளோ

பின்னணி

19ஆம் நூற்றாண்டின் மத்தியக் காலத்தில் இது நடைபெற்றது. இன்றைய இந்தியாவைப்போல் அன்று நமது நாடு முன்னேறியிருக்கவில்லை. ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் நமது நாட்டில் மதச்சுதந்தரம் இருந்தது. ஆனால் கிராமங்களில் இதுபற்றி அறியாததால் கிராம அதிகாரி களும், நிலச்சுவான்தாரர்களுமே ஆட்சி நடத்தி வந்தார்கள் சமூகபழக்கவழக்கங்களும் மிகவும் இழிவான, மோசமான பின்தங்கிய நிலையில் நடைபெற்றன. ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களின் ஆதாயத்திற்காய் உழைத்துவரும் உத்தம ஊழியர்களைக் கௌரவித்து இந்த நூலை கர்த்தருடைய மகிமைக்காய் சமர்ப்பிக்கிறேன்.

ஜான் எவரெட் க்ளோ (16-7-1836 - 24-11-1910)

நூல் அறிமுகம்

இந்த தீர சுவிசேஷகர் இந்தியாவின் நமது அண்டை மாநிலத்தின் நெல்லூர் மற்றும் ஓங்கோல் என்னும் இடங்களில் 40 ஆண்டுகள் உழைத்து 60,000 - த்திற்கும் மிஞ்சிய மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, 2 லட்சம் பேரை கர்த்தரை அறிகிற அறிவிற்குள் கொண்டுவந்து, 300 மிஷனெரிகளின் குழுவை ஏற்படுத்தி ஜீவபுத்தகத்தில் தம் கடைசி கணக்கில் சேர்த்துள்ளார். இத்தனைக்கும் அந்தப்பகுதிகள் கனிகொடாத பணித்தலங்களாக கருதப் பட்டு மூடும் நிலைமைக்கு வந்துவிட்டது. அவருடைய வாழ்க்கையின் ஓரிரு சம்பவங்களையும், குறிப்புகளையும் நீங்கள் இங்கு வாசிக்கலாம்.

மொத்தத்தில் இந்த மகானின் வாழ்க்கை வரலாற்றில், இன்று பல மிஷனெரி ஸ்தாபனங்கள் சுவிசேஷ ஊழியத் திற்காக போடும் திட்டம், செயலாற்றுத் திறமைமுறை, எதிர்ப்புகளை சகிக்கும் தன்மை இவைகளை க்ளோ தன் ஊழியக்காலத்தில் நிரூபித்துக்காட்டினார். அன்றைய, மிருகத்திற்கும் கீழாக தள்ளப்பட்ட தீண்டப்படாத ஜாதியினருக்கு மனிதத்தன்மையை முழுவதுமாக அளித்து இன்று ஆயிரக்கணக்கில் முழுப் பிரபஞ்சத்திற்கும் சவால் விடும் வெவ்வேறு பணித்தலங்களை பிரகாசிக்கச் செய்தார். கர்த்தருடைய வீர தீர ஊழியரான இவர் இன்றைய ஊழியர்களுக்கு சிறந்த முன்மாதிரியாவார்.

தேவன் தம் சித்தத்தின்படி ஊழியம் செய்ய ஒப்புக் கொடுத்த தம்முடைய ஊழியர்களை முழுவதுமாக எப்படி ஆயத்தப்படுத்தி தம்மை மகிமைப்படுத்திக்கொள்கிறார் என்பதுதான் இதனுடைய கருப்பொருள். மட்டுமல்ல, உண்மையான ஊழியம் என்றால் என்ன? ஊழியர்கள் எப்படி ஊழியம் செய்யவேண்டும்? தங்க ளுடைய தேவைகளுக்காக யாரை சார்ந்துகொள்ளவேண்டும்? என்பதும், அவர்களால் கர்த்தரை கண்டடைந்த நாகரிகமற்ற, படிப்பறிவில்லாத ஆத்துமாக்களின் குணசீலங்கள் எப்படிப்பட்டவை, தேவன் எவ்வகையில் தம்முடைய வார்த்தையிலும், விசுவாசத்திலும் அவர்களை போஷித்தார்

என்பதும் தற்போதைய ஊழியர்களுக்கு சவாலாகவும், முன் மாதிரியாகவும் உள்ளது. அவருடைய வாழ்க்கையில் காணப்பட்ட ஒரு சில முக்கியமான காரியங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

குழந்தைப்பருவத்தில் க்ளோ தாயாரால் சமாளிக்க முடியாதவனாய் இருந்தான். குடும்ப மருத்துவர் ஒருவர் அவரைப்பற்றி பேசும்போது, "அந்த குழந்தைக்கு முழுக் கண்டமும் போதாமல் போய்விடுமோ?," என்று வேடிக்கையாகச் சொன்னார். ஆனால் அது முன்குறித்த வார்த்தையாயிருந்தது. க்ளோ கண்டங்களையும் கடல்களையும் கடந்து கிறிஸ்துவைப்பற்றி சொல்ல இந்தியா வந்து அசாத்தியமானவற்றைச் செய்துள்ளர்.

*...சிறுவனான க்ளோ 14 வயதுடையவனாயிருந்தபோது, தன் சகோதரன் உழுதுவந்த நிலச்சொந்தக்காரரரும், உள்ளூர் நீதிபதியின் மனைவியுமான ஒரு ஸ்திரீ, "Antiquities of Greece" (கிரேக்க நாட்டு புராதனங்கள்) என்னும் புத்தகத்தை க்ளோவுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். அதை வாசித்தப்பிறகு அவனுக்குள் அடங்கியிருந்த குணாதிசயங்கள் அளவு கடந்துப் பிரவாகித்து வந்தன. அவரைப்பற்றி பிரபஞ்சத்தின் எல்லா மூலைகளிலும் மக்களுடைய காதுகளில் முழங்கின.

*...தன் பதினேழாம் வயதில் க்ளோ நில அளவையராக (Surveyor) நான்கு ஆண்டுகள் வேலை பார்த்தான். அந்த வேலையின் அனுபவமானது, இந்தியாவின் அடுத்து வந்த ஊழிய நாட்களில் அதிக உதவியாக இருந்தன.

*...லோவா பாப்டிஸ்ட் கல்வி நிருவனம் க்ளோவின் கல்விக்கட்டணத்தையும், வீட்டு வாடகையையும் தர முன் வந்தது, சில மாதங்கள் ரொட்டி, வெண்ணை, ஆப்பிள் பழங்களை மட்டும் சாப்பிட்டு வாழ்ந்து தன் வேதபாட பயிற்சியைத் தொடர்ந்து செய்தார்.

*...30-11-1864-ல் மிஷனெரி க்ளோ அமெரிக்கவில் கப்பல் ஏறினார்-

26-3-1865-ல் மதராசுக்கு (சென்னை) வந்து சேர்ந்தார்.

22-4-1865-ல் நெல்லூர் அடைந்தார்.

*...மிஷனரி க்ளோ மதராசிலிருந்து மாட்டுவண்டியில் ஒரு நாளுக்கு 30 மைல் போல் கடும் வெயிலின் நிமித்தமாக பகலின் அங்காங்கு இளைப்பாறிக்கொண்டும், இரவு வேளைகளில் பிரயாணம் செய்தும் நெல்லூருக்கு வந்து சேர்ந்தார்.

*...துப்பலி இலச்சுமய்யா 30 கிராமங்களில் தாழ்த்தப் பட்டவர்களான தீண்டக்கூடாதவர்களுக்கு பெயர் பெற்ற பூஜாரியாயிருந்தார். ஆரம்ப நாட்களில் க்ளோ சுவிசேஷம் சொல்வதை கேட்டு மிகவும் சினமடைந்து வந்தான். தன் வீட்டுக்கதவுகளை அடைத்துவைத்து தன் மனைவி சுவிசேஷத்தை கேட்காதபடி செய்து வந்தார். ஆனால் க்ளோவின் விடாமுயற்சியின் ஊழியத்தால் அவன் இரட்சகரைக் கண்டுகொண்டான். இலச்சுமய்யா க்ளோவின் தெலுங்கு தேசத்தின் முதல் கனியாவார்.

*...முதலில் அவர் நூறு ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காக ஜெபித்தார். ஆனால் அது நிறைவேறினதாகத் தெரியவில்லை. க்ளோ டாக்டர். வாரேன் அவர்களுக்கு எழுதி "இந்தப் பெரிய சுமையைச் சுமக்க எங்களுக்கு விசுவாசப் பெலனில்லை போலும்" என்றார். அதற்குப் பதிலாக டா. வாரேன், "நூறு ஆத்துமாக்களை ஏன் கேட்கிறீர்கள்? ஆயிரம் மக்களுக்காக ஜெபியுங்கள்." என்றார். இதற்குப் பின்பு இரண்டு மாதங்களில் இரு ஊழியர்கள், ஒரு நபருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். இந்த நபர் பிறகு சுமார் 30 ஆண்டு காலம் உழைத்து ஆயிரத்திற்கும் அதிகமான மக்களை கர்த்தரண்டை வழி நடத்தினர். முதல் நாளில் 614 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். 3 ஆம் நாளில் 2222 பேரும், 6 ஆம் நாளில் 8691 பேரும், இப்படியாக அந்த ஆண்டின் கடைசியில் சபை மக்களின் எண்ணிக்கை 12,804 -ஆக இருந்தது.

*...ஒங்கோலில் சபைகள் சுயசார்புடையவைகளாக இருக்கவேண்டுமென க்ளோ விரும்பி அதற்காகப் பாடு பட்டார்.

*...ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படியாக மக்கள் சுமார் 50 மைல் தூரத்திலிருந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள்

பஞ்சத்தால் இன்னும் அவதிப்பட்டவர்களாகவே இருந்தார்கள். ஆயிரக்கணக்கில் வந்த அவர்கள் பிறஜாதியினரால், 'சாப்பாட்டுக் கிறிஸ்தவர்கள்' என்றழைக்கப்படுவார்களோ எனப்பயந்து க்ளோ ஞானஸ்நானங்கொடுக்க முன் வரவில்லை. இப்படி மாதக் கணக்கில் மக்களை பின்னுக்கு அனுப்பிக்கொண்டே இருந்தார். அவர்கள் உண்மைக் கிறிஸ்தவர்களோ இல்லையோ என்று சந்தேகித்து தாமதித்தார்.

*...க்ளோ இந்தியாவில் ஊழியத்தை முடித்த பின்பு, இந்தியாவை விட்டு போய்விடுவார் என்று அறிந்த மக்கள் எல்லா கிராமங்களிலிருந்தும் அவரை வழியனுப்புவதற்காக வர ஆரம்பித்தார்கள். இரயில் நிலையத்தில் மக்கள் பின்னாலிருந்து சத்தமிட்டபடியே ஓடி வந்துகொண்டிருந்ததைக் க்ளோ பார்த்தார். மக்கள் தங்களது துரை திரும்பி வரமாட்டார் என்று அறிந்திருந்தார்கள்.

*...அவர் 1910-நவம்பர் 24-இல் கர்த்தருக்குள் மரித்தார். அவருடைய கல்லறையின் மேல் அவருக்கு பிரியமான வாசகம் செதுக்கப்பட்டிருந்தது.

"Be Still and know that
I am the Lord."

1. பிறப்பு, சிறுவயது மற்றும் குடும்பம்

வியாழனன்று அப்பொஸ்தல பேதுருவுக்கு "கேபா" என்னும் பெயர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவால் கொடுக்கப்பட்டது. கேபா என்றால் பாறை. அவனாலேயே கிறிஸ்தவ சபை ஆரம்பிக்கப்படவேண்டுமென்று அவன் அஸ்திபாரக்கல்லாக பயன்படுத்தப்படும்படியாக, அவனுக்கு கேபா அல்லது பத்ரோஸ் என்னும் பெயர் கொடுக்கப் பட்டதை நாம் வேதத்தில் காண்கிறோம்.

சில்டிக் மொழியில் பாறை என்பதற்கு க்ளோ என்னும் வார்த்தை உண்டு. இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களுக்காகவும், ஒதுக்கப்பட்டவர்களுக்காகவும், தீண்டக்கூடாதவர்களுக்காகவும் ஒரு கிறிஸ்தவசபை க்ளோவால் உருவாக்கப்பட்டது. மற்றொரு காரியம்- இந்த ஜான் க்ளோ நியூயார்க்கில் பிறந்த ஆண்டில் ஆந்திரா மாநிலத்தில் நெல்லூரில் தெலுங்கு பாப்டிஸ்ட் மிஷன் உருவாக்கப்பட்டது. இவர் 1836-ஆம் ஆண்டு ஜூலை 16-ஆம் நாள் நான்கு சகோதரர்களும், ஒரு சகோதரியும் உள்ள ஒரு ஏழைக்குடும்பத்தில் நான்காம் குழந்தையாகப் பிறந்தார். தகப்பன் ஒரு காய்லான் கடையை வைத்துக்கொண்டு பழைய பொருட்களை விற்று வியாபாரம் நடத்திவந்தார்.

கீழ்மட்ட, மத்தியவர்க்கத்தினரான தகப்பனின் மிருதுவான சுபாவத்தின் பலனாக குடும்பம் மேன்மேலும் ஏழ்மை நிலைக்குள் இறங்கிவிட்டது. தகப்பனார் தன்னுடைய நண்பனின் கடன் தீர்ப்பதற்காக ஜாமீனில் நின்றார், அந்த நண்பனின் துரோகத்தால் முழு கடன் சுமையை தன் மேல் சுமந்து கொண்டார்.

ஏழை குடும்பத்தில் வளர்ந்து வந்தாலும் சிறு வயதில் க்ளோ தடித்த, நல்ல திடகாத்திரமாகவும், ஆரோக்கியத்துடனும் சமாளிக்க முடியாதவனாகவுமிருந்தான். இவனுடைய குறும்புச்சுபாவம், 'மிதமிஞ்சிய சுறுச்சுறுப்பு, பல முறை ஆபத்திற்குள் தள்ளியிருந்தது.

ஒரு முறை அவருடைய குடும்பமருத்துவர் தாயாரைப் பார்த்து, "உங்கள் மகனுக்கு முழு கண்டமும் போதாமல் போயிருமோ!" என்று சொன்ன வார்த்தை தீர்க்கதரிசனம் போலிருந்தது. அதேபடி பிறகு வந்த நாட்களில் அவர் கண்டங்களை கடந்தும், கடல்களை தாண்டியும், இந்தியாவுக்கு வந்தார். அந்த நாட்களில் கடல் பிரயாணம் மிகவும் கஷ்டமும், இடையூறுகள் நிறைந்ததுமாயிருந்தது. அவற்றையெல்லாம் மேற்கொண்டு, அவர் இந்தியா வந்தடைந்தார்.

ஏற்கனவே கீழ்மட்ட மத்திய வர்க்கத்தை சார்ந்த குடும்பம், அத்துடன் தவறி வந்தது போல் சுமந்து கொண்ட கடன் சுமை. தகப்பனார் பயபக்தியுள்ள கிறிஸ்தவராக இருந்தாலும் பிள்ளைகளுக்கு ஒருபோதும் வேத வசனங்களைக் கற்பித்துத் தரவில்லை. ஆனால் தாத்தா (தாய் வகையில்) இந்த பிள்ளைகளுக்கு வேதத்தை போதித்து, ஜெபிக்கக் கற்றுகொள்ளக் கட்டாயப்படுத்தி வந்தார். ஆனால் தாத்தா மரித்துப்போன பின்பு, தன்னுடைய எல்லா ஆஸ்தியையும் சபைக்கு எழுதி வைத்ததை அறிந்து, குடும்பத்தினர் அனைவரும் ஏமாற்றமடைந்தார்கள். மட்டுமல்ல, தாத்தாவின் சீஷர்கள் அவருடைய சொத்துக்காக சண்டைப்போட்டு நீதிமன்றப் படியேறியதால், அந்த ஆஸ்தியின் பெரும் பகுதி அதனுடைய செலவினங்களுக்கே சரியாயிருந்தது.

ஒரு வேளை இதன் காரணத்தால் க்ளோ பெற்றோர்கள் ஆன்மீகக் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடாமல், விலகியிருந்திருக்கலாம். ஆனால் தகப்பனாகிய க்ளோ, தன்பிள்ளைகளை ஞாயிற்றுக்கிழமைகளில் விளையாட விடாமல் ஒரு சில மத சம்பிரதாயக்காரியங்களுக்கு அவர்களைப் பலவந்தப்படுத்தினார்.

வளர வளர ஜான் ஒரு முறட்டு பையனைப் போல் அனைவரையும் தன் சரீர பெலத்தினால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தவனைப்போல் நடக்கலானான். ஒரு முறை தன் நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்கையில், "நான் பெரியவனானப் பிறகு, பிசாசைக் கொன்று விடுவேன்", என்று சொல்லி அந்த வயதில் ஒப்பற்ற தன் பெலத்திற்கு எதிராக தன் சரீர அளவைப் பற்றி பெருமை கொண்டான். பின்பு வந்த நாட்களில் சமூகம்

மற்றும் ஆவிக்குரிய மோசமான நிலைமையின் உருவத்தில், புறக்கணிப்பு மற்றும் அடிமைத்தனமாகிய பிசாசின் பிடியிலிருந்து தெலுங்குதேச மக்களை விடுவித்து, அப்பிசாசைப் பெலவீனப்படுத்துமளவுக்கு அவன் தன் சரீரத்தை வளர்க்கவேண்டிய ஆயத்தத்தில் க்ளோ வளர்க்கப்பட்டான்.

குடும்பம் மீண்டும் தங்களது வசதியான நிர்வாகத்திலிருந்து வஞ்சிக்கப்பட்டுவிட்டது. அவர்கள் அந்த இடத்தைவிட்டு விஸ்கோஸிஸ் என்னுமிடத்தில் நிலம் மலிவாய் கிடைக்கும் என்னும் காரணத்தால் அந்த பகுதிக்கு இடமாற்றிப்போக தீர்மானம் செய்தார்கள். கையில் இருந்த பணத்தையெல்லாம் சேர்த்து எடுத்துக்கொண்டு, ஒரு இடத்தை விலைக்கு வாங்கிக்கொண்டார்கள். குளிர்காலமானபடியால் சிக்காகோ பட்டணத்துக்கருகில் ஒரு கிராமத்தில் தாற்காலிகமாக தங்கி னார்கள். ஒரு முறை தகப்பனார் வழக்கம் போல் குதிரை வண்டியில் தன் விஸ்கோஸிஸ் நிலம் பார்க்க போய்க்கொண்டிருக்கையில், குதிரைகள் தடுமாறி ஓடின படியால் அவர் கீழே விழுந்து, விலா எலும்பு, மற்றும் தோள்பட்டை எலும்புகள் முறிக்கப்பட்டு, வீட்டுக்கு கொண்டு வரப்பட்டார். பிறகு அவர் தன் வாழ்நாள் முழுவதும் உடல் ஊனமுற்றவராகவே இருந்தார். இது ஒரு எதிர்பாராத ஆபத்தாக இருந்தாலும். குடும்பத்திற்கு ஒரு பேரடியாயிருந்தது.

புண்ணின் மேல் சூடு வைத்தாற்போல் அவர்கள் வாங்கிய விஸ்கோஸ் நிலம் விலை குறைவானதென்றும், வறண்ட நிலமென்றும் அறியப்பட்டு, வேறு வழியின்றி ஒரு தோட்டத்தில் (இல்லிகோஸ்) வசிக்க முடிவெடுத்தார்கள்.

ஜான் க்ளோவின் மிஷனெரிப் பயிற்சி இங்கிருந்துதான் ஆரம்பமாயிற்று.

* பிறகு வர இருந்த கொடிய ஏழ்மையை இந்த ஏழ்மை அனுபவத்திலிருந்து அறிந்து கொள்ளமுடிந்தது.

* பசியுற்றோரின் கஷ்டம் இன்னதென்று அறிந்து கொள்ள தானும் பசியினால் வாடும் நிலை ஏற்பட்டது.

* அன்றைய நாளில் இந்தியாவில் பின்தங்கிய, தீண்டப் படாதோரின் மத்தியில் உழைக்க விரும்புகிறவனுக்கு இந்த ஒரு விசேஷித்த பயிற்சியைத் தேவன் தாமே அனுமதித்திருந்தார்.

* ஜான் க்ளோ வளர வளர சோம்பேறியாகவோ, வேலைக்கள்ளனாகவோ இருந்ததில்லை. வயதுக்கு மிஞ்சிய வேலை செய்ய உற்சாகத்தைக் காட்டவேண்டிய சந்தர்ப்பம் கூடி வந்தது..

* ஜான் க்ளோ அவர்கள் கோடைக்காலத்தில் 600 ஆடுகளை மேய்க்கும் மிகக்கடினமான பொறுப்புள்ள வேலையைச் செய்யவேண்டிய நிலை வந்தது.

* விடுமுறையில் தன் சகோதரனுக்கு நிலத்தை உழும் வேலையில் உதவி செய்தார்.

இவைகளின் மத்தியிலும் கல்விப்பசியைத் தணிக்க மறந்துவிடவில்லை. க்ளோ பதினான்கு வயதினராக இருந்தபோது தன் வாழ்க்கையின் தெளிவான நோக்கத்தைப் படத்தில் பார்ப்பது போல் உணர்ந்தார். உலகம் அவரை அழைப்பது காதுகளில் எதிரொலிக்கும்படி அவருடைய உள்ளத்தில் அடங்கியிருந்த குணங்கள் ஒன்றுகூடி பொங்கி வெளிவந்தன. க்ளோவும், சகோதரனும் உழுதுவந்த நிலத்தின் சொந்தக்காரி அந்த உள்ளூர் நீதிபதியின் மனைவியாவாள். அவள் இவருக்கு 'Antiquities of Greece' என்னும் ஒரு சிறந்த புத்தகத்தை அன்பளிப்பாக கொடுத்திருந்தாள். அதனை க்ளோ வாசித்த போது, அவருக்குள் அடங்கியிருந்த எல்லா கனவுகளும், அந்த கனவுகளுக்கு ஏற்றாற்போல் புத்திக்கூர்மைகளும் ஏகோபித்துப் பிரவாகித்து வந்தன. அவருடைய வருங்கால விவரங்கள் அனைத்தும் தோற்றமெடுத்தன.

பவுல் எபேசியருக்கு எழுதும்போது தேவன் தம் சித்தத்தை நிறைவேற்றும் பொருட்டு உலகத்தோற்ற முதற்கொண்டே மக்களை தெரிந்துக்கொண்டு தம் நோக்கத்திற்கேற்றப்படி உருவாக்கி வருகிறார். *"அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர்"* *(ஏசா* 28:29) ஒவ்வொரு படியிலும் செயலாற்றும் கர்த்தர் முன்பாகவே ஆயத்தப்படுத்துகிறார். க்ளோ

திடசரீரம், கடின உழைப்பு, பசி, பட்டினி, ஏழ்மை, விசுவாசம் நிறைவேறும் கனவு காண்பது, போன்றவற்றிற்கு ஏற்கனவே பயிற்சி அளிக்கப்பட்டவராயிருந்தார்.

குடும்பத்தினரின் கடின உழைப்பினால் நான்கு ஐந்து ஆண்டுகளில் முழுக்குடும்ப நிலையும் முன்னேற்றம் அடைந்தது.

வாலிப நாட்களில் க்ளோ, *"நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஸ்டிகரை நினை"* (பிர. 12:1) என்பதைத் தவறாக எடுத்துக்கொண்டு சிருஷ்டிகரை நினைத்தார். தன் சகோதரருக்கு அவர் சொன்ன வார்த்தையாவது, "தேவனுக்கு செலுத்த என்னிடத்தில் ஏதாவது பாக்கியிருந்தால் கணக்குச் சீட்டு அனுப்பி வைக்கட்டும், நான் செய்வேனோ இல்லையோ பாருங்கள்," என்றார். ஏனென்றால் அவர் சுயநீதியையே அதிகமாக சார்ந்துகொண்டிருந்தார். தன்னைத்தானே தகுதியுள்ளவனென்று மித மிஞ்சி எண்ணிக்கொண்டிருந்தார். பிரசங்கம் பண்ணு பவர்களை விட தானே நல்லவன் என்றும் சொல்லிக் கொண்டார். மெத்தடிஸ்ட் சபையின் அன்றாட கூட்டங்களுக்குத் தன் சகோதரர்களுடன் செல்ல ஒத்துக் கொள்ளாதவராக இருந்தார். இந்த மனோபாவனையானது வாலிபத்தில் மிகவும் அபாய நிலையின் திருப்பு முனையாயிருந்தது.

இத்தருணத்தில் குடும்பம் இல்லினாய்ஸ் என்னுமிடத்தில் இருந்த சொத்தை விற்றுவிட்டு லோவாவுக்குப் போய் குடியேறியது.

2. தொழில், மற்றும் கர்த்தரிடத்திற்குத் திரும்புதலும்

க்ளோ நில அளவைத்தொழில் செய்யவேண்டியதாயிற்று. க்ளோ குடும்பத்தலைவரான அண்டர்சன் நமது ஜான் க்ளோவின் தகப்பனாருக்கு நெருங்கிய நண்பராவார். அவர் 1853-ல் அரசாங்கத்திலிருந்து நில அளவை டெண்டரை (Survey Tender) பெற்றுக் கொண்டிருந்தார். இந்த வேலைக்குத் திடகாத்திரமாகவும், தடித்துமிருந்த ஜான் க்ளோவின் உதவியை அவர் பெற்றுக் கொண்டார். மாதச் சம்பளம் 25 டாலராகும். தன்

மகனை இந்தக் கடினமான வேலைக்கு அனுப்ப தகப்பனாருக்குப் பிடிக்கவில்லை. அது பல மைல் கணக்கில் நடந்து சென்று செய்யவேண்டிய வேலையாயிருந்தது. விருப்பமில்லாமலேயே மகனை அனுப்பிவைத்தார். பின்பு அவர் சர்வேயராக 4 ஆண்டுகாலம் வேலை செய்து கை நிறைய பணம் சம்பாதித்துக் கொண்டார். இந்த சர்வேயர் அனுபவம் பிற்காலத்தில் இந்தியாவில் உதவியாயிருக்கும் என்பதை அவர் அப்பொழுது நினைத்திருக்கமாட்டார். இந்த மெய் சிலிர்க்க வைக்கும் அவருடைய அனுபவங்களைத் தொடர்ந்து வாசிப்போம்.

ரோமர்: 11:33-36 -ல் இப்படிச் சொல்கிறது. *'ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத் தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? தனக்குப் பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக்கொடுத்தவன் யார்? சகலமும், அவராலும் அவர் மூலமாயும், அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.'* ஆம். தேவன் க்ளோவை மிக அதிக அளவில் பயன் படுத்துவதற்காக அவருக்கு அத்தனையான விசேஷப் பயிற்சியளித்து வந்தார். ஜான் க்ளோ கல்லூரியில் சேர்ந்துபடிக்கவேண்டுமென்னும் ஆசையை தன் எஜமானான அண்டர்சன் அவர்களுக்கு தெரியப்படுத்தினார். தனது நாற் பதாவது வயதுக்குள் தான் ஒரு பெரிய வழக்கறிஞராகவேண்டும், லோவாவில் மிகப்பெரிய செல்வந்தனாக மாறவேண்டும் என்னும் வாஞ்சை தனக்குண்டு என்று சொல்லுவார்.

அந்தகாலத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான பல் கலைக்கழகங்கள் இருக்கவில்லை. சில சபைகள் கல்வி நிறுவனங்களை நடத்திக்கொண்டிருந்தன. ஒவ்வொரு கிறிஸ்தவ குழுவும் தன் சொந்த பள்ளிக்கூடங்களைக் கொண்டிருந்தன. அந்தந்த வகுப்பினருக்கு மட்டும்தான் அந்தப் பள்ளிக்கூடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. க்ளோவின் எஜமான் அண்டர்சனின்

நெருங்கிய நண்பரான J.J. ஜான்சன் லோவாவின் பர்லிங்டன் என்னுமிடத்தில் பாப்டிஸ்ட் கல்லூரியொன்றை ஆரம்பித்திருந்தார். இப்படியாக க்ளோவின் ஆசை நிறைவேறும்படி கல்லூரி படிப்பை முடிக்கத் தேவனுடைய அற்புதமான கரம் அவருடைய ஜீவியத்தை உருவாக்குவதைக் காணமுடிகிறது.

க்ளோ பல்கலைகழகத்தில் சேர்ந்தபோது, அவர் தங்கியிருந்த அறையில் A. D. மெக் மைக்கல் என்பவரும் இருந்தார். அவர் தேவ பயமுள்ள உண்மையுள்ள ஜெப வீரராயிருந்தார். பிறகு வந்த நாட்களில் அவர் பசிபிக் கரையோரப் பகுதிகளில் உண்மையானதொரு உள் நாட்டு மிஷனெரியாக பல ஆண்டுகள் உழைத்தார்.

ஆரம்பத்தில் க்ளோ அவருடன் ஜெபத்தில் கலந்து விடக்கூடாதென்று விழிப்புடன் இருந்தார். ஆன்மீகக் காரியங்களில் தனக்கு நம்பிக்கையில்லை என்று மனந்திறந்து சொல்லியிருந்தார். இருந்தாலும் மெக் தன் ஜெபத்தில் க்ளோவின் பெயரை அடிக்கடி சொல்வதைக் கவனித்தார்.. இவருடைய சக மாணவன் J. B. நைட் தீர்க்கதரிசன வரத்தைப் பெற்றிருந்து க்ளோ வருங்காலத்தில் ஒரு மிஷனெரியாக வரப்போகிறார் என்று உரைத்திருந்தார்.

சில நாட்கள் சென்ற பின்பு, அந்த ஸ்தாபன அத்தியட்சகரான டா. ஆலன் ஓய்வுநாள் வேதாகம பாடசாலைகளுக்கு வர அவருக்கு அழைப்பு கொடுத்தார். அங்கு சென்ற பின்பு பல தேவ மனிதர்களையும், விசுவாச வீரர்களென்று பெயர்பெற்ற மகான்களையும் அறிமுகப் படுத்திக்கொண்டார். பலர் அவரை தங்களுடைய வீடுகளுக்கு வரும்படி அழைப்பு விடுத்தனர். இப்படி மெத்தடிஸ்ட் மற்றும் பாப்டிஸ்ட் சபையினரின் நட்பு அவரை ஆன்மீகக் காரியங்களில் ஈடுப்படச்செய்தது. ஆராதனைகளில் J.J. ஜான்சனின் பிரசங்கங்களால் அவருடைய மனது இழுக்கப்பட்டுவிட்டது. ஆன்மீக விஷயங்களில் அவருக்கு இருந்த வெறுப்பு வரவர குறைய ஆரம்பித்தது. பின்பு இடைவேளைகளில் தேவனுடைய வார்த்தையை வாசிப்பதிலும், ஜெபிப்பதிலும் குழுக்களில் பங்கு கொண்டார்.

அந்த நாளும் வந்தது.

குறிப்பிட்ட அந்த நாளில் மெக் மைக்கல் அவர்களுடன் தனது வாழ்க்கையில் முதன் முதலாவதாக முழங்கால் படியிட்டு ஜெபிக்கலானார். சரீரத்தில் பொங்கி எழும்பும் இளவாலிப பலத்தையும், கஷ்டங்களில் பழகிப்போன திடகாத்திர சரீரத்தையும் கொண்ட சுயநீதியுள்ள மனிதனுக்குள் இருந்த அனைத்தும் தேவனுடைய அமோக வல்லமையுள்ள பிரசன்னத்தில், அவருடைய அன்பின் மூலமாக கரைந்து போய்விட்டது. அன்று க்ளோ முற்றிலுமாக கர்த்தருக்கு தன்னை ஒப்புக்கொடுத்துவிட்டார். மெக் மைக்கல் அவர்களும், க்ளோவும் கூடி தேவ வசனத்தை பயிற்சி செய்ய ஆரம்பித்தார். டா. ஜான் சனுக்கு இது தெரியவந்த போது, "வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்.11:28) இந்த வசனத்தை அடிப்படையாகக் கொண்டு ஜான் க்ளோவுடன் பேசினார். இயேசு தான் இரட்சகர் என்னும் அவருடைய விசுவாசம் திடப்படுத்தப்பட்டு தன் இருதயத்தை விசுவாசத்தால் நிலைப்படுத்திக் கொண்டார். அது ஒருக்காலும் குறையாதப்படி அதிகரித்துக்கொண்டு வந்தது. டா. ஜான்சன் க்ளோவுக்கு 1858 பெப்ரவரி 11ஆம் நாள் ஞானஸ்நானம் கொடுத்தார்.

ஞானஸ்நானம் பெற்றபின் ஒரு நாள் இரண்டு ஊழியர்கள் க்ளோவிடம் வந்தார்கள். "குளோ சுவிசேஷ ஊழியம் செய்யவேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது, இதனைத் தெரிவிக்க தேவ ஆவியானவரால் ஏவப்பட்டு வந்துள்ளோம்" என்று சொன்னார்கள். ஆனால் க்ளோ அதற்கு அதிக அக்கறை செலுத்தவில்லை. சுவிசேஷ ஊழியத்திற்கு தன்னை ஒப்புக் கொடுக்க அவர் மனதில் இடங்கொடுக்கவில்லை.

நாட்டில் பொருளாதார நிலைமையில் சிக்கல் ஏற்படவே அவர் மிகவும் கஷ்டப்பட்டு சம்பாதித்த அனைத்தும் காற்றில் அடிக்கப்பட்டு சென்றுவிட்டது போலாயிற்று. அதிகமான சோர்வுடன் க்ளோ கல்லூரிப் படிப்பை நிறுத்திவிடவேண்டுமென யோசித்துக் கொண்டிருந்தார். அந்த சமயத்தில் லோவா கல்வி நிறுவனம் அவருக்கு உதவ முன்வந்தது. கல்விக்

கட்டணத்தையும், வீட்டு வாடகையையும் செலுத்தும் பொறுப்பேற்றுக் கொண்டது. திடகாத்திரமான க்ளோ தாராளமாக உணவு பொருட்களை உட்கொள்பவனாயிருந்தார். ஆனால் இப்பொழுது வெறும் ரொட்டி, சிறிதளவு வெண்ணை மற்றும் ஆப்பிள் பழங்களை மட்டும் உண்டு நாட்களைக் கழித்தான் தேவைகளுக்காக பெற்றோர்களிடமாவது, உறவினர்களிடமாவது சென்று உதவி கேட்கவில்லை.

அவ்வேளையில் அவருடைய பேராசிரியர் ஒருவர் தன் வீட்டுவேலைக்கு க்ளோவை அழைத்தார். சம்பளத்திற்குப் பதிலாக அவருக்கு ஆகாரம் மட்டும் தரப்படுமென்று அவருக்கு சொல்லப்பட்டது. இப்படியாக அவருடைய கல்விக்கால முழுவதும் அவர் அங்குதான் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். ஆரம்பமுதல் படித்து முடிக்கும்வரை லோவா மாநிலத்தில் மிகவும் கஷ்டத்தில் வாழ்க்கை நடத்த வேண்டியதாயிற்று. இதுவும் கர்த்தர் தம் ஊழியரை ஆயத்தப்படுத்தும் ஒரு வழியாயிருந்தது. சில ஆண்டுகளுக்குப் பின்பு ஆந்திரா மாநிலத்தில் அனைத்து வகுப்புகளில் படிக்கும் உபத்திரவம் எதிர்ப்புகளின் பின்னணியில் வளரும் பசிபட்டினியால் வாடும், பிள்ளைகளை சரியாக புறிந்து கொள்ள தேவையான பயிற்சியை தேவன் முன்கூட்டியே க்ளோவுக்கு அவருடைய அனுபவங்களின் மூலமாக கற்றுக்கொடுத்தார்.

ஞானஸ்நானம் முடிந்தவுடன் க்ளோ சபை ஊழியங்களில் ஈடுபட்டார். தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளிகளின் வீடுகளுக்கு சென்று தங்கள் குழந்தைகளை ஓய்வுநாள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்க கட்டாயப்படுத்திவந்தார். அவருடைய சபை சுவிசேஷ ஊழிய நோக்கமுடையதாயிருந்தது. பிரசங்க பீடத்தின் இருபக்கங்களிலும் உலகப்படம் தொங்க வைக்கப்பட்டிருந்தது. மாதமொருமுறை டா. ஜான்சன் சுவிசேஷ ஊழியத்தைப்பற்றி பேசுவார். ஒரு முறை டா. S.M. ஓஸ்கூட் அவர்கள் பர்லிங்டன் என்னும் இடத்தில் சுவிசேஷ ஊழியத்தைப்பற்றி பேசினார். பின்பு அவர் க்ளோவுடைய அறையிலேயே அவரை சந்தித்துப் பேசினார். அப்பொழுது வெளிநாட்டிற்கு சுவிசேஷகனாக போகும் உள்ளான

அர்ப்பணிப்பின் வாஞ்சை க்ளோவுக்கு ஏற்பட்டது. அன்று கோடைவிடுமுறை நாள். குளோ தன் வாழ்க்கையில் எதிர்கொண்ட சூழ்நிலைகளை நினைவிற்கு கொண்டு வந்து, தேவனுடைய ஞானம் மற்றும் அவருடைய முன்னேற்பாடுகளுக்கு தன்னை ஒப்புக் கொடுத்தவராக அவருடைய வழிநடத்துதலைக் குறித்து யோசித்துக்கொண்டிருந்தார். தன் வருங்காலத்தைப் பற்றி முடிவெடுக்க கர்த்தருக்கு தன்னை முற்றிலுமாக ஒப்புக் கொடுக்க நினைத்துக்கொண்டிருந்த போது ஹாரியட் சண்டர்லாண்ட் அம்மையாரை சந்தித்தார். அந்த சந்திப்பு நட்புக்குள் நடத்தியது. பின்பு அவர்களுடைய நட்பு திருமண நிச்சயமாகுமளவுக்கும் வளர்ந்தது. இதுவும் கர்த்தருடைய சித்தமாயிருந்தது. ஏன் என்றால் ஹாரியட் அவர்களுக்கும் வெளிநாட்டு ஊழியதிற்கு அழைப்பு இருந்தது. இருவருக்கும் 1861 -ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 இல் கர்த்தருடைய சமூகத்தில் திருமணம் நடைபெற்றது.

கல்லூரியில் க்ளோ கணிதப்பாடத்தில் பட்டம் பெற்றார். தனது வாழ்க்கைச் செலவுகளுக்காக அவர் சிறு வகுப்புகளுக்கு பாடம் நடத்தினார். அவருடைய சரீரம் விளையாட்டு பக்கமாக இழுக்கப்பட்டது.

தன்னுடைய கல்லூரி படிப்பை முடித்துக் கொண்டு பட்டம் பெற்றார். ஆனால் இந்த உன்னதமான படிப்பின் பட்டத்தை தன்னிஷ்டப்படி பயன்படுத்த அவருக்கு சுதந்தரம் இருக்கவில்லை. தனக்கு விருப்பமில்லாத வாழ்க்கை முன்னேற்றங்களுக்கு ஒட்டிக்கொள்ளாதவாறு தன் மனதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துகொண்டிருந்தார். அவருடைய வாழ்க்கையையும், வழிகளையும் கர்த்தராகிய கிறிஸ்து உருவாக்கிக் கொண்டிருந்தார். அவருடைய வருங்கால வாழ்க்கையில் தவறேதும் செய்து விடாதபடி கர்த்தர் காத்துக் கொண்டு வந்தார்.

ஆம், தன் வாலிபத்தின் ஆரம்ப காலத்திலேயே அவர் பிசாசைக் கொல்லுவேன் என்று சொன்னவராயிற்றே! தொலைவான நாடுகளின் சமூக, பொருளாதாரம் மற்றும் ஆவிக்குரிய காரியங்களில் ஒட்டியிருந்த அந்த துன்மார்க்கமான சக்தியின் உருவில் வரவிருந்த பிசாசை நொறுக்கிப்போடத் தேவன் அவரை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார். அடிமைத்தனம்,

மோசமான ஜாதிவேற்றுமை மற்றும் தரித்திரத்தில் வாடும் மக்களுக்காகத் தேவன் க்ளோவைத் தெரிந்துக்கொண்டிருந்தார்.

அந்தநாட்களில் இங்கிலாந்துக்கு எதிராகப் போர் நடைப் பெற்றுக் கொண்டிருந்தது. போர்க்களத்தில் மருத்துவ ஊழியத்திற்காக க்ளோ தம்பதிகள் இருவரும் தங்களது பெயர்களை பதிவுசெய்துக்கொண்டார்கள். 24 வயதின் அவரது மனைவியின் குறைவயது காரணமாக அவர்களுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுவிட்டது. குளோவுக்கு இன்னும் தேவனுடைய வார்த்தையை சொல்லும் ஆவல் வரவில்லை. அவருடைய வாஞ்சையெல்லாம் வெளிநாடுகளில் உழைக்கவேண்டு மென்பதுதான். அதற்கான வழிநடத்துதலுக்காக அவர் காத்துக்கொண்டிருந்தார்.

லோவாவில் கோல்ஸ்பர்க் என்னும் ஒரு சிறுப் பட்டணத்தில் ஒரு பொதுப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்ப் பணிக்காக அவர்களிருவருக்கும் அழைப்பு வந்தது. அந்த சிறு பட்டணத்தில் க்ளோ மிகவும் பிரசித்திப்பெற்றார். இந்த புகழ்ச்சி அவருக்கு சிறிதளவாயினும் பிடிக்கவில்லை. அவருக்கு புதிய புகழ்ச்சி ஏதாவது வந்தால் அவரது காதுகளில், "மக்கள் உங்களைப் புகழும் போது உனக்கு ஐயோ!" என்னும் சொற்கள் ஒலிக்குமாம். அவர் போகுமிடங்களிலெல்லாம் அவர் இந்த வசனங்களை இருதயத்தில் காத்துவைத்தவராக அதன்படி நடக்கலானார். தான் இருக்கவேண்டிய இடம் இதுவல்ல என்னும் பலமான உணர்வுடன் நாட்களைக் கடத்தினார். இந்த மனப்பான்மைக்குப் பிறகு வந்த நாட்களுக்கு ஓங்கோல் ஊழியக்காலத்தில் அவருக்கு வந்த புகழ்ச்சிகளை மேற்கொள்ள மிகவும் உதவியாயிருந்தது. அப்படிப்பட்ட புகழ்ச்சிகள் அவரை அரசியல் அரங்குக்குள் குதிக்க அதிகமாகத் தூண்டிக் கொண்டிருந்தது. ரிபப்லிக்கன் கட்சியினர் அவரை, நாட்டை சர்வே செய்யும் இலாக்காவில் வேட்பாளராக நிற்கும்படி செய்தார். பல வாக்காளர்களிருந்தாலும் பிறருடைய இரக்கமற்ற செயல் களால் அதை இழந்துவிடவேண்டியதாயிற்று.

ஆனால் இந்த தேர்தல் க்ளோ அவர்களை இழுத்து விடக்கூடாது என்று கல்லூரி நாட்களிலிருந்து டா. அட்கின்சன் அவர்கள் மவுனமாக ஜெபித்துக் கொண்டிருந்ததாகப் பிறகு

வந்த நாட்களில் தெரியவந்தது. ஏன்என்றால் க்ளோ தூர தேசங்களுக்குச் சென்று சுவிசேஷ ஊழியம் செய்வதாகத் தன்னை ஒப்புக்கொடுத்ததை அவர் அறிந்திருந்தார்.

க்ளோ அவர்கள் குழப்பத்துக்குள்ளானார். ஆசிரியர் வேலைக்கு ராஜினாமா அளித்துவிட்டார். ஆனால் அப்பள்ளிக்கூட இயக்குநர் அந்த ராஜினாமா கடிதத்தை ஏற்றுக்கொள்ளாமல் அவருடைய மனதை மாற்ற முயற்சி செய்தார். எத்தனையோ இடையூறுகளை உண்டு பண்ணினார்.. மட்டுமல்ல எவ்வளவு சம்பளம் வேண்டுமானாலும் தருவதாகவும் வாக்களித்தார் எதற்கும் க்ளோ அசையவில்லை. அவருடைய மனதை மாற்ற மெத்தடிஸ்ட் சபையின் கண்ணியமான ஒரு போதகரை அவரிடம் அனுப்பிவைத்தார். க்ளோ, தன் ஸ்தானம் அதுவல்லவென்று சொல்லி தன் மனக்கிலேசத்தை அவரிடம் பகிர்ந்துகொண்டார். அவருடைய இந்த வார்த்தையைக் கேட்ட போதகர் கண்ணீர் சிந்துமளவுக்கு கலங்கி போனார். அவர் க்ளோவைப் பார்த்து, "க்ளோ அவர்களே, இந்த இருதய வாஞ்சை கர்த்தரிடமிருந்து தான் வந்துள்ளது, ஆகையால் அதன்படியே நீங்கள் செய்யுங்கள்." என்றார்.

3. பணித்தலத்தில்:

ஜான் க்ளோ அவர்கள் தன்னுடைய காரியங்களை டாக்டர்.குளோப்சன் அவர்களுக்கு எழுத்தில் தெரியப் படுத்தினார். டா.குளோப்சன் அமெரிக்கன் பாப்டிஸ்ட் பப்ளிகேஷன் சொஸைட்டியின் மாவட்ட செயலாளராக இருந்தவர்.

க்ளோ அவர்களை டாக்டர். க்ளோப்சன் வட லோவா மாநில உபதேசியராக ஊழியத்தில் அமர்த்தினார். புத்தகங்களை விற்பது, வீடுகளில் ஜெபங்களை நடத்துவது, இவருடைய பணியாயிருந்தது. இந்த வேலை க்ளோவுக்கு மிகவும் பிடித்திருந்தது. அது எப்போதும் சூழ்நிலைக்கேற்ப மாறுபடும் வேலையாயிருந்தது என்று அவர் அறிந்திருந்தார். இந்தியாவின் கிராமங்களை சந்திக்கும் வேலைக்கு இது முன்னேற்பாட்டிற்கு ஆயத்த மாயிருந்தது. பல சபை போதகர்களையும், வெளித்

தலைவர்களையும் க்ளோ சந்தித்து, தான் வெளிநாட்டு ஊழியத்திற்குச் செல்லுவதை உறுதிப்படுத்திக் கொண்டார். சீனாவில் பாங்காக் என்னுமிடத்தில் ஊழியக்காரராயிருந்த டா. டீன் அவர்களின் உதவியாளராக செல்லும் யோசனையும் அவருக்கு வந்து கொண்டிருந்தது. ஆனால் புரியாதத் தடைகள் அவரைத் தடுத்து நிறுத்தியது. இவர் சந்தித்த அனைத்துச் சபை போதகர்களும் அவரை வெளி நாட்டு ஊழியக்காரனாவதற்கு கர்த்தருடைய அழைப்பு உண்டு என்பதைத் திட்டமாகச் சொல்லி அதை உறுதிப்படுத்தினார்கள். சபையின் மூப்பர்களும் தங்களுடைய பொறுப்பைப்பற்றி என்ன செய்யப்போகிறார் என்பதை அறிய க்ளோ காத்துக்கொண்டிருந்தார். இந்த நிகழ்ச்சியானது இந்தியாவின் ஆயிரக்கணக்கான மக்களின் ஞானஸ்நானத்திற்காக உதவியாளர்களைத் தயார்ப்படுத்த அவருக்கு உதவியது.

தனக்காக ஜெபிப்பவர்களையும், பாப்டிஸ்ட் ஃபாரின் மிஷன் சொசைட்டியின் செயலாளர் டாக்டர்.வாரேன் அவர்களுக்குத் தனது பெயரை சிபாரிசு செய்ய வேண்டியவர்களையும் தேடி கண்டுபிடித்தார். டாக்டர். வாரேன் அவர்களுக்குக் கொடுத்த விண்ணப்பம் செயற்குழுக் கூட்டத்திற்கு அனுப்பப்பட்டது. அந்த விண்ணப்பம் விண்ணப்ப கமிட்டியில் தடைசெய்யப் பட்டது, க்ளோ, "ஊழியக்காரர் பயிற்சிக்காக" வேதாகம பள்ளிக்கூடத்தில் சேரும்படி சிக்காகோ சென்றார். டாக்டர். நத்தானியேல் கோவர் அவர்களின் தலைமையில் இருந்த அந்தப் பள்ளிக்கூடத்தில் வேதாகமப் பாடங்களில் பயிற்சி பெற்றார். தான் கிழக்கத்திய நாடுகளில் சுவிசேஷ ஊழியத்திற்கென தன்னை அர்ப்பணித்திருப்பதைப் பற்றி தனது குடும்பத்தினருக்கு அதுவரைத் தெரியப்படுத்தவில்லை. கமிட்டியினர் தன்னை நிராகரித்து விடுவார்கள் என்னும் தயக்கம் அவருக்கிருந்தது. ஆனால் அவருடைய இருதயக் கதறுதல் அவருடைய மனைவிக்கு மட்டுமே தெரியும். ஒரு வேளை தன் சகோதரர்கள் அதை தடுத்துவிடுவார்களோ என்னும் பயமும் அவருக்கிருந்தது.

4. இந்தியா! இந்தியா! இந்தியா! தெலுங்கு நாட்டு சுவிசேஷ ஊழியக்காரராக

க்ளோ அவர்கள் ஊழியம் செய்வதற்காக இந்தியா போகிறார் என்பதை அறிந்த அவரது சகோதர சகோதரிகள் உண்மையிலேயே கலக்கமடைந்தவர்களாய், அவருடைய மனதை மாற்ற முயற்சி செய்தார்கள். ஏனென்றால் அவருடைய குடும்பத்தினர் ஒருவரோடொருவர் நெருங்கின உறவு கொண்டிருந்தனர். இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் அவருடைய தகப்பனாரை அவர் இழந்திருந்தார். க்ளோ இந்தியா செல்வதைப்பற்றி அவருடைய தாயார் எந்த தடையும் வைக்கவில்லை. "என் மகன் சுவிசேஷ ஊழியத்திற்குத் தகுதி பெற்றுள்ளான் என்பதையறிய நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் என் மகனே, நீ உன் மனதை மாற்றிக் கொள்வது மிகவும் கடினமானதென்பது எனக்குத் தெரியும்" என்றார். இந்த சம்பவங்கள் நடைபெற்ற சில ஆண்டுகளுக்குப் பின்பு அவரது சகோதரி, "நீ புறப்பட்டுச் சென்று கண்ணுக்கு மறையும் வரை அம்மா பார்த்துக் கொண்டே இருந்தார், கதவுக்கு வெளியில் வந்து, கைகளை ஆட்டிக் கொண்டே அடுத்த வயல்களில் வேலை செய்பவர்களும் கேட்கும் அளவுக்கு சத்தமிட்டு அழுதுக்கொண்டிருந்தார். அவர்களை சமாதானப் படுத்துவது மிகக் கஷ்டமாயிருந்தது," என்று சொன்ன வார்த்தைகள் அவருடைய உள்ளத்தைக் கலக்கிவிட்டது.

க்ளோ டா.வாரேன் அவர்களை சந்தித்தபோது அவருக்கு மனமுவந்த வரவேற்பு கிடைத்தது. ஏனென்றால் க்ளோவுக்கு டா.வாரேன் மூலமாகத்தான் தெலுங்குதேச ஊழியச் செய்திகள் கிடைத்திருந்தன. க்ளோ டா.வாரேன் அவர்களுடன் சுமார் ஒரு மணி நேரம் பேசமுடிந்தது. அவர் பேசி முடித்து வெளியில் வரும் பொழுது அவருடைய முகத்திலிருந்து, அவர் தெலுங்கு தேச ஊழியத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்ததை தெளிவாகக் கண்டு கொள்ள முடிந்தது. டாக்டர். வாரேன் அவர்களுக்குத் தான் தெலுங்கு தேச ஊழியத்திற்கு தகுதி வாய்ந்தவர் என்பது எப்படி தெரிய வந்தது என்று க்ளோவுக்கு தெரியவில்லை. 1835 - இல்

இந்த ஊழியம் தொடங்கப்பட்டது. அப்பொழுது 'நெல்லூர்' தான் ஊழியக் கேந்திரமாயிருந்தது. 4பேர் சுவிசேஷகர்களும், 30பேர் சபை மக்களுமாக இந்த சபை விளங்கியது. தெலுங்கு தேசத்தில் அவ்வளவாய் கனி காணப்படாததால் கமிட்டியினர் அந்த ஊழியத்தை நிறுத்திவிடவேண்டுமென்று யோசனை செய்து கொண்டிருந்தார்கள்.

நெல்லூரின் வீரனான சுவிசேஷ ஊழியக்காரராயிருந்த டா. ஜெவெட் அவர்களை கமிட்டி தொடர்பு கொண்டு, அப்பகுதியின் பணிகளை நிறுத்திவிடுவதைப் பற்றி பேச்சு வார்த்தை நடத்தினார்கள். ஆனால் டா.ஜெவெட் அதற்கு சிறிதளவும் சம்மதிக்கவில்லை. தெலுங்கு நாட்டில் கர்த்தருக்காகப் பல மக்கள் இருக்கிறார்கள் என்னும் விசுவாசம் அந்த வீர ஊழியருக்கிருந்தது. டா.ஜெவெட் க்ளோ அவர்களுக்கு உடன் ஊழியக்காரராக இருக்கவேண்டியதாய் இருந்தது. இந்தியா புறப்படுவதற்கு முன் க்ளோ அவர்களுக்கு தெளிவான எச்சரிப்புகள் கொடுக்கப்பட்டிருந்தது. அதாவது, "ஒரு வேளை பணநெருக்கடியால் உம்மை நாங்கள் தெலுங்கு தேசத்திற்கு அனுப்பமுடியவில்லை என்றால் என்ன செய்யப்போகிறீர்?" என்று முக்கியமான ஒரு நபர் கேட்டார். க்ளோ அதற்குப் பதிலளித்தார், "நான் அங்கு செல்ல வேறு எதாவது வழியைக் கண்டு கொள்வேன்."

க்ளோ தெலுங்கு சுவிசேஷ ஊழியத்தைப் பற்றி ஒன்றும் அறியாதவராக இருந்தார். அவர் அங்கு மிகுந்த தாழ்மையுடய்ன் அதாவது எவ்வித எதிர்பார்ப்பில்லாத வகையில் அனுப்பப்பட்டிருந்தார் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. அப்படியிருப்பினும் அவர் தன் வசம் ஒப்புவிக்கப்பட்டிருந்த தெலுங்கு மக்களை விட்டுவிட மனமில்லாதவராக இருந்தார். ஒரு முறை பர்மா நாட்டிலுள்ள சீனா மக்கள் மத்தியில் உழைக்க விண்ணப்பித்திருந்தார். ஆனால் அவருக்குப் பதிலாக வேறொருவர் அனுப்பப்பட்டார். அங்கு சென்ற நபர் ஓராண்டுக்குள் மரித்துபோனார் என்று தெரிய வந்தது. அதே இடத்திற்கு க்ளோ அவர்கள் அனுப்பப்பட்டிருக் கலாம், மட்டுமல்லாமல் வேறு பகுதிகளிலும் அவருக்கு வாய்ப்புகளிருந்தன, ஆனாலும் அவர்

தெலுங்கு தேசத்திலேயே பணியாற்றும்படி நியமனம் செய்யப் பட்டார். அவர் அங்கு செல்ல அனுமதி கிடைக்கப்பெற்ற அந்த நிமிஷத்தில் தானே அவருக்கு தெலுங்கு மக்களை நேசிக்கும் இருதயமும் கொடுக்கப்பட்டது.

அந்த வேளையில் ஒரு சில மிஷனெரிகள் யாராவது சுவிசேஷ ஊழியத்திற்கு போகிறார்கள் என்றால் அது ஒரு மிகப் பெரிய காரியமாயிருந்தது. அந்நாட்களில் இந்தியாவைப் பற்றி சிறிதளவு தான் அறியப்பட்டிருந்தது. பிரயாணம் வெகு தூரமாகவும், அதிக சிரமமுள்ளதாகவும் இருந்தது. இந்தியாவை அடைய சுமார் 4 மாதங்களாவது கடற்பிரயாணத்தை மேற்கொள்ளவேண்டும் என்று யாரோ பேசிக்கொள்வதை அவர் கேட்டார், தெலுங்கு தேச உழியம் என்றால் க்ளோ, க்ளோ என்றால் தெலுங்கு தேசம்".

க்ளோ அவர்கள் ஆவிக்குரிய ஒழுங்குகளைக் கடைப்பிடித்திருந்தார். அவர் நில அளவையாளராக வேலை (Surveyor) பார்த்துக் கொண்டிருந்தார். இதனால் விவசாயம் மற்றும் தோட்ட வேலையில் அதிக அனுபவம் பெற்றவராக இருந்தார். நெடுந்தொலைவு தேசமாகிய இந்தியாவில் தேவைக்கேற்ற திடமான மற்றும் கடினமான வேலைகளில் திறமை வாய்ந்தவராயிருந்தார் . இந்தியாவில் ஜாதி, மதப் பெயரில் தோய்ந்து போனவர்களின் மத்தியிலும் கர்த்தர் அவரை மிகவும் ஆழமான விதத்தில் பயன்படுத்த சித்தங்கொண்டிருந்தார். அவர் சுயப்பிரதிஷ்டை மற்றும் சுய கவுரவம் போன்றவற்றை வெறுத்தார். பிறகு வந்த நாட்களிலும் அவர் தமது சுவிசேஷ ஊழியத்திலும், உடன் சுதேசி ஊழியர்கள் மத்தியிலும் கௌரவத்தை எதிர்பார்க்க வில்லை. ஏனென்றால் மதபேதக்காரர்களுக்காகவும், ஏழைகளுக்காகவும் உழைக்கும்படி தம்மை முற்றிலுமாக ஒப்புக்கொடுத்திருந்தார்.

பிரயாண மத்தியில் அவர் தெலுங்கு நாட்டு ஊழியக்காரராக இருந்த டா.லிமென் ஜெவெட் அவர்களை சந்தித்துப் பேசினார். அவர் க்ளோ அவர்களுக்கு தெலுங்கு தேசத்து மக்களைப் பற்றியும், இடங்களைப் பற்றியும் தகவல்களைக் கொடுத்தார். பின்பு அவர் 1864-ஆம் ஆண்டு, நவம்பர் 30-ஆம் நாளில் கப்பல் ஏறினார்.

1865-ஆம் ஆண்டு மார்ச் 26-ல் அன்றைய மதராஸ், (இன்றைய சென்னை) வந்தடைந்தார். அங்கு 3 வார காலம் தங்கியிருந்து பின்பு நெல்லூர் என்னுமிடத்திற்குப் பயணமானார். நெல்லூர் தான் அவருடைய தலைமை ஊழிய ஸ்தலமாக இருந்தது. அந்த இடத்தில் மாட்டுவண்டியைப் பயன்படுத்த வேண்டிதாயிருந்தது. வெயிலின் கொடுமையால் அவர் நாளுக்கு 30 மைல் மட்டும் பிரயாணம் செய்தார். இரவு வேளைகளில் பிரயாணம் செய்து பகல் முழுதும் இளைப்பாறினார். 1865-ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் நாள் அவர் நெல்லூர் வந்தடைந்தார்.

டா.ஜெவெட் தம்மை முற்றிலுமாக ஊழியத்திற்காக ஒப்புக்கொடுத்தவர். மக்கள் அவரை அதிகமாக நேசித்தார்கள். க்ளோவை அவர் முழு ஆதரவுடன் ஏற்றுக் கொண்டார். க்ளோவும் அவரை மிகவும் மரியாதையுடன் அன்பாய் நடந்து கொண்டார். சொந்தத் தகப்பனை நேசிப்பதுப்போல் அவரை நேசித்தார். யாராவது டா.ஜெவெட் அவர்களிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டால் க்ளோ அதை பொறுத்துக் கொள்ள மாட்டார்.

ஒரு முறை ஆற்றங்கரையில் சுவிசேஷ ஊழியம் நடந்து கொண்டிருந்த பொழுது, டா.ஜெவெட் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். ஒரு வாலிபன் ஆட்டம் போட்டு, சிரித்துக்கொண்டு கைகளைத் தட்டிக் கொண்டு இடையூறு செய்து கொண்டிருந்தான். அதிகநேரம் வரை க்ளோவால் அதை சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை. அவர் அந்த வாலிபனின் கழுத்தைப் பிடித்து அவனைத் தூக்கி ஆற்றில் எறிந்துவிட்டார். பிறகு அந்த வாலிபன் ஈரத்துணியோடு வந்து அமைதியாக தேவனுடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

க்ளோ இயல்பாக சாது அல்ல. தனது குருவான இயேசுவின் மேல் அதிக நம்பிக்கை வைத்திருந்தார். ஆயிரக்கணக்கில் தெலுங்கு மக்கள் ஆண்டவருக்குள் வந்து இரட்சிக்கப்படுவார்கள் என்னும் நம்பிக்கை அவருக்கிருந்தது. தற்போதைய ஊழிய முறைகள் மிகவும் மெதுவாக நடைபெறுவதாக அவர் நினைத்தார். ஆகையால் சுயேச்சையாக உழைக்க விரும்பினார். ஆரம்பத்தில் இந்துக்களைப்பற்றித் தவறாக கணக்கிட்டிருந்தார். ஆனால் அவர்

நாட்கள் செல்லச்செல்ல அவர்களின் மேல் பொறுமையுள்ளவராகவும் இரக்கமுள்ளவராகவும் மாறினார்.

டாக்டர் லிமென் ஜெவெட் **D.D.**

30-11-1864 ல் கப்பலேறிய க்ளோ 4 மாத காலம் கடற்பிரயாணம் செய்து, 26-3-1865-ல் சென்னை வந்து சேர்ந்தார். 3 வார காலம் அங்கேயே குடும்பத்துடன் தங்கியிருந்து, பின்பு அந்நாட்களின் ஒரே ஒரு வாகனமாக இருந்த மாட்டு வண்டியில் பயணம் செய்து தமது சுவிசேஷ ஊழிய கேந்திரமான நெல்லூருக்கு 22-4-1865-ல் வந்து சேர்ந்தார். டா.ஜெவெட் அவர்களுடய வழிநடத்துதலின்படியே அவர் சுவிசேஷ ஊழியம் தொடங்கினார்.

டா.ஜெவெட் அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே க்ளோ பல காரியங்களைக் கற்றுக்கொண்டார். சுவிசேஷ ஆர்வமுள்ளவர்களையும், கிறிஸ்துவுக்கு தங்களை ஒப்புக்கொடுத்தவர்களையும், டா.ஜெவெட் தகப்பனைப் போல் நேசித்து வந்தார். அவர் மிகவும் தயவுள்ளவரும், மிருதுவானவரும், இரக்கமுள்ளவருமாயிருந்தார். இப்படி டா.ஜெவெட் மக்களுடன் பழகுவதைக் கவனித்துக் கொண்டிருந்த நேரங்கள் தனக்கு அதிக ஆசீர்வாதமாக இருந்தது என்று க்ளோ சொல்லுவார்.

டா.ஜெவெட் தமது மிருதுவான சுபாவத்திற்குப் பேர்பெற்றவராவார், க்ளோ மிகக்கடினமாக இருப்பவர் என்றும் பெயர் பெற்றார். இப்படி மித மிஞ்சிய குணங்களைப் படைத்த இரு நபர்களும் தெலுங்கு தேசத்திற்குத் தேவைப்பட்டார்கள்.

டா.ஜெவெட் சுவிசேஷப் பிரசங்கத்தின் மேல் மிகுந்த பற்றுள்ளவராக இருந்ததைப் பற்றி பல கதைகள் உண்டு. ஒரு முறை அவர் சந்தை வெளியில் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்.

மக்கள் கூட்டத்திலிருந்து ஒரு முஸ்லிம் வாலிபன் எதிர்பாராத விதமாக திடீரென்று தன் கை நிறைய மணலை கொண்டு வந்து அவர் முகத்தில் தூவி அடித்துவிட்டு ஓடிவிட்டான். டா.ஜெவெட்டோ தம் முகத்தைக் கழுவிக் கொண்டு அவன் பின்னால் சென்று, "வா, மகனே, நான் உனக்கு இயேசுவைப்பற்றி சொல்லித் தருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே அவன் பின்னால் ஓடிக்கொண்டிருந்தாராம்.

க்ளோ புத்தகங்களை வாசிக்கவும், மொழிப்பெயர்ப்பு செய்யவும் நேரங்களைச் செலவிட்டார். அவர் இந்த காரியங்களில் ஈடுப்பட்டிருக்கும் பொழுது, புதிய விசுவாசிகள் யாராவது வந்தால் அவரோடு பேச நேரத்தைச் செலவிட முடியாத நிலைமையை உணர்ந்து கொண்டார். அதனால் எழுதுவதை நிறுத்திவிட்டார். சுவிசேஷம் சொல்லவும், அதனை முழு மனதுடன் செய்யவும் முடிவெடுத்தார். அதே நேரத்தில் தெலுங்கு மொழியைக் கற்றுக்கொள்ளவும் ஆரம்பித்தார். தேவனுக்கு ஊழியம் செய்ய விரும்பி வந்த ஒரு கிறிஸ்தவ வாலிபனை அவர் தனக்குக் குருவாக்கிக் கொண்டார் க்ளோ அவனுக்கு நாளுக்கு ஒரு மணி நேரம் தேவஞானத்தைப் போதிப்பார். இருவரும் தூரமான இடங்களுக்கு காற்றுவாங்க நடைப் பயணம் செல்லும்போது மொழியைப் பற்றி சர்ச்சை செய்துக்கொண்டே போவார்கள். அதன் மூலம் க்ளோவுக்கு கண் திறக்கப்பட்டது. மக்களைச் சந்திக்க அவர்களுடைய மொழியை முதன் முதலாகக் கற்றுக்கொள்வதன் அவசியத்தை உணர்ந்து கொண்டார். இன்றைய ஊழியக்காரர்கள் இதைப் புரிந்துக்கொள்ள வேண்டும். அவர் வழி நெடுக மக்களைச் சந்தித்து தன் விசுவாசத்தைப் பற்றி பேசுவார். தான் தெரிந்து வைத்த தெலுங்கு மொழியில் சந்திகளில் நின்றுகொண்டு மக்களுக்கு பிரசங்கித்தார். சில நாட்களுக்குள் மக்கள் க்ளோ அவர்களைக் கண்டால் உடனே தம் காதுகளை மூடிக்கொண்டு ஓடிவிடுவார்கள். அதற்கு அவருடைய ஆசிரியரான விசுவாசி, "க்ளோ அவர்களை தேவன் தாமே அனுப்பியிருக்கிறார். அவருடைய செய்திகளைக் கேட்டால் கடவுளுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும், ஆகையால் தான் அவர்கள் தேவ வார்த்தையைக்கேட்காமல் ஓடிப்போகிறார்கள்." என்று விவரம் சொன்னார்.

5. துப்பலி இலச்சுமய்யா-முதல் கனி

இவர் தீண்டப்படாதவர்களுக்காகப் பூஜாரியாய் வேலை செய்தவர். 30 கிராமங்களுக்குள் பிரசித்திப் பெற்றவராயிருந்தார். அவர்கள் வணங்கி வந்த தெய்வங்களுக்குப் பயந்து ஏழை மக்கள் அவனுக்கு தங்களுக்குள்ளவைகளையெல்லாம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆகையினால் அந்தப் பூஜாரியானவன் மிகச்செல்வந்தனாயிருந்தான். இப்படியாக அவன் தன் பிராபல்யத்தால் அந்த தெய்வங்களை வணங்கியும், மக்களிடம் ஆதிக்கம் செலுத்தியும் வந்தான். ஆரம்பத்தில் அவன் சுவிசேஷத்தைக் கேட்கும் போது மிகவும் சினங்கொண்டிருந்தான். சுவிசேஷத்தால் கலவர மடைந்து தன் வீட்டுக்கதவுகளை அடைத்து வைத்து தன் மனைவியையும் சுவிசேஷத்தைக் கேட்காதவாறு தடுத்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் முழுவதும் க்ளோ அவர்கள் உட்கார்ந்து கொண்டு அவனுடன் பேசிப்பார்த்தார். அதன் பின்பு 2 மணி நேரம் கழித்து துப்பலி இலச்சுமய்யா மீண்டும் க்ளோ அவரிடம் வந்து தான் இயேசுவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதாகச் சொன்னார். இப்படி தெலுங்கு நாட்டு ஊழியத்தில் துப்பலி இலச்சுமய்யா முதல் கனியானார். 1865-ஆம் ஆண்டு டிசம்பர் 24-இல் இலச்சுமய்யா ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்.

அவனுடைய மனந்திரும்புதலுக்குப் பிறகு, இலச்சுமய்யாவிடம் மக்கள் வந்து தங்கள் விக்கிரகங்களைப் திரும்ப கொடுத்து விடும்படி தொந்தரவு செய்ய ஆரம்பித்தார்கள். ஏனென்றால் அந்த தெய்வங்களுக்கு காலாகாலத்திற்கு அவைகளுக்குரிய பூஜைகளைச் செலுத்தாவிட்டால் வீட்டு ஆடுமாடுகள் சாவது, விளைச்சல்கள். அழிவது, பலவித நோய்கள் தாண்டவமாடுவது-இப்படிப்பட்ட கஷ்டங்கள் உண்டாகும் என்பது அவர்களுடைய நம்பிக்கையாயிருந்தது. தரவில்லையென்றால் பலவந்தமாக விக்கிரகங்களை எடுத்துக் கொள்வதாக மிரட்டினார்கள். அதைக் கேட்டு இலச்சுமய்யா தன் உயிருக்கு ஆபத்து என்று பயந்து பாதுகாப்புக்காக க்ளோ அவர்களிடம் ஓடினான். க்ளோ அவர்களின் நண்பரான ஒரு போலீஸ் அதிகாரியின் ஆலோசனைப்படி அவரும் இலச்சுமய்யாவும் தனியாக இரவு வேளையில் வெளியில் நடமாடாமல் போலீஸ் பாதுகாப்புக்குள் இருந்தார்கள்.

6. கைப்பிரதிகள்

அந்நாட்களில் பிராமணர்களல்லாதவர்களில் படிப்பறிவுள்ளவர் மிகக்குறைந்த எண்ணிக்கையில் இருந்தார்கள். சரியான முறையில் இலக்கணத்தின் படி தெலுங்கு மொழியைக் கற்றுக்கொள்ளும் வரையிலும் க்ளோ காத்திருக்கவில்லை. முதலில் யோவான் 3:16- இவ்வசனத்தை மனப்பாடமாகக் கற்றுக் கொண்டார். கிராமத்தெருக்களில் மக்களைக் காணும்போது, அவர்களுக்கு மனப்பாடம் செய்துவைத்த வசனத்தைச் சொல்லுவார், கைப்பிரதிகளை விநியோகம் செய்தார், அவர் சந்தித்த பல மக்கள் படிப்பில்லாதவர்கள் என்று அறிந்து கொண்டார். அப்படிப்பட்ட மக்களுக்குத் தன் பாக்கெட்டிலிருந்து, ஒரு ரூபாய் நாணயத்தைக் கொடுத்து படிக்கத் தெரிந்தவர்களுக்கு அதைக்கொடுத்து படிக்கச் செய்யுங்கள் என்று சொல்லுவார்.

ஜான் எவரெட் க்ளோ தெருக்களில் பிரசங்கம் பண்ணினார். "நான் மக்களை நேசித்தேன். இயேசுவைப்பற்றி மிகத் தெளிவான மொழியில் சொன்னேன். அவர்கள் நான் சொன்னதை நம்பினார்கள். மக்கள் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும் நான் இயேசுவின் இரட்சிப்பைப்பற்றிச் சொல்லும்போது அதை நம்பினார்கள். அதற்காகவே முன் வந்தார்கள்.



Clough preaching in streets

"I loved them. With a simple message. I preached about Jesus Christ. They belived what I preached. Whether it is a small or big crowd, when I preached about salvation from Jesus they belived and came farward."

சிறிது காலத்திற்குள் நெல்லூரில் இந்த கைப்பிரதிகள் எல்லா இடங்களிலும் காணப்பட்டு. வியாபாரிகள் பொருட்களை விற்கும்போது, கைப்பிரதிகளையும் சேர்த்துக்கொடுப்பார்கள். சுவிசேஷம் செல்லாத எல்லா வீடுகளுக்கும் இப்படி இரட்சிப்பின் செய்தி சேன்றடைந்தது. அதை வாசித்தவர்கள் எத்தனையோ பேர் ஆண்டவரை ஏற்றுக் கொள்ள முடிந்தது. அந்த தெலுங்கு ஆசிரியரின் உதவியால் க்ளோ “நீஎங்கே போகிறாய்?” என்னும் கைப்பிரதிகளை எழுதினார். இந்த கைப் பிரதிகள் சுவிசேஷகர்கள் கரங்களில் ஒரு பெரிய வல்லமையான கருவியாக பயன்படுத்தப்பட்டது. ஊர் உற்சவங்களிலும், பண்டிகைத் திருவிழாக்களிலும், மேளங்களிலும் இந்த கைப்பிரதிகள் விநியோகம் செய்யப்பட்டன. கைப்பிரதிகளின் பெரிய கட்டுகளை வழியோரங்களில் வைத்துக் கொண்டு, உச்சத் தொனியில் பாட்டுகளை பாடியபடி அந்த சத்தத்தில் மக்களின் கவனத்தை இழுத்து அவர்களுக்கு கைப்பிரதிகளை வழங்கினார். ஒவ்வொரு ஞாயிறும் பிற்பகலில் ஒவ்வொறு கிராமங்களையும் சந்தித்தார்கள். மொழிப்பெயர்ப்பின் மூலம் அவர்களுக்கு தேவசெய்தி கொடுக்கப்பட்டது. மக்களின் ஆர்வத்தைக் கிளப்பும் திறமையை அவர் கொண்டிருந்தார். பொதுவாக கிராமத்தின் நடுவில் இருந்தவாறு அவர் மக்களை குடிசைகளிலிருந்து வெளியில் வரச்செய்வார். தன் திறமையினால் மக்களை சிரிக்கவும் வைப்பார். இப்படி பல வழிகளில் அவர் மக்கள் மனதைக் கவர்ந்து ஊழியம் செய்தார். அவர் அழைக்கும் போது யாராவது வரவில்லை என்றால் அந்த வீட்டுக்குள் புகுந்து அந்த நபரை வெளியில் இழுத்துக் கொண்டு வந்துவிடுவார். அந்த நேரமானது அனைவருக்கும் மகிழ்ச்சிகரமான நேரமாயிருந்தது. தமாஷான, மற்றும் வேடிக்கை யான அவருடைய பேச்சுகள் யாவும் அவர் பயன் படுத்தின அம்புகளாயிருந்தன. ஆரம்பத்தில் அவர் இந்தியாவில் உழைத்தபோது இப்படியே தம் திறமையை முழுவதுமாகவே உபயோகித்தார்.

7. எதிரிகளின் மத்தியில் பெரிய அறுவடை

கிறிஸ்துவுக்குள் ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் காரியத்தில் டா.ஜெவெட் அவர்களும், க்ளோவும் மிகப்பெரிய அறுவடையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள். பல தெலுங்கு மக்கள் மந்தைக்குள் வரவேண்டும் என்று அவர்கள் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த ஜெபமானது கேட்கப்படாதவாறு தோன்றிற்று. க்ளோ மிகவும் முறட்டுத்தனமாக பேசுவார் என்பது அந்த சுவிசேஷகர்களுடைய கருத்தாயிருந்தது.

ஆரம்பத்தில் நூறு பேராவது இரட்சிக்கப்பட வேண்டுமென்று க்ளோ ஜெபித்துக்கொண்டிருந்தார். ஆனால் அந்த ஜெபம் கேட்கப்பட்டதாக அவருக்குத் தெரியவில்லை. அதைப்பற்றி அவர் டாக்டர்.வாரேன் அவர்களுக்கு எழுதியதாவது, 'இந்தப் பெரும்சுமையைச் சுமக்க எங்களுக்கு விசுவாசப் பெலன் போதவில்லையெனத் தெரிகிறது'. அதற்கு டா.வாரேன் அளித்த பதில், 'நீங்கள் நூறு ஆத்துமாக்களுக்காக மட்டும் கேட்கிறதென்ன? ஆயிரம் ஆத்துமாக்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்' என்றார். இதற்குப்பின் இரண்டு மதங்களில் இரண்டு ஊழியக்காரரர்கள் உழைக்குமிடத்தில் ஒரு ஆத்துமாவுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. அந்த நபர் முப்பது ஆண்டுகள் உழைத்து ஆயிரத்திற்கும் அதிகமான ஆத்துமாக்களை கர்த்தராகிய இயேசுவிடம் கொண்டுவர முடிந்தது. டா.வாரேனிடமிருந்து கடிதம் கிடைக்கப்பெற்ற 12 மாதங்களுக்குப்பிறகு, இரு வாலிபர்கள் ஞானஸ்நானம் பெற்று ஆயிரக்கணக்கான ஆத்துமாக்கள் கர்த்தரை ஏற்றுக்கொள்ள வழியாயிற்று.

இந்த சமயத்தில் க்ளோ கசப்பான சம்பவத்தைக் கடக்கவேண்டியதாயிற்று. நெல்லூரில் பிராமணர்களின் எண்ணிக்கையும், ஆதிக்கமும், அதிகாரமும் அதிகமாயிருந்தது. இதுவரை அவர்களுக்கு சுவிசேஷம் சொல்லப்படவில்லை. கர்த்தரை ஏற்றுக் கொண்டவர்களனைவரும்

தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தார்கள். பல பிராமண வாலிபர்கள் க்ளோவிடம் ஆன்மீகக் காரியங்களைப்பற்றி பேச வருவார்கள். அவர்களில் இருவாலிபர்கள் தொடப்பட்டார்கள். மேற்கத்திய மக்களுடன் பேசுவது அவர்களை மிகவும் கவர்ந்தது. இரண்டாவதாக அந்த வெள்ளை மனிதனின் செய்தியால் இழுக்கப்பட்டார்கள். அவர்கள் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமானார்கள், நாளும் குறிக்கப்பட்டுவிட்டது. இந்தச் செய்தி நெல்லூர் முழுவதும் காட்டுத்தீபோல் பரவியது. இந்த இருவாலிபர்களின் குடும்பத்தினர் செய்வதறியாது திகைத்தனர். அவர்கள் நெல்லூரின் தாசீல்தாரிடமிருந்து எந்த பிராமணனும் சுவிசேஷகர்களின் வீட்டுப்பக்கம் போகக்கூடாதென்ற கட்டளையைப் பெற்றுக் கொண்டு ஊரெல்லாம் அதனைத் தெரியப்படுத்திவிட்டனர். ஒரு வாலிபனை அவன் குடும்பத்தினர், மிகத் தொலைவான இடத்திலிருக்கும் தங்களது உறவினரின் வீட்டுக்கு அனுப்பிவைத்துவிட்டனர். மற்றொருவன் உபத்திரவத்திற்கு ஆளாகவேண்டியதாயிற்று. அடுத்து நடைபெறவிருந்த இரத்தஞ்சிந்துதலுக்கு வழியமைந்து விடுமோவென்று பயந்துவிட்டதால் தாசீல்தார் விடுத்த கட்டளையை எதிர்த்து ஒன்றும் செய்யமுடியவில்லை. இந்தச் சம்பவத்தால் க்ளோ நெல்லூரில் பிராமணர்களின் உண்மை நிலையை அறிந்துகொள்ள முடிந்தது. அவர்களுடைய அதிகாரம், ஆதிக்கம் மற்றும் அதன் நிலைமையைக் க்ளோ புரிந்து கொண்டார்.

8. ஒங்கோலுக்கு அழைப்பு

காரியங்கள் இப்படி நடந்துகொண்டிருக்கையில் சுவிசேஷகருக்கு வை.பெரியா என்னும் நபரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. இவர் ஒங்கோலின் ஒரு பெரிய இயக்கத்தின் முன்தூதனாவார். அவர் ஒங்கோலுக்கு சுவிசேஷம் சொல்ல வர வேண்டுமென்னும் அழைப்பு அந்த கடிதத்தில் இருந்தது. வை.பெரியா என்பவன் தாழ்த்தப்பட்ட, தீண்டப்படாத வகுப்பைச்சேர்ந்தவன், தோல் பதனிடும் தொழில் செய்பவனாக இருந்தவன். இந்த வகுப்பினர் மற்றெல்லா ஜாதியினருக்கும்

அடிமை வேலையாட்களாயிருந்தார்கள். அவர்கள் கொடிய தரித்திரர்களும், அஞ்ஞானிகளும், புறக்கணிக்கப்பட்டவர்களுமா யிருந்தார்கள். அது வரையில் நெல்லூர் சபையில் கீழ்ஜாதி மக்கள் யாரும் இருந்ததில்லை. ஒரு முறை அவன் எல்லூரு என்னும் இடத்திற்கு சென்றிருந்த போது Rev.Alexandar அவர்கள் கொடுத்த சுவிசேஷத்தைக் கேட்டறிந்திருந்தான். Rev. Alexander சர்ச் ஆப் இங்கிலாந்து (Church of England) சபையின் சுவிசேஷகராயிருந்தார். இந்த சுவிசேஷகருக்கு நெல்லூரில் சுவிசேஷக்கேந்திரமிருந்ததை அறிந்திருந்தார். அவர் வை.பெரியாவிடம் சென்று, ஒருவேளை அந்த வெள்ளை மனிதர் ஓங்கோலுக்கு வந்து, அவனுடைய ஜனங்களுக்கு சுவிசேஷத்தைச் சொல்லக்கூடும் என ஆலோசனைக் கொடுத்தார்.

டா. ஜெவெட் மற்றும் க்ளோ அவர்களும் குழப்பத்திற்கு ஆளானார்கள். தீண்டாதவர்களைச் சேர்த்துக்கொள்வதினால் சந்திக்கவிருந்த பிரச்சனைகளைப் பற்றி யோசனை செய்தவர்களாய் பயந்துவிட்டார்கள். பின்பு, இதைப்பற்றி குழப்பமடையாதிருப்பதே நலமென தீர்மானமெடுக்க பரிசுத்தாவியானவர் உதவி செய்தார். இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்தவர்களனைவரையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய தங்கள் கடமையை உணர்ந்து கொண்டார்கள். இந்தத் தீர்மானம் முழு ஆந்திரா சபைச்சரித்திரத்தையும் மாற்றியது. பெரியாவுக்கெனத் திறக்கப்பட்ட கதவு அவனுடைய ஜாதியினர் ஆயிரமாயிரம் பேருக்கும் திறக்கப்பட்ட கதவு என்பதைக் க்ளோ அப்பொழுது அறியாதிருந்தார். அல்லது அந்த தீண்டப்படாதவர்களுக்கு திறக்கப்பட்ட கதவு வேறு ஜாதியினருக்கு மூடப்பட்டு விடும் என்பதை நினைக்கவில்லை.

இப்படி ஊழியக்காரர்கள் இருவரும் ஓங்கோலுக்கு தமது கேந்திர ஸ்தானத்தை மாற்றிக்கொள்ள முடிவெடுத்தார்கள். க்ளோ நெல்லூர் சூழ்நிலைகளுக்கு ஒத்துபோகக் கூடியவர். ஆகையால் டா. ஜெவெட் அவர்கள் க்ளோவை நெல்லூரிலேயே விட்டுவிட்டு தாமே ஓங்கோலுக்குப் போக முடிவு செய்தார். போக்குவரத்து மற்றும் செய்தித்தொடர்பு வசதிகளுக்கெல்லாம் ஓங்கோல் சரியான இடமென்று தீர்மானித்து ஓங்கோலையே தன் கேந்திர

இடமாக்கிக் கொள்ள யோசனை செய்தார். அங்கு அவர் பெரியாளையும் அவனுடைய மனைவியையும் சந்தித்து அவர்களுக்குத் தேவையான வழிமுறைகளைச் சொல்லிக்கொடுத்தார்.

பெரியாவின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களை அவனுடைய ஜனங்கள் கவனித்தார்கள். அவனுடைய புதிய விசுவாசத்தைப் பற்றி அறிந்து கொள்ள அவர்கள் வாஞ்சித்தார்கள். டாக்டர்ஜெவெட் உள்நாட்டு ஊழியக்காரர்களை கிராமத்திற்கு அனுப்பி, அங்கு சுவிசேஷத்தைச் சொல்ல ஏற்பாடு செய்தார்கள். அவர்கள் அந்தக் கிராமத்தில் 200க்கும் அதிகமாக மக்கள் விசுவாசத்திற்குள் வந்துள்ளதாக அறிக்கைக்கொடுத்தார்கள். இவைகளையெல்லாம் கேட்டு க்ளோ தாமாகவே ஓங்கோலுக்குப் போக விரும்பினார். தலைமைக் கேந்திரத்திலிருந்து ஒப்புதலைப் பெற்றுக் கொண்டு, நெல்லூரை விட்டு தன் குடும்பத்துடனும், 3 உள்நாட்டு சுவிசேஷகர்களுடனும் ஓங்கோலுக்குப் புறப்பட்டுச் சென்றார். 1866-ஆம் ஆண்டு செப்டம்பர் 17-இல் அவர்கள் ஓங்கோல் வந்து சேர்ந்தார்கள்

9. ஏழைகளின் பரிதாப நிலைமை, புறக்கணிக்கப்பட்டவர்களின் நண்பரானார் க்ளோ.

க்ளோ அவர்களின் கதை என்றால் சமூக ஊசலின் கதையாகும். ஏழைகளையும் துயரத்திலுள்ளவர்களையும் உயர்த்த தம் பிராணனையும் அர்ப்பணித்த மனிதனின் கதை. தீண்டப்படாதவர்களின் அவல நிலைமை அந்நாட்களில் மிகவும் பயங்கரமாக இருந்தது. இது இந்துத்துவத்திற்கு சாபமாக இருந்தது. அவர்களுடைய ஏழ்மையைக் காட்டிலும், சமுதாயத்தின் கீழ்மட்டத்திற்குள் தள்ளப்படுவதைக் குறித்து அதிகமாக உழைக்க வேண்டியதாயிருந்தது. அவர்கள் அடிமைத்தனத்திலிருந்தார்கள். கிராம வாழ்க்கையில் அவர்கள் ஊரைவிட்டு தொலைவிலிருந்த மஜூரா என்னும் தனிக்கிராமத்திலிருக்க வேண்டியிருந்தது அவர்கள் தோல்

பதனிடும் தொழில் செய்பவர்களாயிருந்தார்கள். இந்து மக்களுக்கு இது ஒரு மாசுப்படுத்தும் தொழிலாகும். தீண்டப்படாத இம்மக்கள் மற்ற வகுப்பினர் செய்யாத வேலைகளை இவர்கள் செய்து வந்தார்கள். அவர்கள் அனைவரும் அருந்ததி வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மிதிபட்டவர்களும், கொடும் துயரத்தில் சிக்கியவர்களுமாயிருந்தார்கள். மிக மோசமான இந்நிலைமையில் அம்மக்களுக்கு உதவி செய்பவர்கள் யாரும் இருக்கவில்லை.

இந்த தாழ்த்தப்பட்ட ஜாதியினருடன் யாராவது சேர்ந்து கொண்டால் அவர்கள் உயர்ஜாதி மக்களை இழக்க வேண்டிவரும் என்று க்ளோவின் மிக நெருங்கிய நண்பர்கள் அவரை எச்சரித்து வந்தார்கள். தன் சொந்த ஊழிய ஸ்தாபனத் தாரும் இந்த தீண்டப்படாத மக்கள் மத்தியில் உழைக்க விரும்பவில்லை. மற்ற ஜாதியினரின் மத்தியிலும் தங்களுடைய நேரத்தை செலவிடவேண்டும் என்று ஆலோசனை சொன்னார்கள். க்ளோ இந்த ஜாதியினருக்கு துணை நின்றால் மற்ற ஜாதியினரை சந்திக்கத் தடை ஏற்படும் என்றும் அவரைத் தடுத்தனர். ஆனால் அவருடைய திடமான முடிவு "ஓங்கோல் ஊழியம், தீண்டப்படாதவர்கள் மத்தியில்" என்று சரித்திரத்தில் பதிவாயிருந்தது. க்ளோ "தீண்டப்படாதவர்களின் நண்பன்," "கீழ் ஜாதியினரின் துரை" என்றழைக்கப்பட்டார். இந்த சமுதாயத்துடன் சேரவும், அம்மக்கள் தன்னை அடையாளம் கண்டு கொள்ளவும் இது ஒரு அம்பு வேகத்தில் திறக்கப்பட்ட வழியாயிற்று. இது அம்மக்களுக்கு சுய மதிப்பைப் பெற்றுக்கொள்ள உதவியது. மட்டுமல்ல பல வகுப்பினருடன் அவர்களுக்கு சமத்துவம் கிடைக்க உதவியது.

அனைவரும் தேவ பிள்ளைகள் என்பதைப் பறைசாற்ற க்ளோ ஒருபோதும் களைத்துப் போகவில்லை. அவர்களுடைய அழுக்கு நிறைந்த குடிசைக்குள் புகுந்து அவர்களை அணைத்துக் கொண்டு, அவர்களுடன் உணவருந்தி, பழகத் தயங்கவில்லை. பெரியாவைப்போலுள்ள பலர், அவருக்கு நெருங்கிய நண்பர்களானார்கள். தன்னைக் கீழ் மட்டத்திற்கு நடத்தும் அவர்களுடைய தலைமுறைச் சம்பிரதாயப் பழக்கங்களை நிறுத்த முயற்சி செய்தார். அப்படிப்பட்ட பழக்கங்களில் ஒன்று:-

இறந்துப்போன மிருகங்களின் இறைச்சியை புசித்தல். உயர் ஜாதி மக்களின் ஆடுமாடுகள் வியாதியினாலோ, பசியினாலோ, வயதடைந்தோ இறந்துவிட்டால், அவைகளை எடுத்துச் செல்ல இந்தத் தீண்டப்படாதவர்களைத்தான் வரவழைப்பார்கள். இந்த மக்கள் அதைத் தம் வாழிடங்களுக்கு எடுத்து செல்வார்கள். அதற்குப் பதிலாக அந்த மிருகச் சொந்தக்காரர்களுக்கு அதே மிருகத்தின் அளவில் அந்த விலங்கின் தோலினால் செய்யப்பட்ட பொருட்களைக் கொடுத்து விடவேண்டும். இது அவர்களின் ஒப்பந்தமாயிருந்தது. இறந்துபோன விலங்குகளின் இறைச்சி அசுத்தமாகும். அவர்கள் வாழ்ந்த இடங்களெல்லாம் அசுத்தமாகவும், துர்நாற்றத்துடனும் இருக்கும். அப்படிப்பட்ட இடங்களுக்கு மற்றவர்கள் வர விரும்பமாட்டார்கள். ஏதாவது அவசர வேலையாக வர நெரிட்டால், அவர்கள் வந்து தூரமான இடங்களில் நின்றவண்ணம் அந்த நபர்களைக் கூவி அழைத்து வந்த வேலையை முடித்துக் கொண்டு போவார்கள். இது அவர்களின் வாழ்க்கையில் ஒரு சாபமாக இருந்தது. இப்படி வேறொருவரும் தொடக்கூடாதவைகளைப் புசிக்கக் தூண்டியது பல நாட்களின் பசிதான்.

இந்த விதத்தில் கீழ்த்தரமாக நடத்தப்படுவதை க்ளோவால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. அதைப் பொறுத்துக்கொள்ள அவருக்கு கஷ்டமாக இருந்தது. இதை நிறுத்த க்ளோ மிகவும் முயற்சி செய்தார். கிறிஸ்தவ மதத்தின் மூலம் இதை எதிர்க்கவும், அவர்களை உயர்த்தவும் முடிவெடுத்தார். கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்து ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் மிருக சடலங்களின் இறைச்சியைப் புசிக்கலாகாது என்னும் சத்தியத்தை விளக்கிச் சொன்னார். அதில் அவர் வெற்றி கண்டார். கிராமங்களில் சமூக ஊசல் தொடங்கிற்று, இறந்து போன மிருகங்களை உபயோகப்படுத்துவது, நோய்களை உண்டாக்குவது மட்டுமல்லாமல் சுற்றுப்புறச் சூழ்நிலையை பாதிக்கும் என்னும் சுகாதார விதிகளை கிராம சுவிசேஷகர்களைக் கொண்டு மக்கள் அறிந்து கொள்ள செய்தார்.

இந்த சீர்த்திருத்தம் கிராமமக்களிடம் கடும் எதிர்ப்பை உருவாக்கியது. செத்துப்போன மிருகங்களின் இறைச்சி சந்தைக்கு கொண்டு வரப்படவில்லையாதலால் மாமிச வியாபாரத்தில் விலை வாசியில் புதிய விலை தீர்மானிக்கப்பட்டுவிட்டது. தங்களுடைய சம்பிரதாயம் மற்றும் மனசமாதானத்திற்கு பங்கம் விளைவித்ததாக க்ளோவை மக்கள் குற்றப்படுத்தத் தொடங்கி னார்கள். தீண்டப்படாத மக்கள் பயந்த சுபாவ முள்ளவகளாவார்கள். உயர் ஜாதியினருக்கும், தமது தேவதேவதைகளுக்கும், எதிர் காலத்தைக் குறித்தும், மக்கள் பயந்து கொண்டிருந்தார்கள். கிராமப் பண்டிகை,த் திருவிழக்களில் நடனமாடி, கூத்தாடி, தம்பட்டம் அடிக்க தாழ்த் தப்பட்ட ஆண்களும், பெண்களும் அங்கு வரவழைக்கப்படுவார்கள். இதை வேறு எந்த வகுப்பினரும் செய்யமாட்டர்கள். இதற்காக உயர் ஜாதியினர் அவர்களைப் பலவந்தப்படுத்தினார்கள். ஆனால் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்து, மாற்றப்பட்டவர்கள் அந்தப் பழக்க வழக்கங்களை எதிர்த்து நிலையாக நிற்கமுடிந்தது.

அந்நாட்களில் காலரா என்னும் தொற்று நோய் தோன்றியது. அதற்குக் காரணம் கீழ்ஜாதியினர் கிறிஸ்தவர்களாக மாறினதுதான் என்று மற்ற ஜாதி மக்கள் அவர்கள் மேல் குற்றம் சுமத்தினார்கள். பஞ்சக்கலத்தில் ஆயிரமாயிரமக்கள் பசிபட்டினியால் சாக ஆரம்பித்தபொழுது, பிராமணர்கள் தங்கள் கிராமத் தெய்வங்களுக்கு கோபமூட்டினார்களென்று கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தினார்கள். ஆனால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்குப் பின் பாறையைப் போல் க்ளோ உறுதியாக இருந்து அவர்களைத் தாங்கிவந்தார். கிராமங்களில் சுவிசேஷ ஊழியத்தைச் செய்கிறவர்களைத் தன் சகோதரர்கள் என்று அழைத்தார். தாழ்த்தப் பட்டவர்க ளாகிய கிறிஸ்தவர்கள் உபத்திரவத்தை சந்திக்கும்போதெல்லாம் க்ளோவிடம் உதவியை நாடி வருவார்கள். உடனடியாக க்ளோ அவர்களிடம் சென்று அவர்களுடன் பேசி, தைரியப்படுத்தினார், நீதிமன்றங்களுக்குச்சென்று புகார்கொடுக்க உதவிசெய்தார், இப்ப டித் துன்பப்படுத்தின பலர் நீதிமன்றங்களில் தண்டிக்கப்பட்டார்கள். இந்த தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி

க்ளோ மிகவும் கரிசனையுள்ளவராக இருந்தார் கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்திக் கொண்டிருந்த ஒரு கிராமத் தலைவரைக் க்ளோ பிடித்துத் தள்ளிவிட்டார். இந்த பாமரமக்கள் க்ளோவிடம் ஒரு விசுவாசமுள்ள, வழிகாட்டியை, நண்பனைக், கண்டு கொண்டார்கள் கினிகெரி என்னுமிடத்தில் கிணறொன்று வற்றிப்போய்விட்டதால் ஆடு மாடுகள், இறக்க ஆரம்பித்தது. காலரா என்னும் தொற்று நோயைப் பற்றிய பயம் எல்லா இடங்களிலும் காணப்பட்டது. இதெல்லாவற்றுக்கும் காரணம் தாழ்த்தப்பட்ட மக்கள் கிறிஸ்தவர்களாக மாறியது என பிற ஜாதியினர் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். இதன் காரணமாக அவர்கள் ஊர் தெய்வங்களுக்குத் திருவிழா வொன்றை நடத்த ஆலோசனை செய்தார்கள். அதற்காக அங்குள்ள பூஜாரி, கிறிஸ்தவர்களைத் தம்பட்டம் அடிக்கவும், கூத்தாடவும் அழைத்தான். கிராமத்திலுள்ள கிறிஸ்தவத் தலைவர்களை அழைத்துவர கிராமசேவகர்களை அனுப்பிவைத்தார்கள். அவர்களைப் பலவந்தமாக இழுத்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் தம்பட்டம் அடிக்க ஒத்துக்கொள்ளாதபோது, சுத்திகரிப்பின் அடையாளமாக அவர்களுடைய தலையின் மேல் தண்ணீர் ஊற்றினார்கள். தலைகளை மொட்டையடித்தார்கள். குடுமிவிடச் செய்தார்கள். நெற்றியில் சிவனைக் குறிக்கும் அடையாளமான குங்குமம் வைத்தார்கள் தம்பட்டங்களை அவர்கள் கைகளில் பலவந்தமாகக் கொடுத்தார்கள். மூன்று நாட்கள் வரை அவர்களுக்கு வெட்கத்தையும், அவமானத்தையும் உண்டுபண்ணினார்கள்.

கடைசியில் அந்த ஐந்து பேரும் தம் வெட்டப்பட்ட முடிகளைச் சேர்த்துக் கொண்டு, ஓங்கோலுக்கு வந்து நடந்தவற்றைக் க்ளோவிடம் சொன்னார்கள். இதனால் கோபமடைந்த அவர் நீதிபதியிடம் இதனைப் பற்றி புகார் செய்யும்படி கிறிஸ்தவர்களை ஊக்குவித்தார். இந்த ஐந்து பேரும் நீதிபதியிடம் சென்று, 'தங்களது கழுத்துகளை அறுத்தெடுக்குமளவுக்கும் கஷ்டப்படுத்திவிட்டார்கள்' என்று அவரிடம் சொன்னார்கள். நீதிபதியானவர், கிராமமக்களை இந்தச் செயலுக்கு ஊக்குவித்த அந்தக் கிராமத்துக் கர்ணன் அதாவது கிராமத்தலைவனான பட்டேலுக்கு முப்பது ரூபாய் அபராதமும் மற்றும் மூன்று மாதச்

சிறைவாசமும் தண்டனையாக விதித்தார். அவன் பிராமணனாயிருந்தது அது அவன் நினைத்திராத மிகக்கேவலமானத் தண்டனை யாயிருந்தது.

இந்த தீண்டப்படாத மக்களுக்கு க்ளோ எப்பொழுதும் உதவி செய்பவராக இருந்தார். இயேசுகிறிஸ்து தாமே ஒரு ஊழியத்தைத் தனக்கு வைத்திருப்பதை அவர் உணர்ந்தவராக இருந்தார். அது புதிய ஏற்பாட்டுக் காலத்தைப் போலவே இருந்தது. ஏழைகளுக்கு சுவிசேஷம் சொல்வது மதவைராக்கியமுள்ள மக்களுக்கு கடுங்கோபத்தை உண்டாக்கியது. பல நூற்றாண்டுகளாய் பயங்கரமான சமூகத் துயரத்தில் சிக்கியவர்களை மீட்க, க்ளோ முயற்சி செய்து கொண்டிருந்தது மட்டுமல்லாமல், அதில் வெற்றியையும் பார்த்தார்கள். இந்தக் காரியங்களைச் செய்ய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து க்ளோவுக்கு உதவி செய்துவந்தார். அவர் தம் மனதை மாற்றிக் கொள்ளாமல் நிலையாய் நின்றார். அவர் தோல்வியடையவில்லை. அந்த சமூகத்தின் குருட்டுத் தன்மையின் இருளுக்கு விரோதமாக சவாலாக நின்று, கிறிஸ்தவம், மக்களை ஆவிக்குரிய அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பது மட்டுமல்ல, சமூகத்தில் சமத்துவத்தையும் ஏற்படுத்தும் மதம் என்பதை எடுத்துக் காண்பித்தார்.

கிறிஸ்தவத்திடம் கவர்ச்சிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையில் அதிக சீர்திருத்தங்களைச் செய்யும் காரியத்தில் க்ளோ மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார். இப்படி கிறிஸ்தவத்துக்குள் வந்தவர்களுக்கு சில நிபந்தனைகளைப் பின்பற்றும்படி கேட்டுக் கொண்டார். இவை கிராமத்து வாழ்க்கை முறைகளில் பெரும் புரட்சியாயிற்று

அந்த மூன்று விதிகளாவன:

1. விக்கிரகங்களை வணங்கக் கூடாது.
2. ஞாயிற்றுக்கிழமைகளில் எந்த வேலையும் செய்யக்கூடாது.
3. செத்துப்போன மிருகங்களின் இறைச்சியைப் புசிக்கக்கூடாது.

மக்கள் அவைகளைப் பின்பற்ற ஊக்குவித்து தானே அதற்கு முன் மாதிரியாகவும் இருந்தார். பொதுவான கிராம வாழ்க்கையில்

கிறிஸ்தவம் ஸ்தாபிக்கப்பட்டு அடையாளங்கண்டு கொள்ளப்படும் பொருட்டு, இந்த முறைகளைப் பின்பற்றினார். மற்ற ஜாதியினருடன் ஒத்துப் போகக்கூடாதவராக இருந்தார். ஆனால் தனிப்பட்ட முறையில் உரிமைகளையும், விருப்பங்களையும் கேள்விக்கு எடுத்துரைத்த பொழுது, ஒரு சில ஒழுங்குகள் நிறுத்தப்படும் நிலைமை ஏற்பட்டது. அந்நேரங்களில் க்ளோ கீழ்ஜாதியினருக்காக பட்சம் வகித்து போராட ஆயத்தமாய் நின்றார். அப்படியே போராட்டங்களையும் நடத்தினார்.



ஜான் எவெரெட் க்ளோ வசித்துவந்த வீடு.

10. மிகக் கடின உழைப்பு.

இந்நாட்களில் சுவிசேஷ ஆராய்ச்சியாளர்கள் நவீன முறை சுவிசேஷ ஊழியங்களைக்குறித்து இன்றும் ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்நாட்களிலேயே க்ளோ தனது ஊழியத்தில் இந்த முறைகளைக் கையாண்டு வந்ததைப் பார்க்கமுடிகிறது.

உயர்ந்த ஜாதியின் இந்து மக்களைக் கிறிஸ்தவத்திற்குள் கொண்டுவரும் காரியத்தில் மிக நேர்த்தியான முறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார். அந்த மக்கள் மதமாற்றமடைவதை மிகவும் விலையேறப்பெற்றதொன்றாகவே அவர் கருதியிருந்தார். ஆனாலும் அவர் கீழ்ஜாதியினருக்கு தான்

☞38

க்ளோ அவர்களின் நாட்குறிப்பிலிருந்து:....

1904 -ஆம் ஆண்டின் அறிக்கையிலிருந்து தொகுக்கப்பட்ட துணுக்குகள்.

ஞாயிற்றுக்கிழமைகளில் தெலுங்கில் ஆராதனை நடந்து முடிந்த பிறகு, தன்னார்வத் தொண்டர்கள், கிராமங்களுக்குச் சென்று, மக்களைக் கூட்டிச் சேர்த்து, அரைமணி நேரம் ஆண்டவரை துதித்துப் பாடி, இரண்டு இரண்டு பேராக தெருக்களுக்குச் சென்று கர்த்தருடைய சுவிசேஷத்தைச் சொன்னார்கள்.

27 பெண் ஊழியர்களும், 27 பெண் உதவியாளர்களும் இருந்தார்கள்.

தலைமை கேந்திரத்தில் ஞாயிறுபள்ளியில் 41 பிரிவுகள் இருந்தன. மொத்தம் 800 பிள்ளைகள் நான்கு மைல் சுற்றளவுள்ள கிராமங்களிலிருந்து, ஒழுங்காக வந்து கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு வாரமும், 2000 வேத வசனங்களைக்கற் றுக்கொண்டார்கள்.

1904 ஆம் ஆண்டில் சபை மக்களின் மொத்த எண்ணிக்கை-15,961

புதிதாக ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டவர்களின் எண்ணிக்கை-343

உள்ளூர் உபதேசியர்கள்-384

ஆண்டின் குறிக்கோள்:- சுதந்தரமாக சுவிசேஷத்தை பிரசுரிக்கும் சபைகள் இருந்தன. சங்கங்களின் முக்கிய குறிக்கோள்- பள்ளிக்கூடங்களும் ஆகும்.

“மக்கள் கிறிஸ்துவை அறிந்து கொண்டு, சுய சார்பு வாழ்க்கையில் சமூகத்தில் எழும்பி,. நாகரீகம், பொருளாதாரம் மற்றும் சமூக விஷயங் களில் முனேற்றப்பாதையில் வளர்ந்து, கிறிஸ்தவ வாழ்க்கைக்குள் நடத்துதல்”

1904 இன் “ஜான் எவரெட் க்ளோ” அவர்களின் நாட்குறிப்பிலிருந்து,-

என் வேலைகளை உண்மையுடன் செய்வதில் இந்த ஆண்டிலும் வெற்றி கண்டேன். கடந்த நாட்களைக்காட்டிலும் தற்போதைய என் உடல் நிலையில் முன்னேற்றம் காணப்படுகிறது. ஆனாலும் நான் நொண்டிக்கொண்டுதான் நடக்கிறேன். வேதனை குறைவாக இருந்தாலும் அதிகப்பிரயாசத்துடன் வேலை செய்ய முடிவதில்லை. என் தள்ளுவண்டி மற்றும் உந்துவண்டியின் உதவியில்லமல் நான் ஒன்றும் செய்ய முடிவதில்லை. இவற்றைத் தவிர்த்தால் நான் என் வேலைகளை மிகச்சந்தோசமாக செய்துவருகிறேன். நான் அதிகமாக ஒன்றும் செய்யவில்லை யானாலும் செய்வதை வெற்றிக்கரமாகவும், மிக நேர்த்தியாகவும் செய்து முடித்துள்ளேன்.

....from 36
தன் முழு இருதயத்தையும், முதன்மை ஸ்தானத்தையும் கொடுத்திருந்தார். ஏனென்றால் அவரும் அப்படிப்பட்ட துயர நிலைமையிலிருந்துதான் வந்தவர். அவருடைய போக்கு அவர் புகழுக்கு பங்கம் விளைவித்தாலும் அதனை அவர் புறக்கணித்துவிட்டார். நெல்லூரில் அவர் சில பிராமண வாலிபர்களுக்கு சுவிசேஷத்தைச் சொன்னபோது படுந் தோல்வியையும், ஏமாற்றத்தையும் பார்த்தார். இப்பொழுது ஓங்கோலுக்கு பெரியா என்னும் சக்கிலியனின் அழைப்புக்கிணங்கி வந்திருந்தார். அந்த நேரத்தில் தன் ஊழியம் தீண்டப்படாதவர்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது என்று கற்பனை செய்துகூட பார்க்கவில்லை. தான் 'கீழ் ஜாதியினரின் ஊழியக்காரன்' அல்லது தன் ஊழியம் கீழ் ஜாதியினருக்கு மட்டும் உரியதாகுமென்னும் தவறான பெயர் வரக்கூடாதென்று முயற்சி செய்தார். தீண்டப்படாதவர்களுக்கென்று ஒதுக்கீட்டைப் பற்றி அவர் சிந்தித்திருக்கவில்லை. ஆனால் நாளடைவில் அவர் தன்னை தேவன் இந்தத் துயரத்திற்குள்ளான, மிருகத்திற்கும் கேவலமாக நடத்தப்படும் இந்த விசேஷித்த மக்களுக்காக தேவன் அழைத்திருப்பதை உணர்ந்தார். இந்த இருதய சவாலை மிக சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார். அதனை தன் வாழ்நாள் முழுவதும் மிகுந்த பயபக்தியுடனும், ஆழமான அர்ப்பணிப்பின் ஆவியோடும் காத்துக்கொண்டு வந்தார்.

இந்தியா சமுதாயத்திலுள்ள இந்த மேல்ஜாதி மக்கள் மெய்யான சக்தி மற்றும் அதிகாரத்தைக் கண் திறந்து கவனித்துப் பார்க்கத்தக்கதாக ஓரிரு சம்பவங்கள் நடைபெற்றன. ஒரு நாள் ஓங்கோலின் தெருவழியாக நடந்து சென்று கொண்டிருந்தபோது, வழியருகின் கழிவு நீர் கால்வாயில் ஒரு வயதான ஸ்திரீ விழுந்து கிடப்பதைப் பார்த்தார். அவளுக்கு வலிப்பு வியாதியிருந்தது. அவளை யாரும் கண்டு கொள்ளவில்லை. க்ளோ அவளைத் தூக்கி எடுத்து அங்கு கிடந்த ஒரு பாயில் படுக்க வைத்து குடிக்கத் தண்ணீரையும், சிறிது உணவையும் அளித்தார். அக்கம்பக்கத்தில் இருந்தவர்களிடமிருந்து, அந்த வயோதிப தாயுடைய சகோதரன் அதே ஓங்கோலில் சௌகரியமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறதாகவும், ஒரு மகள் ஓங்கோலிலிருந்து பத்து கிலோமீட்டர் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் வசித்துக்

கொண்டிருப்பதாகவும், விசாரித்துத் தெரிந்து கொண்டார். அந்த தாய் மரித்துக்கொண்டிருப்பதாக அவர்களுக்கு செய்தி அனுப்பினார், ஆனால் அந்த இருவரும் அங்கு வரவில்லை. ஏனென்றால் அந்த தாயார் ஜாதியை விட்டு அங்காங்கு அலைந்து கொண்டிருந்தாள் என்று அவர்கள் அவளை தங்கள் வீடுகளிலிருந்து மட்டுமல்லாமல், தங்கள் மனதிலிருந்தும், தூரப்படுத்தி விட்டார்கள்.அவளை வீட்டுக்கு கொண்டு வந்தாலும் அவள் மரித்த பின்பு ஆகும் செலவும், அதன் விளைவுகளும் அதிகமாயிருக்கும், அவளுடைய சுத்தீகரிப்புக்கு ஏராளமான பணம் தேவைப்படும். அந்தக் காரியங்களைச் செய்யாத பட்சத்தில், அவர்களை மக்கள் புறக்கணித்து விடுவார்கள், தங்களை ஜாதியிலிருந்து துரத்திவிடக்கூடும் என்னும் அச்சம் அந்த மக்கள் மத்தியில் இருந்தது. அவர்களுடைய மதவைராக்கியமும், சம்பிரதாயச் சடங்குகளே அவர்களுக்கு மிகவும் முக்கியமாக இருந்தது.

இந்த கீழ்ஜாதியினரின் மத்தியில் செய்த ஊழியத்தைப்பற்றி க்ளோ எழுதியிருக்கிறார், "நான் இந்த கீழ்ஜாதியினரைப் பார்க்கும்போது, என்னை அவர்களில் ஒருவனாக அடையாளங்காண முடிகிறது, அவர்களுடைய துக்கங்கள் என் மேல் இறங்கிவருகிறது. அந்நிலையில் அவர்களுடைய பாடுகளை நான் சுமக்கிறேன். இந்தியாவில் மற்ற ஜாதி மக்கள் அவர்களைப் புறக்கணித்துக் கீழே தள்ளும் போது, நான் அவர்களை என் தோளில் சுமந்து கொண்டு, அடித்தளத்திலிருந்து மேலே எழும்ப முயற்சிக்கிறேன். எப்படியென்றால் அவர்களுடைய கசப்பான பாத்திரம் என் உதடுகளில் படுகிறது. அடித்தளத்திலுள்ள மட்டியை நான் குடிக்க வேண்டியதா யிருக்கிறது."

க்ளோ அங்குள்ள சூழ்நிலைக்கு ஒத்துப் போவதை காட்டிலும், இந்தக் கசப்பான மட்டியை குடிக்க ஆயத்தமாயிருந்தார். சூழ்நிலை இப்படியிருக்க கீழ்ஜாதி மக்கள் தேவவார்த்தையைக் கேட்க கூட்டம் கூட்டமாகவும் குடும்பக்குடும்பங்களாகவும் திரண்டு வர ஆரம்பித்தார்கள்.

1867-ல் ஞானஸ்நான ஒழுங்குகள் அதிகரிக்க அதிகரிக்க ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் விசுவாசிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. அதன்படி மேல்ஜாதியினரிடமிருந்து உபத்திரவங்களும் பெருகி வந்தன. மேல்ஜாதியின் நண்பர்களும் இவருக்கு பகைஞர்களாக மாறிவிட்டார்கள். மொத்தத்தில் கிறிஸ்தவமதம் கீழ்ஜாதியினரின் மதமாகக் கருதப்பட்டது. இந்த மாற்றங்களைக் க்ளோ எதிர்பார்க்காததினால் இவைகளைப் பார்த்து மனதுக்குள் வெகுவாய் கஷ்டத்துக்குள்ளானார். நிலைமை மோசமாக இருப்பினும் க்ளோ தீண்டப்படாதவர்களுக்கு சுவிசேஷம் கொடுத்ததில் திருப்தியடையாமல் பிற ஜாதியினருக்கு சத்தியத்தை சொல்ல வாய்ப்பு அடைக்கப்பட்டுள்ளதை ஒத்துக்கொள்ளாதவராய் இருந்தார். ஒரு குறிப்பிட்ட ஜாதியினருக்கு ஞானஸ்நானம் கொடுப்பது மற்றவர்களுக்கு இடறலாயிருக்கிறதென்று யாராவது பகிரங்கமாகச் சொல்வதையோ, அதனை அதிகாரப்பூர்வமான கொள்கை என்று சொல்பவர்களையோ சந்திக்க ஆயத்தமாயிருந்தார்.

திருமதி ஹாரியட் க்ளோ ஒரு பாடச்சாலையைத் தொடங்க யோசித்துக் கொண்டிருந்தார். தீண்டப்படாதவர்கள் மட்டுமே இப்பள்ளிக்கு வரவேண்டுமென்பதும், அதே வகுப்பினர் ஆசிரியர்களாக இருக்க வேண்டுமென்பதும் அவர்களுடைய விருப்பம். ஆனால் அவர்களின் விருப்பத்திற்கு எதிராய் பல காரியங்கள் நடைபெற்றன. க்ளோ தம்பதியினர் இந்த பாரத்தைச் சுமந்துகொண்டார்கள். இவர்கள் இப்பிரச்சனையில் சிக்கிக்கொண்டிருக்கையில் நெல்லூரில் தெலுங்கு மொழியைக் கற்றுக் கொண்டிருந்த சுவிசேஷகர் டாக்டர். டெம்பணி அவர்களிடமிருந்து அவருக்கு ஒரு கடிதமொன்று வந்தது. அதில் "உங்கள் சந்தோஷத்தில் நானும் பங்கு கொள்கிறேன். கொடிய உபத்திரவத்தில் உள்ள உங்களுக்கு என் ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். தேவன் தெரிந்து கொண்டவர்களுக்கு தொடர்ந்து ஞானஸ்நானம் கொடுங்கள். ஒவ்வொரு கீழ்ஜாதி நபரும் ஒரு இரட்சிக்கப்பட்ட பிராமணனைப்போல் உயர்ந்தவனாவான். எந்த சிறந்த காரியம் சரி என்பது தேவனுக்கு தெரியும். அவர் கீழ் மட்டத்திலிருந்து

காரியங்களைச் செய்பவர். நமது விசுவாசமே நம் செயல்களாகும். உங்கள் வேலைகள் மிகக்கடினமானவைகள். சகோதரர் க்ளோ அவர்களே, அதற்காக களி கூருங்கள். வேலை நின்று போகாமலிருந்தால் சரி.'' என்பதாக எழுதப் பட்டிருந்தது. இது க்ளோ அவர்களை மிகவும் உற்சாகப்படுத்தியது.

இந்தக் காரியத்தைத் தொடர்ந்து செய்யவேண்டுமா வேண்டாமா என உறுதிப்படுத்த தம்பதிகள் தேவனையே நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நிலையான, திடமான, சரியான கட்டளைக்காக ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று கொபோலே என்னும் கிராமத்தில் கீழ்ஜாதியினரின் குழுவினருக்கு ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தபோது, நூற்றுக்கணக்கான உயர் ஜாதியினர் கரையில் நின்றுகொண்டு ஆராதனையைப் பார்த்து கொண்டிருந்தார்கள். கிறிஸ்தவர்களை ஏளனமாகப் பேசிக்கொண்டும் பயமுறுத்திக் கொண்டுமிருந்தார்கள். க்ளோ தொடர்ந்து நிகழ்ச்சிகளை நடத்தவும், அல்லது திரும்பி போய்விடவும் முடியாமல் தவித்தார். அதிக வியாகுலத்தோடும், சஞ்சலத்தோடும் சோர்ந்து, களைத்துப் போய் அடுத்த வழிநடத்துதலுக்காக கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டார்கள். அவருடைய வீட்டு புத்தக அறையில் ஆங்கில வேதாகமங்கள் அடுக்கப் பட்டிருந்தன. அவருடைய வீட்டுவழியாகச் செல்லும் ஆங்கிலேயச் சிப்பாய்களுக்கு கொடுப்பதற்காக மதராஸ் வேதாகமச் சங்கத்திலிருந்து அனுப்பப் பட்டிருந்தன.

க்ளோ எந்த நோக்கமில்லாமல் அந்த வேதாகமங்களில் ஒன்றைத் தற்செயலாய் எடுத்து புரட்டினார். 1கொரி.1:26-29. என்ற வசனங்கள் அவருக்கு விசேஷமாக தென்பட்டது.

"எப்படியெனில் சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அனேகரில்லை, வல்லவர்கள். அனேகரில்லை, பிரபுக்கள் அனேகரில்லை, ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தின் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப் படுத்தும்படி தேவன் உலகத்தில் பயித்தியமானவைகளைத் தெரிந்துக்கொண்டார். உள்ளவைகளை

அவமாக்கும்படி உலகத்தில் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துக்கொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைப் பாராட்டாதப்படிக்கு அப்படிச் செய்தார்".

இந்த வசனங்களை வாசித்தபோது அவருக்கு காணப்பட்ட பொருத்தம் அவரை அதிசயத்தில் ஆழ்த்தியது. பரலோகத்திலிருந்தே இது சொல்லப் பட்டது போல் இருந்தது. பேதுருவுக்கு புற ஜாதியினரைப் பற்றி ஏற்பட்ட அனுபவம் இவர் ஞாபகத்திற்கு வந்தது. பேதுரு புறஜாதியிருக்கு சுவிசேஷம் சொல்லி அவர்களை ஏற்றுக்கொண்டால், உயர்ஜாதி யூதர்கள் கிறிஸ்தவ அனுபவத்திற்கு வரமாட்டார்கள்.

இதனைக் குறித்து க்ளோ அதிகமாக சிந்தித்துக் கொண்டிருந்தபோது, அவருடைய மனைவி அந்த அறைக்குள் வந்தார். அடுக்கப்பட்டிருந்த வேதாகமங்களை நோக்கி நடந்தார், எந்த முன் யோசனையில்லாதவராக அந்த வேதாகமங்களில் ஒன்றை உருவி எடுத்து தற்செயலாக திறந்தார். உடனடியாக அவர், 'இந்த ஜாதியினரை இரட்சிப்புக்குள் நடத்துவது தேவனுடைய நோக்கமாயிருக்கிறது' என்று க்ளோவுக்கு சொன்ன வார்த்தைகளைக்கேட்டு, க்ளோ அந்த வேதப்பகுதியை வாசித்தார். மனைவி வாசித்த பகுதி தான் வாசித்தது தான்,என்பதைக் கண்டுக்கொண்டார். அந்த நாள் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானத்தைக் குறித்து அவருடைய மனைவிக்கு மன சமாதானமிருக்கவில்லை. அவருக்கு இன்னும் வார்த்தையின் அடிப்படையில் வழிநடத்துதல் தேவைப்பட்டிருந்தது. அவரும் கீழ்ஜாதியினரைப்பற்றி அதிக பாரங்கொண்டவராக இருந்தார். அந்த ஏவுதலால் தான் அந்த புத்தக அறைக்குள் வந்து வேதத்தை வாசித்திருக்கிறார்.

இருவரும் தம் அனுபவங்களைப் பகிர்ந்துக் கொண்டனர், அதாவது - அவர்கள் ஒருவருகொருவர் தெரியாமலேயே வேதத்தில் ஒரே வசனத்தை வாசித்து தேவனுடைய வழிநடத்துதலை கண்டுக்கொண்டார்கள்.

இதனால் அவர்கெளக்கு ஒரு வெளிச்சம்தெளி வாயிற்று. ஒரே வேளையில், ஒரே விதத்தில், ஒரே கட்டுக்குள்ளிருந்து, ஒரே

வார்தையைப் கண்டுக் கொண்டார்கள். தனித்தனியாக ஒருவரின் நோக்கத்தை ஒருவர் அறிந்துக்கொள்ளாமலேயே, வழிநடத்தப்பட்டது தேவனுடைய சரியான கட்டளை என்று முடிவெடுக்க செய்தது. கர்த்தர் இப்படி அவர்கள் இருவருடனும் பேசி அவர்களுக்கிருந்த எல்லா சந்தேகங்களையும் நிவர்த்திச் செய்தார். இப்படியாக இந்தியாவின் புறக்கணிக்கப்பட்ட, கீழ்ஜாதியினரிடத்திற்குப்போய் அவர்களை கர்த்தராகிய இயேசுவிடத்திற்கு கொண்டு வருவது கர்த்தரின் கட்டளை என்பதைத் திட்டமாக அறிந்து கொண்டார்கள். மிதிக்கப்பட்டவருர்களும், துயரத்தில் வாழ்ந்து கொண்டிப்பவர்களும், பயங்கரமான தரித்திரத்தில் இருக்கிறவர்களுமான, தீண்டப்படாத ஜாதியினரின் மத்தியில் தேவன் தங்களை அனுப்பியுள்ளார் என்பதைத் திட்டவட்டமாக விசுவாசித்தார்கள். வேறு எந்த விதமான சந்தேகத்திற்கும் இடங்கொடாமல் முன்னேறினார். தேவன் சரியான நபர்களைத் தெரிந்து கொண்டிருக்கிறார் என்றும் அதற்காகவே தங்களை தம் இருதயத்தின் ஆழத்திலிருந்து என்றும் அழைத்திருக்கிறார் என்பதைக் கண்டுக்கொண்டார்.

11. தேவனின் பராமரிப்பு.

சுவிசேஷகரின் வாழ்க்கை எந்த விதமான திட்டமில்லாமல் பிரச்சனைகள் நிறைந்த வாழ்க்கையாயிருந்தது. க்ளோ இந்தியாவில் வாழ்ந்த நீண்ட 45ஆண்டுகளின் ஊழிய வாழ்க்கையில், இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலைகளைக் கடந்திருக்கிறார்.

ஆரம்ப நாட்களில் பொய்ப் புரளிகள், பொய் வதந்திகள் அவருக்கு எதிராய் எழும்பின: க்ளோ ஓங்கோலின் சுற்றிலுமுள்ள மக்களை ஏமாற்றி, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளுக்கு அடிமைகளாக விற்கப்போகிறார் என்னும் செய்தி ஊழியத்திற்குப் பெரிய தடையாயிருந்தது.

க்ளோ ஞானஸ்நானம் கொடுக்கும்போதெல்லாம் ஏரியின் கரையில் இந்த மேல்ஜாதினர் நின்று கொண்டு வேடிக்கைப் பார்ப்பார்கள். தம் ஏரிகளின் தண்ணீரில் இந்த கீழ்ஜாதியினரை

ழூழ்கவைத்து மாசுப்படுத்திக் கொண்டிருக்கிறார்களென்று கெட்டவார்த்தைகளைக் கொண்டு சத்தமாக அவரைத் திட்டிக் கொண்டிருப்பார்கள். அப்பகுதியில் சமூக சம்பிரதாயங்கள், மற்றும் கட்டுப்பாடுகளைக் க்ளோ முறித்துப் போடுகிறார் என்பதாக அவர்கள் மதராசின் தலைமை அலுவலகத்திற்கும், அமெரிக்காவின் தாய் அலுவலகத்திற்கும் புகார் எழுதியனுப்பினார்கள். ஆனால் க்ளோ இந்த எல்லா அவதூறுகளின் மத்தியிலும் திடமாக நின்றார். தெலுங்கு தேசத்து கீழ்ஜாதியினருக்காகவே தேவன் தன்னை அழைத்திருக்கிறார் என்னும் முழு நிச்சயத்தை அவர் தன் இருதயத்தின் ஆழத்தில் கொண்டிருந்தார். அவர் தேவனுடைய சித்தத்தை முழுவதுமாக ஏற்றுக் கொண்டிருந்ததால் எந்த விதமான இடையூறுகளாலும் தைரியத்தை இழக்கவில்லை.

ஒரு முறை இவர் மேல் கற்களை எறிந்து கொண்டு வந்த ஒரு கும்பல் இவரை எதிர் கொண்டது. வழிப்போக்கர்களுக்கு இவர் எப்போதும் சுவிசேஷத்தை சொல்லப் போவது வழக்கம். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட இருவரை தன்னுடன் கூட அழைத்துச் செல்லுவார். அன்று எங்கிருந்தோ ஒரு கல் அவர் நெற்றியில் பட்டது. க்ளோ பயப்படவில்லை. அவர் பின்னுக்குத் திரும்பிப்பார்த்து தன் மேல் கல் எறிந்தவர் யாரென்று கேட்டார். மக்கள் மௌனனமாயிருந்தார்கள். க்ளோ மிகப் பெரிய தைரியசாலியென்றும், அவரை எளிதில் தாக்க முடியாது என்றும் மக்கள் அறிந்திருந்தார்கள். மற்றுமொரு முறையும் கற்களுடன் மக்கள் நேராக அவரைத் தாக்கினார்கள். கற்கள் பலமாகவும் அதிக வேகத்துடனும் விழுந்தன. க்ளோவுடன் இருந்தவர்கள் பலபேர் அடிப்பட்டனர், காயங்கள் ஏற்பட்டது. அன்றுமுதல் அவருடைய நண்பரான போலீஸ் அதிகாரியானவர் அவருக்கு பாதுகாப்புக்காக ஆட்களை வைத்தார். அந்தப்பட்டணத்தின் தாசீல்தார் க்ளோ பிரசங்கம் செய்யாதவாறு தடுத்துக் கொண்டிருந்தார். க்ளோ அவைகளுக்கு செவி கொடாம லிருந்ததால் தாசீல்தார், மக்களைப் பார்த்து, உங்களுக்குக் கேட்கப்பிடிக்கவில்லையென்றால் பிரசங்கத்தைக் கேட்கவேண்டாம் என்று சொல்லி, கல்லெறிந்து

கொண்டிருந்தவர்களை எச்சரித்தார். அதன்பின்பு யாரும் ஊழியத்திற்குத் தடைசெய்யவில்லை.

ஏழை மக்கள் கர்த்தரை ஏற்றுக்கொண்டபடியால் க்ளோ இவர்களைவிட்டு எங்கும் போகவில்லை. ஒரு கிராமத்தில் 27 குடும்பங்கள் கிறிஸ்தவர்களாக மாறிவிட்டார்கள். இந்த மக்கள் மேல்ஜாதியினருக்கு வேலை செய்ய மறுத்துவிட்டபடியால் கிராமத்து நீதிபதி பயங்கரமாகக் கோபங்கொண்டார். ஒரு உள்நாட்டு ஊழியன் ஸ்தாபனத்தால் நியமனம் செய்யப்பட்டு மிக ஆர் வத்துடன் தன்னைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தவனாக சுறுச்சுறுப்புடன் உழைத்துக் கொண்டிருந்தான். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட தீண்டப்படாதவர்களுக்காகவே ஒரு பள்ளியைத் தொடங்கி வைத்து வெவ்வேறு நிகழ்ச்சிகளை உருவாக்கி செயல்படுத்தி வந்தான். கிராமத்து மேல் வகுப்பினர்களுக்கு இது விபரீதமானதொரு செயலாயிருந்தது. ஆகையால் அவர்கள் கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவம் கொடுத்து அவர்கள் கிறிஸ்தவத்தைத் துறந்துவிடும்படியும் தங்கள் பழைய தேவர்களையே வணங்கும்படியும் வற்புறுத்தி வந்தான்.

ஒரு முறை அந்த கிராமத்தில் திருவிழா ஒன்று நடைபெற்றது. கிராம நீதிபதியானவன் தங்கள். தேவர்களை சாந்திப்படுத்ததக்கதாக முக்கியமான பத்து கிறிஸ்தவர்களை வலுக்கட்டாயமாக கிராம ஏரிக்கு இழுத்துக்கொண்டு சென்றான். அங்கு அவர்களை தண்ணீருக்குள் மூழ்க வைத்து, கிறிஸ்தவ மதப்பெயரில் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டதை துடைத்தெடுக்கும் படி வற்புறுத்தினான். விசுவாசிகள் அதற்கு இணங்காதிருக்கவே, நீதிபதி தன் ஆட்களுக்கு கட்டளையிட்டு, அவர்கள் கழுத்தில் பெரிய மரத்துண்டொன்றைக் கட்டி, ஏரிக்குள் தள்ளிவிட உத்தரவிட்டான். அதன் பின்பு அவர்களை இழுத்துக் கொண்டு வந்து, அந்த தேவதையின் முன்பு தாழவிழும்படி பலவந்தப்படுத்தினான். தேவதைக்கு பலி செலுத்தின இரத்தத்தை எடுத்துக்கொண்டு, அவர்கள் நெற்றியில் பூசினான். இரவு முழுவதும் அவர்களை அவலட்சணமாக நடத்தி அவமானப்படுத்தி பரிகசித்தனர். பிறகு அவர்களை கிராமபஞ்சாயத்துக்காரர்கள் கிராமத்தை விட்டு துறத்தி

விட்டார்கள். அவர்கள் கிராமச்சந்தைக்கு வரக்கூடாதென்றும், மற்றெந்த கிராமக்காரியங்களிலும் பங்கு கொள்ளக்கூடாதென்றும், எந்த வேலைக்கும் யாரும் அழைக்கக்கூடாதென்றும் கட்டளை பிறப்பித்தார்கள். இப்படியே ஆறு மாதங்கள் சென்றுவிட்டன. இந்த தீண்டப்படாத கிறிஸ்தவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்கள் தண்ணீரை உபயோகப் படுத்தாதவாறு அவர்களுடைய கிணறுகளை முட்களுடன் கூடிய பெரிய மரக்கட்டைகளினால் நிரப்பிவிட்டனர்.

இந்தக் காரியம் க்ளோவுக்குத் தெரிய வந்தது. அதற்குள் க்ளோ ஓங்கோலிலும், சுற்றிலுமுள்ள கிராமங்களிலும் நன்றாக அறிமுகமானவரனார். அந்த கிராமத்திற்குச் சென்று அந்த ஊர் நீதிபதியைச் சந்திக்க விரும்புவதாகச் சொல்லியனுப்பினார். அந்த நீதிபதியுடன் ஊர் மக்கள் திரண்டு வந்தார்கள். அவர் பிறப்பித்திருந்த கட்டளையை ரத்துச்செய்ய மிகச்சாந்தமாகவும், தாழ்மையோடும் கேட்டுக்கொண்டார். இந்துத்துவம் மற்றும் மனி தாபமான முறையிலாவது மத அடிப்படையிலாவது, அவர்களை நடத்தும்படியாக சுமார் மூன்று மணி நேரம் கேட்டுக்கொண்டே இருந்தார். அவனோ இசையவில்லை, க்ளோவின் முயற்சிகள் பலிக்காமல் போகும்போது அவர் இந்தக்காரியம் ஆங்கில அரசாங்கத்தின் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும் பயமுறுத்திப் பார்த்தார். ஆனால் நீதிபதி மிகக் கடினமானவனாயிருந்தான், ஞானஸ்நானத்திற்கென்று க்ளோவிடம் வந்திருந்த சுமார் 15 வாலிபர்களைத் துரத்திவிட்டான். கிராமத்தை விட்டுப் புறப்படும்போது க்ளோ நீதிபதியைப் பார்த்து, ஆங்கில அரசாங்கத்திற்குப் பயப்படவில்லையானாலும் தேவனுக்குப் பயப்படுவாயாக! தேவனுக்கும் பயப்படவில்லையானால் சில மாதங்களுக்குள் தேவனே உன்னை இல்லாமற் செய்து விடுவார் என்று எச்சரிப்பு கொடுத்துச் சென்றார். பிறகு துன்பப்பட்ட கிறிஸ்தவர்கள் இருந்த காலனிகளைச் சுற்றிப்பார்வையிட்டார், கிணறுகளை சுத்தம் செய்ய வைத்தார்.

இதற்கிடையில் ஊர்மக்கள் நியாயாதிபதியை சந்தித்து, க்ளோ அவர்களின் சொல்லுக்கு இணங்கவேண்டுமென்றும், தவறினால்

சட்ட நடவடிக்கைகளுக்குட்படுத்தபடவேண்டிவருமென்றும் அறிவுரை கூறினார்கள். அப்பொழுதும் அவன் பிடிவாதமாக, மிகப்பெருமையாக, எனக்கு ஒரு பெரிய மாட்டு வண்டியளவு பணம் செலவானாலும் கவலைப் படமாட்டேன், இந்த கிறிஸ்தவர்களில் ஒருவரும் இங்கு இருக்காதபடிச் செய்து விடுவேன் என்றும் சவால்விட்டான். கிறிஸ்தவர்கள் அதிகமான உபத்திரவத்துக்குள்ளானார்கள். பயத்தோடும் குழப்பத்தோடும் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். தங்களுக்கு ஏற்பட்ட இந்த அவல நிலையைக்குறித்து, அவர்கள் ஆங்காங்கு போய் கண்ணீரோடு சொல்லிவந்தார்கள். அவர்களுடைய பரிதாப நிலைமை தாங்கக்கூடாத அளவுக்கு எட்டியது. சுற்றுபுறக் கிராமங்களிலிருந்து அம்மக்களுக்கு உதவ க்ளோ ஏற்பாடு செய்தார். இந்த கிராமத்தில் நடந்த இச்சம்பவங்கள் வெளியூர்களுக்கு தெரியவந்தது, அந்த இடங்களிலெல்லாம் உபத்திரவமும், குழப்பங்களும் காணப்பட்டதால், க்ளோ கவலைக்குள்ளானார்.

சிலநாட்களுக்குள் கிராம நீதிபதிக்கு அக்குளில் கட்டிவொன்று தோன்றியது. அதனுடைய உபாதையால் அவன் பல வைத்தியங்களுக்காக செலவு செய்தான், குணமடையவில்லை. மூன்று மாதங்களுக்குப் பிறகு க்ளோ எச்சரித்தப்படியே அவன் மரித்தும் போய்விட்டான். அவனுடைய சொந்த ஆட்களே எல்லா இடங்களுக்குச் சென்று இக்காரியத்தை பரப்பி விட்டார்கள். கிறிஸ்தவர்கள் தம் முகத்தை தேவனிடத்திற்குத் திருப்பி, "தேவன் எங்கள் கூக்குரலைக் கேட்கும் தேவனாயிருக்கிறார்" என்று சாட்சி கூறினார்கள். அன்று முதல் கிராமத்தலைவர்களும், அதிகாரிகளும் கிறிஸ்தவர்களை இரக்கத்துடன் பார்த்தார்கள். அவர்களுக்கு தேவன்மேல் பயமும், க்ளோவிடம் பக்தியும் மரியாதையும் ஏற்பட்டது. இந்த நிலைமை கடைசிவரை நீடித்தது.

இம்மக்களின் தரித்திர நிலைமை க்ளோ அவர்களின் இருதயத்தை அறுத்தெடுக்க ஆரம்பித்தது. அந்த கோர அவஸ்தையைப் பற்றிக் கேட்கும் போதெல்லாம் கண்ணீர் வடித்தார். இந்த உதவியற்ற நிலைமையில் ஏழை மக்களால் மற்றொரு பிரச்சனையை எதிர்க்க வேண்டிதாயிருந்தது. இரு

உள்ளூர் ஊழியர்களுடன் ஒரு கிராமத்திற்குச் சென்றார். அங்கு ஒரு வயதான ஸ்திரீயைச் சந்தித்தார்கள். அவள் சில மாதங்களுக்கு முன் இயேசுகிறிஸ்துவைப் பற்றி மற்ற கீழ்ஜாதி கிறிஸ்தவர்கள் மூலமாகக் கேள்விப்பட்டிருந்தாள். அவளுடைய மகள் கொடூர வியாதியால் மரிக்கும் தருவாயில் இருந்தபொழுது ஜெபித்தாளாம், அற்புதமாக சுகம் கிடைத்ததென்று அவள் சொன்னாள். ஊழியக்காரர்கள், 'அந்த இயேசுகிறிஸ்து யார்?' என்று கேட்டார்கள். அதற்கு அவள் கொடுத்த பதில் க்ளோ அவர்களை நடுநடுங்க வைத்துவிட்டது. ஏனென்றால், அவள் க்ளோவைக் காட்டி, நான் ஆறு மாதகாலமாக இந்த இயேசு கிறிஸ்துவுக்கே ஜெபம் செய்து கொண்டிருந்தேன் என்று சொல்லி க்ளோவை சுட்டிக்காண்பித்தாள். மட்டுமல்ல அந்த கிறிஸ்தவர்கள் மரித்துப்போன மிஷனெரிகளின் கல்லறைகளை பூஜை செய்யும் இடங்களாக்கிக் கொண்டிருந்தார்கள், என்னும் செய்தியை உள்ளூர் ஊழியர்கள் க்ளோவுக்கு சொன்னார்கள். இந்தச் செய்தியும் அவர்களுக்கு பேரிடியாயிருந்தது. அதற்குள் க்ளோ ஓங்கோலுக்கு வந்து 20 ஆண்டுகள் கடந்து போயிருந்தன. அதற்குள் அவருடைய பெயர் பிரபலமடைந்து விட்டது. க்ளோ தான் மரித்தால் ஓங்கோலில் அடக்கம் செய்யப்படவேண்டுமென்ற வாஞ்சையோடிருந்தார். ஏற்கனவே அங்கு ஒரு கல்லறையையும் கட்டி வைத்திருந்தார். ஆனால் இப்பொழுதோ இந்த மக்களின் செயல்களைப் பார்த்ததும் மக்கள் தன்னையும் அப்படியே பூஜை செய்வார்கள் என்ற நினைவு அவருடைய நெஞ்சை புண்ணாக்கி விட்டது.

12. கீழ் ஜாதியினருக்குக் கல்வி வசதி

ஆரம்பக்கால நாட்களில் ஓங்கோலில் ஊழியம் செய்யும்போது, க்ளோ மக்களைப் பார்த்து, "நான் உங்கள் சகோதரன், பயப்படாதேயுங்கள்," என்று சொல்லி தைரியப் படுத்துவார்.

நெல்லூர் போலவே ஓங்கோலிலும் பிராமணர்களும் தன்னிடத்திற்கு வருவார்கள் என்று நினைத்திருந்தார். அவர் நினைத்தது போல் நடைபெறவில்லை. க்ளோ வரச்சொன்னால் தவிர அவர்கள் வரமாட்டார்கள். க்ளோ தீண்டப்படாதவர்களிடம்

நெருங்கி பழகுவதால் மற்ற ஜாதியினர் தன்னிடம் வரமாட்டார்கள் என்பதையறிந்து ஆச்சரியப்பட்டார்.

க்ளோ மக்களைப் புரிந்து கொள்ள ஆரம்பித்தார். இடைவிடாது மக்களோடு தொடர்பு கொண்டிருந்ததால், ஜாதிக் கலாச்சாரத்தைப்பற்றி அதிகமாகக் கற்றுக்கொள்ள முடிந்தது. அமெரிக்கப்பார்வையில் மக்களைப் பார்ப்பதை நிறுத்திக் கொண்டார். தனிப்பட்ட நபரின் சுதந்தரத்திற்காக தனது அன்பை தனிப்படுத்திக்கொண்டார். இப்படி மேல்ஜாதியினர் தங்களை பிரித்துக் கொள்ளும்போது, இயேசுவை அறிந்துகொள்ள கீழ் ஜாதியினர் திறண்டு வர ஆரம்பித்தார்கள். அவர் ஊழியம் செய்து முடித்த பல ஆண்டுகளுக்குப் பின் மக்களுக்குள் பரவி வந்த பேச்சாவது,- "க்ளோ இந்தப் பகுதிகளில் இருந்த மாட்டுத் திருடர்களை மாற்றிவிட்டார்." ஆனால் பிராமணர்கள் இப்பேச்சை கண்டித்து இகழ்ந்து பேசினார்கள். ஆனால் க்ளோ அதனைப் புகழ்ச்சி என கருதி நல்ல முறையில் ஏற்றுக்கொண்டார். இது க்ளோ அவர்களின் தலைமையில், இயேசுகிறிஸ்துவுக்காக நடைபெற்ற ஒரு புரட்சியென்றே சொல்லலாம்.

இது தல்லகொண்டபடு என்னும் கிராமத்திலிருந்து தொடங்கியது. தன் ஊழியத்திற்கு தன் வலதுகரம் என்று சொல்லப்பட்டிருந்த பெரியாவின் கிராமம் இதுவாயிருந்தது. ஓங்கோலில் தன் வீட்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த பள்ளியில் சிறுவர்களும், தகுதியுடைவர்களும் வந்து சேர்ந்து படிக்கும்படி அவர் மக்களை ஊக்குவித்தார். அச்சிறுவர்கள் பள்ளிக்கு புறப்படும் நேரத்தில் தாய்மார்கள் புலம்பி அழுதார்கள். அம்மக்கள் ஒருவரை யொருவர், சார்ந்து வாழ்ந்து கூட்டுக் குடும்பங்களாகப் பழக்கப்பட்டிருந்தார்கள். அம்மக்கள் அதிகமாக ஏழைகளானபடியால், தங்கள் பிள்ளைகள் பள்ளிக்கூடம் போவதால் குறைந்த அளவு உணவு, உடைகள் மற்றும் குறைந்த தேவைகளுக்கும் அடி விழும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இம்மக்களின் ஏழ்மை க்ளோவுக்கு பெரும் சுமையாயிற்று. ஆனாலும் அவர் தடுமாறவில்லை. பள்ளிக்கு வந்து படிக்கிறவர்களுக்கு உணவு வசதிகளை செய்து கொடுத்தார். இல்லையானால் அப்பிள்ளைகள் திரும்பி போய்விடும் நிலைமையும் ஏற்பட்டிருக்கும்.

கிறிஸ்தவ கிராமத் தேவாலயம்.

(மக்களே கட்டிய இந்த தேவாலயத்தைப் பற்றி மிகவும் பெருமையுள்ளவர்களாயிருந்தார்கள். இக்கட்டடத்தில் ஆராதனை, ஞாயிறுப்பள்ளி மற்றும் பள்ளிக்கூடங்களை நடத்திக் கொண்டிருந்தார்கள். இது அவர்களுக்கு ஒரு நம்பிக்கையின் இடமாகவும், மற்றும் நாகரீக உலகத்தில் தங்களை அடையாளங்கண்டுக்கொள்ளும், இடமாகவும் இருந்தது.)

ஒரு வேளை மாணவர்கள் திருமணமானவர்களாயிருந்தால், அவர்களுடைய மனைவிமார்களும் வந்து கல்வி கற்றுக்கொள்ளச் சொல்லுவார். தலைமையகத்திலிருந்து இப்பாடசாலையின் செலவுகளுக்கு சிறிதளவு உதவிகிடைத்தது. க்ளோ அவர்களின் உதவியால் மாணவர்கள் உள்ளூர் அலுவகத்திலிருந்து உதவி கேட்டார்கள். இப்படி க்ளோ தன் நடவடிக்கைகளில் முன்னேறிக்கொண்டிருந்தபோது, இதுவரை செய்து வந்த உதவிகளை நிறுத்திவிடுவதாக தலைமை ஸ்தாபனத்திலிருந்து, க்ளோவுக்கு கடிதம் வந்தது. இது அவருக்கு பெரிய ஏமாற்றத்தை உண்டாக்கியது. அந்த கமிட்டிக்கு க்ளோ எழுதிய கடிதம் ஏற்றுக்கொள்ளப் படவில்லை, அதைப்பற்றி கலந்தாலோசிக்கவுமில்லை. ஆனாலும் க்ளோவின் விடாமுயற்சியால் கௌரவ பதிலொன்று வந்து சேர்ந்தது.. பின்பு பள்ளிக்கூடம் நடத்த க்ளோவுக்கு எந்த விதமான குறையும் ஏற்படவில்லை.

திருமதி ஹாரியட் க்ளோ 1900 இல் ஆரம்பித்த பாடசாலைக் கட்டிடம்.

ஒருவேளை தலைமை நிலையத்திலிருந்து பொருளுதவி வரவில்லையானாலும் க்ளோ பள்ளிக்கூடத்தை நிறுத்த ஆயத்தமாயிருக்கவில்லை. இந்த தீண்டப்படாத மக்களுக்கு உதவும்படியாக அவர் அமெரிக்காவில் இருந்த தன் உறவினர்களையும், நண்பர்களையும் கேட்டுக் கொண்டிருந்தார். ஏனென்றால் கற்றுக்கொள்ள வருபவர்களின் எந்த வாய்ப்பினையும் தடுத்துவிட அவர் விரும்பவில்லை. பத்தாயிரம் கீழ்ஜாதி மக்களில் எழுதி படிக்கத் தெரிந்தவர்கள் ஒருவரும் இருக்கவில்லை. அந்த சமுதாயத்து மக்களிடம் இருந்த கல்வியற்ற நிலையை எடுத்துப்போட்டு கல்வியை மக்களுக்குள் புகுத்த வேண்டுமென்று க்ளோ உறுதி பூண்டார். தீண்டப்படாதவர்களைப் பற்றி மற்ற ஜாதியினர் கொண்டிருந்த மனப்பான்மையைக் கல்வி மாற்றிவிடுமென்று அவர் நம்பியிருந்தார்.

இவர்களில் மூன்று பேர் திறமைசாலிகளாகயிருந்தது க்ளோவுக்கு பிரச்சனையைக் கொண்டுவந்தது. அவர்கள் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களாயிருந்தார்கள். அவ்வூரில் உயர்ஜாதியினர் நடத்தும் சில பள்ளிக்கூடங்களிருந்தன. அரசாங்கப் பள்ளிக்கூடம் ஒன்று தான் இருந்தது. உள்ளூர் ஆட்கள் அதை நடத்தி வந்தார்கள். அந்த பள்ளிக்கூடத்தில் சுமார் 60 பேர் உயர் ஜாதி

மாணவர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள். இம்மாணவர்களை ஆங்கில உயர்நிலைக் பள்ளிக்காக தயார்படுத்திக் கொண்டிருந்தார்கள். க்ளோ உள்ளூர் நீதிபதி, திரு. F. H. ஷார்ப். அவர்களிடம் இது பற்றி பேசிப்பார்த்தார். காரியம் ஆபத்தானதானாலும் இருவரும் சேர்ந்து மாணவர்களை அந்த பள்ளிக்கூடத்தில் சேர்க்க முயற்சித்தார்கள்.

முதலாவதாக அவர்கள் மக்கள் மத்தியில் நல்ல மனப்பான்மையை ஏற்படுத்த பட்டணத்து முக்கியமான அதிகாரிகளையும், மற்றப் பிரமுகர்களையும் சந்தித்தார் கள். ஆங்கிலேய அரசாங்கத்தால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் ஆளும் ஆங்கிலேய அரசாங்க மொழியை கற்றுக்கொள்ள மூன்று பேர் இந்த மாணவர்களை சேர்க்க முயற்சி செய்வதாக சொன்னார்கள். ஆரம்பத்தில் அவர்கள் பொறுமையாக அவர் சொல்லும் வார்த்தைகளைக் கவனித்துக் கேட்டு அவர்களுடைய திட்டங்களுக்கு தடை செய்வதில்லையென்று வாக்களித்தார்கள். மறுநாள் க்ளோ பிராமணரான தலைமை ஆசிரியரை சந்திக்கும்படியாக சென்றார். அவருடன் அந்த பட்டணத்து அதிகாரிகளும் சில போலீஸ்காரர்களும் இருந்தார்கள். இது பற்றி வீடு வீடாய் பேசப்பட்டது க்ளோ அவர்களின் இந்த திட்டத்தைக் குறித்து எல்லா இடங்களிலும் கீழ் ஜாதி மாணவர்களை பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதைப்பற்றி பயங்கரமான எதிர்ப்பும், விரோதமும் உண்டாயிற்று. மாணவர்களின் பெற்றோரையும், உறவினர்களையும் இந்த முயற்சியை கைவிடுமாறு பயமுறுத்தி கட்டடாயப்படுத்தினார்கள்.

ஆனால் க்ளோ இதற்கு அசையவில்லை. அந்த வேளையில் திரு. ஷார்ப் அவர்கள் ஊரிலில்லாததால், அவர் வரும்வரை காத்திருக்க மக்களுக்கு சொன்னார். திரு. ஷார்ப் சில வாரங்களுக்கு பிறகு வந்த பின்பு, க்ளோ இதைப்பற்றி அவரோடு கலந்து பேசினார். அவர் தன் அதிகாரத்தை இந்த காரியத்தில் பயன்படுத்துவதாக க்ளோவுக்கு நம்பிக்கை கொடுத்து மறுநாள் அந்த மாணவர்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப சொன்னார். மாணவர்களைப் பள்ளிக்கு அழைத்துச் செல்ல தன் வேலைக்காரனுக்கு உத்தரவிட்டார். ஆனால் அவன் சிறிது நேரம்

கழித்து திரும்பி வந்து, அம்மாணவர்கள் பள்ளிக்கு வரவில்லையென்று சொன்னான். காரணமென்னவென்று திரு. ஷார்ப் க்ளோவுக்கு எழுதி கேட்ட போது, அவர், தான் அனுப்பிவைத்ததாக பதிலளித்தார். திரு. ஷார்ப் தானாக பள்ளிக்குச் சென்று பார்க்கும்போது அந்த பையன்கள் வெளியில் படிக்கட்டுகளருகில் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தார். ஏனென்றால் அவர்கள் பள்ளி வளாகத்திற்குள்ளும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. திரு. ஷார்ப் மாணவர்களின் கையைப் பிடித்துக்கொண்டு வகுப்பறைவரையிலும் இழுத்துக் கொண்டுபோய் அந்த தலைமை ஆசிரியரிடம் கோபித்துக்கொண்டார் மட்டுமல்ல, அந்த கிறிஸ்தவ மாணவர்கள் இந்து பிள்ளைகளுடன் உட்காரவும், அவர்களுடைய புத்தகங்களை வாசிக்கவும், அவர்களை தங்கள் கையால் தொடவும் செய்தார். இந்து பிள்ளைகள் கிறிஸ்தவர்களைத் தொடுவதால் ஆபத்தொன்றும் இல்லையென்று விளக்கினார். இவர்களும் பிராமண பிள்ளைகளைப் போலவே புனிதர்களும், திறமை வாய்ந்தவர்களுமானவர்கள் என்றும் சொன்னார்.

அடுத்த நாள் இதன் விளைவு பள்ளிக்கூடத்தில் தோன்றியது. என்னவென்றால் மாணவர்களின் வருகை 13க்கு குறைந்துவிட்டது. க்ளோவின் இந்த சாகச முயற்சி தோல்வியைப்போல் காணப்பட்டது, இதையொரு கெம்பீரமான இழப்பு என நினைத்தார். இந்த கிறிஸ்தவ மாணவர்களினிமித்தம் தலைமை மண்டலத்திலிருந்தும் சில தொந்தரவுகளை அனுபவிக்க வேண்டியிருந்தது. இந்த சுவிசேஷக் கேந்திரத்தின் தன் தலமையகத்துடனும் நீண்ட கால வாக்குவாத போராட்டங்களை செய்யவேண்டியதாயிற்று.

அடுத்து வந்த 20 ஆண்டுகளில் க்ளோ ஓங்கோலில் உயர் நிலைப்பள்ளியை தொடங்கிவைத்தார். அதற்குள்ளாக பிராமண மக்கள் வந்து தங்கள் பிள்ளைகளையும் அப்பள்ளியில் சேர்த்துக் கொள்ளும்படி கேட்க ஆரம்பித்தார்கள். க்ளோ கல்விக்கட்டணத்தை வசூல் செய்து அவர்களை சேர்த்துக்கொண்டார். சில ஆண்டுகள் எந்த இடையூறில்லாமல் நல்ல முறையில் சகலமும் நடைப்பெற்றது. இறுதி ஆண்டில்

அவர்கள் கீழ் ஜாதியினருடன் தங்கள் பிள்ளைகளை உட்காரவைக்க மறுத்துவிட்டார்கள், அவர்களை அழைத்துகொண்டு வகுப்பறையிலிருந்து வெளியேறினார்கள். அவர்கள் கீழ்ஜாதி மாணவர்களுடன் உட்காரவைக்க விரும்ப வில்லையென்றால் அப்படிப்பட்டவர்கள் மீண்டும் பள்ளிக்கூடத்தில். சேர்க்கப்படமாட்டார்கள் என்று க்ளோ செய்தியனுப்பினார். அதன்படியே அவர்கள் மீண்டும் வந்தார்கள். பின்பு பத்து ஆண்டுகளுக்கு பிறகு இந்த பிராமணர்கள் ஒங்கோலில் தங்களுக்கு ஒரு பல்கலைக்கழகத்தை ஆரம்பித்துத்தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். தங்கள் பிள்ளைகள் இந்த கிறிஸ்தவ மாணவர்களுடன் உட்கார்ந்து படிக்கப்போவதாகவும் தெரிவித்தார்கள்

13. மரித்துக்கொண்டிருக்கும் மக்களுடன் இவர் வாழ்ந்தார், பயங்கர மரணச் சாயல்: இந்தியாவின் பஞ்சக்காலம்

1876 - இன் பருவமழை தவறிவிட்டது. கடந்த ஆண்டிலும் சரியாக மழை பெய்யவில்லை. உணவுப் பொருட்களுக்கு பயங்கர பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. 1876 - இல் பஞ்சத்தால் 100%, பசுமாடுகள் மேய்ச்சலின்றி பசியால் மடிந்து கொண்டிருந்தன. இந்தியாவின் எல்லா பக்கங்களிலிருந்து ஆடுமாடுகளை வாங்க ஒங்கோலுக்கு வர ஆரம்பித்தார்கள். அந்த மாடுகளின் சொந்தக்காரர்கள் மிகவும் மலிவான விலைக்கே விற்கவேண்டிய இந்த நிலையில் க்ளோவிடம் உதவிக்காக வந்தார்கள். க்ளோ அவைகளுக்குரிய விலையை நிர்ணயித்து வியாபாரம் செய்ய ஏற்பாடு செய்தார். இப்பொழுது வெளியூர்களிலிருந்தும் க்ளோவிடமே மக்கள் வந்தார்கள். க்ளோவின் உதவியில்லாமல் எந்த வியாபார விவகாரங்களையும் செய்ய ஒங்கோல் மக்கள் மறுத்து விட்டார்கள். இந்தப் பஞ்சம் ஏழைக் கிறிஸ்தவர்களை பலமாக பாதித்தது. சில காலம் செத்துப்போன விலங்குகளின் மாமிசத்தையே உண்டு வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

காலரா தொற்று நோய் பரவ ஆரம்பித்தவுடன் அதை புசிப்பதை நிறுத்திவிட்டார்கள்



பக்கிங் ஹாம் கால்வாய்

செல்வந்தர்கள் தங்கள் உறவினர்களுக்கு உதவி செய்தார்கள். மதராஸின் ஆளும் அரசாங்கத்தால் பசிபட்டினியால் வாடுபவர்களைப் பராமரிக்க முடிய வில்லை. இந்த சூழ்நிலையை சமாளிக்க 'பக்கிங் ஹாம் கால்வாய்' திட்டத்தின் மூலம் மடிந்து கொண்டிக்கிறவர்களைக் காப்பாற்றி, அவர்களுக்கு வேலைவாய்ப்புகளைக் கொடுத்து உதவ முன்வந்தது. நெல்லூர்வரையிலும் சுமார் 100 மைல் நீளத்தில் கால்வாய் வெட்டும் திட்டம் போடப்பட்டது. க்ளோ இந்த வேலையில் மிகுந்த ஆர்வம் காட்டினார். இந்த கால்வாய் விஸ்தரிப்பைப்பற்றிய செய்தி அறிக்கைகள் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டது. அரசாங்கம் இந்த காலக்கட்டத்தில் க்ளோவின் ஆலோசனைகளையும், உதவியையும் நாடியது. இந்த குறிப்பிட்ட கால்வாய் பல கிறிஸ்தவக் கிராமங்களைக் கடந்து போவதாக திட்டத்தில் அறிந்த க்ளோ இத்தருணத்தைப் பயன்படுத்திக்கொண்டு பல மைல் நீளத்தில் கால்வாயின் வேலையைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு விட்டார். மாட்டு வண்டிகளைக் குத்தகைக்கு அரசாங்கத்திற்கே கொடுக்க ஏற்பாடு

செய்தார். கீழ்ஜாதியினரை வரவழைத்து இந்த கால்வாய் வேலையில் சேர்த்து உழைத்து உயிர் காத்துக்கொள்ள வழிவகுத்துக் கொடுத்தார். எந்த பகுதியிலும் எதுவும் வீண்போகாதபடி தானே எல்லா இடங்களுக்கும் சென்று வேலைகளை சரிவர கவனித்துக்கொண்டு வந்தார். ஆங்கிலேய பொறியாளர்களிடம் சென்று தான் அமெரிக்காவில் இருக்கும் போது பெற்றுக்கொண்டிருந்த உதவி நில அளவையாளரின் சான்றிதழைக் (Deputy Surveyor Certificate) காண்பித்து அதன் மூலம் தனக்கு கிடைத்த வாய்ப்புகளைக் கொண்டு வேலைகளில் ஈடுபட்டார். இப்படியாக மக்களுக்கும், அரசாங்கத்துக்கும் எந்தெந்த வழியில் உதவ முடியுமோ அவைகளில் இவரை உபயோகப்படுத்திக்கொள்ள முடிந்தது.

க்ளோ பணியிடத்திலேயே தங்கியிருந்ததால் எல்லா மக்களையும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளமுடிந்தது. வேலையாட்களுக்கு சரியாக சம்பளத்தையும், உணவுதானியப் பொருட்களையும் வழங்கும் காரியத்தில் ஒத்துழைப்பு கொடுத்தார். கிராமங்களிலிருந்து பணியிடங்களுக்கு வரும் வழியிலேயே எத்தனையோ பேர் பசியினால் துன்புற்றவர்களாய் மரித்துக் கொண்டிருந்தார்கள். காரணமில்லாமல் சண்டைச் சச்சரவுகள் நிகழும், உணவை பறிமாறும் வரையும் பொறுத்திருக்க முடியாதவர்களாய் இருந்தார்கள். க்ளோ தன் உதவியாளர்களான உபதேசிகளை அனைத்து கிராமங்களுக்கும் அனுப்பி, அங்குள்ள மக்கள் வந்து வேலை செய்து பிழைத்துக்கொள்ள வற்புறுத்தினார்.

தொற்றுவியாதியால் மக்கள் மரித்துக்கொண்டிருந்தார்கள். அரசாங்கம் அவர்களுக்கு 10,000 மாத்திரைகளை கொடுத்து உதவியது. க்ளோவின் உபதேசிகள் க்ளோவுக்கும், மக்களுக்கும் இடையில் பாலமாக அமைந்தவர்களாய் வேலை செய்தார்கள். கிறிஸ்தவர்களல்லாத கீழ்ஜாதியினரையும் வேலைக்கு அமர்த்தி அவர்களை உற்சாகப்படுத்தினார். அது, எங்கும் மரணமும், வேதனைகளும், சிதறிகிடந்த குடும்பங்களும், வியாதியும் தலை விரித்தாடிய கோர வேதனையின் காலமாயிருந்தது.

கால்வாய் வேலை

இலட்சக்கணக்கில் மக்கள் கால்வாய் வேலையில் ஈடுப்பட்டார்கள். தங்கள் பாக்கெட்டுகளில் வேதாகமங்களுடன் உபதேசிகள் வேலையாட்ககளுக்கு வேத வார்த்தைகளை வாசித்துக்காட்டினார்கள். கால்வாய் வேலையில் கிறிஸ்தவமும் அவர்களுடைய ஒரு முக்கிய பாரமாக இருந்தது. பலவீனர்களுக்கு முக்கியமான கரிசனை கொடுக்கப்பட்டது. பெற்றோர்களை இழந்தவர்களுக்கு அந்த இடம் ஓர் அடைக்கலமாயிருந்தது. கிறிஸ்தவர்களல்லாத இந்துகளுக்கும் தன்னலமற்ற பணி செலுத்தப்படுவதை உயர்ஜாதியினர் கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஆங்கிலேய அதிகாரிகள் க்ளோவின் கூடாரவாசலில் நின்றவாறு தேநீர் அருந்துவார்கள். இப்படி க்ளோ 'ஓங்கோலின் துரை'யாக (ஓங்கோலின் வெள்ளைக்காரன்) வாழ்ந்து தீண்டப்படாதவர்களில் தன்னை ஒருவனாக்கிக் கொண்டிருந்தாலும் தன்னை ஆளும் அதிகாரிகளுடனும் கலந்து மக்கள் துரோகியாக மாறிவிடவில்லையே! அவர்களும் இந்த துரையுடன் சேர்ந்து கொண்டு உணவருந்துகிறார்கள்' என்பதாக தங்களுக்குள் பேசிக்கொள்ளுவார்கள். இப்படியாக தீண்டக்கூடாத மக்களின் சமூக நிலையானது சிறிது சிறிதாக உயர ஆரம்பித்தது. மேற்கு, கிழக்கு நாடுகளின் கிறிஸ்தவ பந்தம் மனித சகோதரத்துவத்திற்கு ஒளிவீசியது.

1877 ஆம் மே மாதத்தில் தொடர்ந்து வேலை நடந்துக்கொண்டிருந்தபோது, பலத்த பருவ மழை தொடங்கியது.

அது பயங்கரமான புயல் காற்றாயிருந்தது. ஆறுகளும், கால்வாய்களும் நிரம்பி வழிந்தன. இரவு வேளைகளில் மழையின் கொடுமையிலிருந்து தப்பித்துக்கொள்ள வயோதிபர்களும்,, பெண்களும், சிறுவர்களும் க்ளோவின் கூடாரத்திற்கு வருவார்கள். அவர் அவர்களுக்கு வலிமருந்துகளையும், கம்பளிப்போர்வைகளையும் கொடுப்பார். இவைகளையெல்லாம். கவனிப்பது க்ளோவுக்கு அசாத்தியமானதொரு பாரமாயிருந்தது.

மழைக்குப் பின்பு, பயங்கரமான வெயிலின் கொடுமை துவங்கியது. க்ளோ சரீரத்தில் பெலவீனமடைந்தார். உபதேசிகள் அவரை வற்புறுத்தி ஓங்கோலில் இளைப்பாரும்படி வேண்டிக் கொண்டார்கள். இன்னும் மக்கள் க்ளோவின் உதவியை நாடி வந்து கொண்டிருந்தார்கள். அவர் அனைவரின் வற்புறுத்தலுக்கிணங்கி ஓங்கோலுக்கு போனார். தெலுங்கு மாநிலத்தில் மட்டும் நான்கு கோடி மக்கள் வசித்து வந்தார்கள். அரசாங்கம் ஒரு கோடி மக்களை பஞ்ச நிவாரண முகாம்களில் வைத்து, வேலை வாய்ப்பளித்து அவர்களை காப்பாற்ற முடிந்தது.

ஒரு கோடி மக்கள் கால்வாய் வெட்டும் பணியில் ஈடுபட்டு தங்கள் ஜீவன்களைக் காத்துக் கொண்டார்கள். ஆங்கில அரசாங்கம் தன் முழு முயற்சியோடு பஞ்சத்தால் துயரப்பட்டுக் கொண்டிருகிறவர்களுகு மனப்பூர்வமாக உதவ முன் வந்தது. பசியால் துவண்டு கொண்டிருந்த மக்கள் கூட்டம் உதவிகளை நாடி, தள்ளாடிக் கொண்டே மிஷன் கம்பௌண்டை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். சில வேளைகளில் வந்த பலர் கேட்டுக்கு முன்னாலேயே மடிந்து விழும் நிலையும் இருந்தது. பல வேளைகளில் உதவ தன்னிடத்தில் ஒன்றும் இல்லையென்று சொன்னாலும் மக்கள் நம்பவில்லை. உதவ ஏதேனும் சிறிதளவாவது தன்னிடம் இருந்தாலும் அதை வைத்து க்ளோ வெளியில் வந்து தேவையில் உள்ளவர்களுக்கு உதவப்பார்ப்பார்.

பஞ்சத்தால் துவண்ட மக்கள்

இது பயங்கரமானதொரு பஞ்சமாயிருந்தது. மக்கள் பசி தாங்கமுடியாமல், புல் பூண்டுகளையும், இலை, வேர்களையும் சாப்பிட்டார்கள், எத்தனையோ பேர் மடிந்து போனார்கள். அந்த பஞ்சத்தால் மரித்தவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய முப்பது லட்சமாவதும் இருக்கும். ஆங்கில அரசு தன் அளவு கடந்து உதவாமல் இருந்திருந்தால் இறந்துபோனவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாயிருந்திருக்கும். தலைமை அலுவலகத்திலிருந்து ஓங்கோலின் செயலகத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாய் அனுப்பப்பட்டது. க்ளோவின் அமெரிக்காவின் நண்பர்களிடமிருந்தும் கிறிஸ்தவர்களுக்குப் பணம் அனுப்பப்பட்டது. ஆங்கில அதிகாரிகளும் கீழ்ஜாதிக் கிறிஸ்தவர்களுக்கு பெரிய பண உதவிகளைச் செய்து வந்தார்கள். உபதேசிகளைக் கொண்டு கிராமக்கிறிஸ்தவர்களை க்ளோ போஷித்தார். 1878 - இல் பஞ்சக் கொடுமை சிறிதளவு குறைந்தது. மக்கள் தலை நிமிர ஆரம்பித்தார்கள். செவந்தர்களின் வாழ்க்கையின் வசதிகள் குறைய ஆரம்பித்தன. ஆங்காங்கு சிலக் கிராமங்கள் மூடப்பட்டுவிட்டன. மீதி உயிரோடிருக்கும் குழந்தைகளின் வளர்ச்சிக்கு அடிவிழுந்தது. கடும்பசியின் விளைவு மக்களின் முகத்தில் தடயங்களை வைத்துச் சென்றது.

பஞ்சக்காலத்தில் க்ளோ தன் கடமையின் விழிப்புணர்வைக் காத்துவந்தார். க்ளோவின் நிர்வாகமுறைகள் பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. மிகமிக உண்மையாகவே இலட்சக்கணக்கில் இது மக்களை பசி பட்டினியிலிருந்து காப்பாற்றியது. கிறிஸ்தவர்களல்லாதவர்களும் க்ளோ மற்றும் உபதேசிகளின் கிறிஸ்தவ உற்சாகப் பணிகளால் அவரிடம் இழுக்கப்பட்டார்கள். இது தீண்டக்கூடாத மற்றவர்களையும் கிறிஸ்தவத்திற்குள் நடத்தியது. கிறிஸ்தவர்கள் உதவாமல் இருந்திருந்தால் தங்கள் குடும்பங்களில் எத்தனையோ பேர் மடிந்து போயிருப்பார்கள் என்று உணர்த்தப் பட்டவர்களெல்லாரும் விக்கிரகங்களை தூக்கி எறிந்துவிட்டு இயேசு கிறிஸ்துவிடம் வந்து சேர்ந்து கொண்டார்கள்.

உபதேசிகள் மூலம் க்ளோ வேலையாட்களுக்கு வேதாகமத்தை வாசிக்க உற்சாகப்படுத்தியிருந்தாலும், யாருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. க்ளோ அவசரப்பட்டு அத்தருணத்தை பயன்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. ஒரு வேளை அந்த வேளையில் ஞானஸ்நானம் கொடுத்திருந்தால் லட்சக்கணக்கில் மக்கள் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்திருப்பார்கள் ஒவ்வொரு வேளையிலும் க்ளோ ஞானஸ்நானத்தை தள்ளிவைத்து கொண்டே போனார். பசி, பட்டினியால் அவதியுற்றவர்களை க்ளோ காப்பாற்றினார். அந்த மக்களும் அதைக் காத்துக்கொண்டார்கள். பஞ்சக்காலம் முடிவடைந்ததும் அத்தனை பேரும் க்ளோவின் குருவானவரான இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முன்வந்தார்கள்.

14. அறுவடை.... அறுவடை செழிப்பான அறுவடை

பஞ்சக்கால ஆரம்பத்திலும், காலரா தொற்று வியாதி வந்தபோதும் மக்கள் விக்கிரங்களை அதிகமாக வணங்கிக்கொண்டிருந்தார்கள். கீழ்ஜாதியினர் மதமாற்றமடைந்து கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து கொண்டதால் தான் கிராமத்தெய்வங்கள் இப்படியெல்லாம் பஞ்சமும், தொற்று வியாதியும் வரும்படி செய்திருக்கின்றன என்று பிராமணர்கள்

பழிப்பேச்சுகளைப் பேசிக்கொண்டார்கள். ஆனால் பஞ்சம் முடிந்தபிறகு அவர்கள் அறிந்துகொண்டது என்னவென்றால், 3000 பேரில் ஒரு கிறிஸ்தவனின் பெயராவது மரித்தவர்களின் பட்டியலில் காணப்படவில்லை. கிறிஸ்தவர்களின் கடவுளான இயேசுகிறிஸ்து அந்த ஆபத்துக்காலத்தில் உயிர்காத்தார் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

கிறிஸ்தவத்தின் வெளித்தோற்றம் இப்படி கிரியை செய்து பல இந்துக்களும் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொள்ள முன்வந்தார்கள், கைப் பிரதிகளைப் பெற்றுக்கொண்டார்கள், பிரசங்கம் செய்யும்போது வந்து பொறுமையாகக் கேட்க ஆரம்பித்தார்கள். பல பிராமணர்களின் வீடுகளிலும், மற்ற இந்து மக்களின் வீடுகளிலும் இயேசுவின் படம் இடம் பிடித்தது.

ஆனாலும் உண்மையான வாஞ்சையோடு அவர்கள் இயேசு கிறிஸ்துவிடம் வரவில்லை. கணக்கற்ற எண்ணிக்கையில் தீண்டக்கூடாத மக்கள் ஆண்டவரை மனபூர்வமாய் ஏற்றுகொண்டது மட்டுமல்ல, ஞானஸ்நானத்திற்காகவும் வேண்டி நின்றார்கள். பக்கிங்ஹாம் கால்வாய் வேலையாட்களும், க்ளோ மற்றும் பிரிட்டிஷ் அரசு அதிகாரிகளால் நன்மைப் பெற்றவர்களும் அந்த எல்லா செயல்களைப் பார்த்து கிறிஸ்துவின் அன்பால் ஆட்கொள்ளப்பட்டார்கள். தங்களுக்குதவிய வெள்ளைக்காரர்களால் கிறிஸ்துவின் அன்பை புரிந்துகொண்டார்கள். ஜாதி, மதம், நிறம் மற்றும் மொழி பாகுபாடின்றி உதவிசெய்ய கிறிஸ்தவ ஸ்தாபனங்களாலும், கிறிஸ்தவ அரசாங்கத்தாலும் மட்டுமே முடிந்ததென்பதை மனதில் கொண்டார்கள்.

யாருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாதென்று க்ளோ தன் உதவியாளரான உபதேசியாளர்களுக்கு கட்டளையிட்டிருந்தார். கபடமில்லாமல் வந்தவர்களுக்கும் க்ளோ காலாவகாசம் கொடுத்து ஞானஸ்நானத்தைத் தள்ளி வைத்துக்கொண்டிருந்தார். ஆனால் அவர்கள் நாங்கள் இயேசுவைப்பற்றி கேட்டிருக்கிறோம், இப்பொழுது க்ளோவின் சீஷர்களிடம் கிறிஸ்துவின் அன்பைக் காண்கின்றோம் என்று வாக்கு வாதம் செய்து ஞானஸ்நானம் கொடுத்தாக வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஞானஸ்நானம் கொடுத்தால் ஆகாரத்திற்காகவே வருகிறார்களென்னும் பேச்சுக்கு இடங்கொட விரும்பாமல் பஞ்சநிவாரணப் பணிகளுக்கே தன் முழுக் கவனம் செலுத்தினார். தேவனுடைய செய்தியை சொல்வதை ஓராண்டு காலம் நிறுத்தி வைத்துவிட்டார். ஆனால் பஞ்சம் தீர்ந்தவுடன் மக்கள் மீண்டும் கூட்டங்கூட்டமாக மிஷன் கம்பௌண்டுக்கு க்ளோவிடம் வந்துக்கொண்டிருந்ததை யாராலும் தடுக்க முடியவில்லை. சுமார் 50 மைல் தூரத்திலிருந்து ஆயிரக்கணக்கில் மக்கள் வந்துக்கொண்டிருந்தார்கள். அவர்களை 'சோற்றுக் கிறிஸ்தவர்கள்' என்று மற்றவர் கள் சொல்லிவிடுவார்களோ என க்ளோ அஞ்சினார். இப்படி மாதக்கணக்காக வந்தவர்கள் பின்னுக்கு அனுப்பப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களெல்லாரும் உண்மையாகவே ஆண்டவரை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றும், அவர்களுக்கு வேறு எந்த தவறான எண்ணமும் இல்லை என்றும் க்ளோ நன்கு அறிந்திருந்தார். ஞானஸ்நானமில்லாமலேயே மக்கள் பரலோகம் போகமுடியும் என்றும் அவர்களுக்கு அறிவுரைச் சொல்லி அனுப்பிவிட்டார்.

1872 ஆம் ஆண்டில் ஒரு முறை பண நெருக்கடியில் இருந்தபொழுது ஜெபத்திற்காக அனைவரும் கூடிவந்தார்கள். உபதேசியார் ஒருவர் 1.இரா.17:4 பகுதியை விவரித்து, "தேவன் எலியாவைக் காக்கா மூலம் ரொட்டி மற்றும் இறைச்சியை கொடுத்து போஷித்தார், ஆண்டவரை நம்பினவர்களுக்கு எந்த குறையும் இல்லை. எல்லா குறைகளையும் நீக்குவார்." என்று சொல்லிக் கொண்டிருந்தபோது ஒரு காக்கா தன் வாயிலிருந்த 6" அளவிலான ஒரு மீன் துண்டை அவர்கள் மத்தியில் வீழ்த்திவிட்டு பறந்து போய்விட்டது. இந்த சம்பவம் அவர்களுடைய விசுவாசத்தை அதிகரிக்க செய்தது. ஆபத்தில் கர்த்தர் தங்களை காத்துக்கொள்வார் என்பதற்கு இது முன்னறிவிப்பு என்பதாக எடுத்துக்கொண்டார்கள். பிறகு அந்த கூட்டத்தில் இருந்தவர்கள் மட்டுமல்ல, சுவிசேஷத்தை கேட்ட நூற்றுக்கணக்கான மக்களும் கூடிவர ஆரம்பித்தார்கள். அனைவருக்கும் பாவமன்னிப்பின் சுவிசேஷத்தைச் சொன்ன

போது அவர்கள் ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற ஆயத்தமானார்கள்.

1877 டிசம்பர் 24 ஆம் நாளன்று ஞானஸ்நானத்தைகேட்டு பெற்றுக்கொள்ள வந்த ஏறக்குறைய 15000 பேர் விசுவாசிகளை க்ளோ திரும்ப அனுப்பிவிட்டார். சில நாட்களுக்குப் பின்பு மிஷன் போர்டின் முன்னாள் தலைவர் டா. வாரென் அவர்களிடமிருந்து கடிதமொன்று வந்தது. அதில் எழுதப்பட்டதாவது, - "நீங்கள் ஒவ்வொன்றாக, ஐந்தைந்தாக, பத்து பத்தாக, இருபது இருபதாக கூட்டிச் சேர்த்துக் கொண்டிருக்கிறீர்கள், இந்த ஒழுங்கு அடுத்த பெரிய காரியத்திற்கான ஆயத்தமாயிருக்கிறது. நாளுக்கு நூறு நூறாக, ஆயிரமாயிரங்களாக வந்து கொண்டுதான் இருப்பார்கள், கூட்டங்கூட்டமாக, முழு கிராமமாக, முழு மாவட்டமாகவும் வருவார்கள், அப்பொழுது என்ன செய்வதென்று தெரியாமல் விழித்துக்கொண்டிருப்பீர்" என்று சொன்னது க்ளோவுக்கு தீர்க்கத்தரிசனமாக தெரிந்தது.

டா. வாரென் அவர்களின் தீர்க்கதரிசனம் ஏற்கனவே நிறைவேறிவிட்டது என்றும், மக்களுக்கு ஞானஸ்னானம் கொடுக்க பின்வாங்கும் காரணம் இன்னதென்றும் முழு விவரமாக க்ளோ பதில் எழுதினார். சில நாட்களுக்குள் அதே டாக். வாரெனிடமிருந்து ஒரு நீண்ட கடிதம் வந்தது. அப்பொழுது அவர் சுகவீனமாக படுக்கையிலிருந்தவாறே எழுதியிருந்தார். "சகோதரர் க்ளோ அவர்களே, உங்கள் பணியிடங்களிலிருந்து நான் கேட்டுக்கொண்டிருக்கும் செய்தி இதுவென்ன? சுத்த மனதோடு வரும் ஆத்துமாக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க மறுக்கிறீர்களாம்? இப்படி செய்ய உங்களுக்கு உரிமை தந்தது யார்? ஆண்டவருக்காக தங்களையே அர்ப்பணித்துக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க மறுத்துவிட்டால் உங்கள் குறிக்கோளையே நீங்கள் இழந்துவிடுவீர்கள். உங்கள் நோக்கங்கள் எதுவாக இருந்தாலும், நான் உங்களுக்கு சொல்லுவது என்னவென்றால், வாசலை அடைக்கவேண்டாம், இந்த செயலில் தேவன் இருக்கிறார். தாம் செய்த அற்புதங்களில் இயேசு கூட இருந்தது போலவே இந்த காரியத்திலும் இருக்கிறார். வேண்டாம், சகோதரரே, இந்த துன்மார்க்கமான செயலை

செய்யதுணிய வேண்டாம். கதவை அடைக்கவேண்டாம்.'' என்று விவரமாக எழுதியிருந்தார்..

அத்துடன் மற்றுமொரு சங்கதியும் இவர் முன்னிலையில் நின்றது. அந்த பகுதிகளில் பாப்டிஸ்ட் சபையுடன் ஒத்துவராத வேறொரு சபையின் தலைவர்கள் இந்த புதிய ஆத்துமாக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கும் செய்தி க்ளோவுக்கு எட்டியது. அவர்கள் தங்கள் போதகர்களை ஒங்கோலுக்கு அனுப்பி மக்களை தங்கள் சபையில் சேர்த்துக் கொள்ள முயற்சித்துக்கொண்டிருந்தார்கள். இதை தடுக்க க்ளோ செய்த எந்த முயற்சியும் பலிக்கவில்லை. விதைக்காத இடங்களில் அறுவடை செய்ய அவர்கள் முயற்சித்துக்கொண்டிருந்தார்கள். மிகுந்த கஷ்டங்களுடன் பாடுப்பட்டு உழைத்தவர் அந்த இடத்திலேயே இருக்கும்போது, அவர்கள் இப்படி செய்வது சரியல்லவே! ஒரு வேளை அவர்களுடைய பார்வையில் தாங்கள் செய்வது சரியாகத் தோன்றலாம். கடைசியில் அவர்கள், ''இத்தனை பேர் ஞானஸ்நானத்திற்கென்று வந்திருக்கும்போது அவர்களை இப்படி வெறுங்கையராக அனுப்பிக்கொண்டிருக்கிறீர்கள், இன்னும் ஒரு மாதம் கழித்து மீண்டும் நாங்கள் வருகிறோம், அப்பொழுது கேட்கிறவர்களுக்கெல்லாம் நாங்கள் ஞானஸ்நானம் கொடுத்துவிடுகிறோம்,'' என்று பேச்சை முடித்துக்கொண்டார்கள். இனி தாமதிப்பது சரியல்லவென்று க்ளோ உணர்ந்துக்கொண்டார். தேவனுடைய நேரம் வந்துவிட்டது என்று அவர் ஞானஸ்நானம் கொடுக்க ஆரம்பித்துவிட்டார். 1878 ஜூன் 16-ல் ஞானஸ்னானம் எடுத்துக்கொண்ட 102 பேர்களில் 74 பேர் குடும்பதலைவர்களாயிருந்தார்கள். கிராம உபதேசிகளுக்கு கடிதம் எழுதி, விசுவாசி களெல்லாரையும் ஒங்கோலுக்கு வரவழைத்தார். அனைவரும் வந்து சேர்ந்தபோது, அது ஒரு பெரிய கூட்டமாயிருந்தது. ஆற்றங்கரையிலிருந்த இந்து மக்கள் தம்மளவில் கணக்கிட்டு, ''ஐந்து ஏக்கர் நிலத்தளவுக்கு மக்கள் கூட்டமிருந்தது.'' என்றார்கள்.



ஞானஸ்நானம்

மீண்டும் 1878 ஜூலை 2ஆம் நாள் தொடங்கப் பெற்ற ஞானஸ்நானம்அன்று, 614 பெர், 3ஆம் நாள்-2222பேர், அவர்களில் 6 பேரை அபிஷேகித்து அவர்கள் மூலம் அந்த ஞானஸ்நான ஆராதனையை நடத்தினார். அந்த நாட்கள் பொற்காலமாயிருந்தது. இது ஆந்திரா பாப்டிஸ்ட் சபைக்கு மட்டுமல்ல, இந்தியாவின் முழுசபைச் சரித்திரத்திலேயே மறக்கமுடியாத பொன்னான நாட்களாயிருந்தன. 6 வாரங்களில் 8691 பேரும், டிசம்பர் மாதத்தில், 1000 பேரும் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டதில் சபையில் மக்கள் எண்ணிக்கை 12,804 ஆயிற்று. அவர்களெல்லாரும் 400 கிராமங்களில் வசித்துவந்தவர்கள். இன்னும் ஞானஸ்நானம் பெறாதவர்கள் எத்தனையோ பேர் இருந்தார்கள். பெற்றுக்கொண்டவர்கள் அதிக எண்ணிக்கையில் தீண்டக்கூடாதவர்களாவார்கள். இது ஒரு மக்கள் கூட்ட புரட்சியாயிருந்தது.



"ஜேவெட் மெமோரியல் பாப்டிஸ்ட் தேவாலயம்"

(15000 பேர் அமர்ந்து ஆராதிக்க வசதியான தேவாலயம் - க்ளோ காலத்தில் கட்டப்பட்டது.)

கிறிஸ்தவர்கள் என்னும் பெயரில் சமுதாயத்தில் உண்டான வித்தியாசப்பட்ட செயல்கள் இந்துக்களை உதவியற்ற நிலைக்கு கொண்டுவந்துவிட்டது. கிறிஸ்தவசமுதாயம் பிரபலமாக முன்னேறியது. 15,000 பேர் அமர்ந்து ஆராதிக்குமளவுக்கு க்ளோ காலத்தில் பெரியதொரு ஆலயத்தைக் கட்டினார்கள். இப்படியானதொரு சபை வளர்ச்சி தேவனுடைய அற்புதமான செயலாயிருந்தது.

ஒரே ஒரு மனிதன் கீழ்படியும் போது, தேவன் எப்படியெல்லாம் அற்புதங்களை செய்கிறார் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாயிருக்கிறது. ஊழியப் பணிகளில் தேறினவரான டா. டினால்ட் மெக் கௌரென் என்னும் பண்டிதர், "இந்த சபையின் வளர்ச்சி வித்தியாசமாயிருக்கிறது. துயரம், தீண்டாமை, உண்மையான மனசாட்சி- இவையாவும் இரட்சிப்பை அலட்சியப்படுத்தவில்லை. பயங்கரமான பஞ்சம் மற்றும் வெட்டப்பட்ட கால்வாய் காரியங்களும், கால்வாய் வேலைசெய்யும்போது கீழ்ஜாதியினருக்கு சுவிசேஷத்தை

சொல்லாமலும், அவர்களை ஞானஸ்நானத்திற்கு அவசரப்படுத்தாமலும் அந்த பேச்சையே எடுக்காமலும், அமைதியாக இருந்தாலும் ஒரே ஆண்டில் 9601 மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்த எல்லா காரியங்களும் ஒரே காலத்தில், ஒரே இடத்தில் நடைப்பெற்றுள்ளது. இனி இப்படிப்பட்ட சம்பவம் நடைப்பெறாது, அப்படி நடக்கும் என்று நினைக்கவும் முடியாது." என்று எழுதியிருக்கிறார். இந்த புரட்சி தொடர்ந்து நடைப்பெற்றது. 1901 ஆம் ஆண்டு க்ளோ தன் ஊழியகேந்திரத்தை விட்டுபோகும் போது அந்த இடத்தில் 60,000 பேர் ஞானஸ்நானம் பெற்றவர்களும், 2,00,000 பேர் ஊழியத்தைச் சார்ந்தவர்களும், 300 பேர் மிஷனெரிகளும் இருந்தார்கள்.

15. புரட்சி மிஷனெரியின் முடிவு.

1891 இல் ஜான் க்ளோ போஸ்டன் நகருக்குச் சென்றிருந்த போது, தெலுங்கு நாட்டு ஊழியத்திற்காக ஊழியர்களையும், பணத்தையும் சேகரிக்கும் முயற்சியில் ஈடுப்பட்டார். அவருடைய நாட்குறிப்பில் கண்டதாவது - "நான் போஸ்டன் வந்தடைந்தேன். செய்தித்தாட்களில் என்னைப்பற்றி 'கனம் வயோதிபர்' என்று குறிப்பிட்டிருந்தனர். ஆனால் நானோ 55 வருடங்களே கழித்த குறை நாள் வயோதிபன். இந்த வயோதிபம் நான் சுமந்த பெரும் பொறுப்புகளின் சுமையால் ஏற்பட்டதாகும்"

இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு, க்ளோ அவர்களுக்கு மனநோய் வியாதியும், சரீர உளைச்சலால் பெலவீனமும் ஏற்பட்டுவிட்டது. ஓங்கோலின் சபைகள் சுயசார்பு மற்றும் சுய உதவியைக் கற்றுக்கொள்ள மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருந்தார்கள். க்ளோ வெயிலுக்கு வந்தால் தலை சுற்றி வந்து விழும் அளவுக்கும் கஷ்டப்பட்டார். அந்த வேளையில் ஒரு மருத்துவ நிபுணரை போஸ்டனில் சந்திக்க நேரிட்டது. அவர் இவரை சோதித்துப் பார்த்து, அது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்ட கோளாறு என்றும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தலையில் ஒரு இரத்தக்குழாய் வெடித்திருந்ததாகவும் சொன்னது, அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அப்படியிருந்தும் அவர் பிழைத்திருந்தது கர்த்தரின் அற்புதமே என்பதை அவர்

வெளிப்படுத்தினாராம். அந்த வேளையில் அவர் ஓங்கோலின் ஊழியத்திற்காக பல மக்களை சந்தித்து பேசினார். ஓங்கோலின் மக்கள் கமிட்டிக்கு எழுதி பாப்டிஸ்ட் மிஷன் ஓங்கோலில் ஒரு சர்வ கலா சாலையை ஸ்தாபிக்க வேண்டுமென்னும் விண்ணப்பத்தை அனுப்பியிருந்தார். க்ளோ இதை சவாலாக ஏற்றுக்கொண்டு, இந்த சர்வகலாசாலைக்காக பணம் சேகரிக்க முன் சென்றார். அன்றைய நாளில் உலகத்திலேயே மிகப் பெரிய செல்வந்தராயிருந்த திரு. ராக் ஃபெல்லர் அவர்களை பார்க்க சென்றார். இவர் க்ளோவின் நண்பராயிருந்ததினால் க்ளோவுக்கு பல வகையில் அவருடைய வேலைகளில் ஆர்வம் காட்டினார்.

போஸ்டனில் இருந்த நாட்களில் அங்குள்ள செய்தித் தாட்களில் வீர மிஷனெரி வயோதிப க்ளோ வந்திருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. "ஆனால் அப்பொழுது எனக்கு 55 வயது மட்டுமே ஆயிருந்தது. நான் தெலுங்கு நாட்டின் ஊழியத்தின் பாரப்பளுவை சுமந்துக் கொண்டிருந்ததால் குறைக்கால வயோதிபனாயிருக்கிறேன்." என்று சொல்லியிருக்கிறார். இந்த சந்திப்பால் 25 பேர் ஊழியத்திற்கு முன் வந்தார்கள். 50,000 டாலர் பணத்தை இரு முறை மக்கள் நன்கொடையாக கொடுத்துதவினார்கள்

ராக் ∴பெல்லர் முழு செலவின் பாதியை தானே எடுத்துக்கொள்வதாக சொன்னார். க்ளோ தன் மனைவியை அங்கெயே விட்டுவிட்டு இந்தியாவுக்கு தனியாக வந்துவிட்டார். அவர் ஓங்கோலுக்கு வந்து சேர்ந்த சில மாதங்களுக்குள் அவருடைய மனைவி ஒரு விபத்தில் சிக்கி காலமானார். இந்த நாட்கள் க்ளோவுக்கு மிகக் கஷ்டமான நாட்களாக இருந்தன. புதிய மிஷனெரிகள் வந்து ஊழியத்தை ஆரம்பித்ததும் ஊழியப் பணியிடமானது பத்து சிறுசிறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் மிஷனெரிகள் நேமிக்கப்பட்டுவிட்டார்கள். க்ளோ ஓங்கோலிலேயே தங்கினார். 1894 இல் க்ளோ தன் ஊழியம் முடிந்துவிட்டது என கண்டுக்கொண்டார். ஒப்புக்கொடுத்த ஊழியத்தை கடைசி வரையிலும் உண் மையுடன் செய்தார். அவர் தன் இருதயத்தையும், ஆத்துமாவையும் அந்த வேலைக்கு முழுவதுமாக ஒப்புக்கொடுத்திருந்தார். 1894 ஆம் ஆண்டில் ஒரு சில மாதங்களுக்காக அவர் ஐரோப்பாவுக்கு சென்றிருந்த வேளையில் எம்மா ரோவ்ஸ் சென் புஷ்ட் என்னும் பெண்மணியை திருமணம் செய்துக்கொண்டார். இருவரும் இரண்டு ஆண்டுகளுக்காக மட்டும் இந்தியாவில் இருக்க வேண்டும் என்று திட்டம் போட்டு இந்தியாவுக்கு திரும்பி வந்தார்கள். ஆனால் க்ளோ ஓங்கோலையும் மிஷன் பங்களாவையும் விட்டு போக மனதில்லதவராகவே இருந்தார். ஓங்கோல் அவருக்கு சொந்த ஊரைப்போல் இருந்தது. அமெரிக்கா தான் தன் சொந்த நாடு என்பது அவருடைய மனதிலிருந்து போய்விட்டிருந்தது. அவருடைய பிள்ளைகளும், பேரப்பிள் ளைகளும் இந்தியாவிலும், அமெரிகாவிலும் வசித்து வந்தார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக ஊர் மக்கள் நிரந்தரமாக ஊரைவிட்டுப் போக விடமாட்டார்கள் என அவருக்கு நன்றாக தெரிந்திருந்தது. சில வேளை கர்த்தரிடத்திற்கு அவரால் நடத்தப்பட்ட விசுவாசிகள் வந்து அவரிடம் சிறிது நேரம் செலவிடுவார்கள். இதைப்பற்றி அவர் பேசுகையில், "அந்த மக்கள், நீங்கள் இனி எந்த வெலையும் செய்யாமல், சும்மா இருந்தால் போதும், உங்கள் தலை மேல் மின் விசிறி சுற்றிக்கொண்டிருக்கட்டும். அதுவே எங்களுக்கெல்லாம் மன நிம்மதி. அன்றாட வேலைகளுக்கு நாாங்கள்

போய்க்கொண்டிருப்போம். வேற்று ஜாதியினர் உங்கள் துரை எங்கே என்று கேட்டால், நாங்கள் அவர் அந்த மிஷன் பங்களாவிலேயே தான் இருக்கிறார் என்று சொல்லமுடியும்." என்று சொல்லுவார்கள். அந்த ஆண்டுகளில் மதராஸ்-கல்கத்தா ரயில் பாதை போட ஏற்பாடுகள் நடந்துக்கொண்டிருந்தன. இந்த திட்டத்திற்கு க்ளோ ஆலோசனை சொல்லியிருந்தார். மதராஸ்-கல்கத்தா ரயில் பாதைப் போடுவதற்காக சில முக்கியமான தொழிற் சங்கங்கள் பிரிட்டிஷ் அரசிடம் சிபாரிசு செய்யுமாறு க்ளோவிடம் வந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள். இங்கிலாந்திலிருந்த இந்தியாவின் செயலாளருக்கு க்ளோ இந்த வரைப்படத்தை அனுப்பியிருந்தார். முடிவில் நிலவை அளப்பாளர்களுடன் பொறியாளர்கள் அங்கு வந்த போது, அவர்களிடம் க்ளோவின் திட்டவரைப்படம் இருக்கக்கண்டார். இந்தியாவில் க்ளோ வாழ்ந்த கடைசி நாட்களில் சுகயீனமாக இருந்த க்ளோ அப்போதைக்கப்போது விபத்துக்குள்ளார். போடிலி என்னும் கிராமத்தில் கூட்டங்கள் நடைப்பெற்றுக்கொண்டிருந்தபோது ஒரு நாள் அவர் காற்று வாங்க குதிரையின் மீது ஊருக்கு வெளிமைதானங்களுக்கு சென்றார். திடீரென்று ஒரு ஓநாய் குதிரைக்கு குறுக்காக வரவே குதிரை பயத்தால் குதித்தெழுந்தது. இதை எதிற்பார்க்காத க்ளோ கிழே தள்ளப்பட்டு விழுந்துவிட்டார். உதவிக்கு பக்கத்தில் யாரும் தென்படவில்லை. தானாகவே எழுந்து மெதுவாக நடந்து பங்களாவுக்கு வந்துச் சேர்ந்தார். கழுத்திலும் விலாவில் இரண்டு இடங்களில் எலும்பு முறிக்கப்பட்டிருந்தது. அது சுகமடைய அவர் காத்திருக்க வில்லை, உடனேயே ஊழியத்தில் ஈடுப்பட்டார். ஆனால் அவருடைய கழுத்து மற்றும் விலாக்கள் மறுத்துப்போய் கடைசிவரையும் அவர் அதனால் பாதிக்கப்பட்டார். 1901-இல் பெப்ரவரியில் நடை பெறவிருந்த ஞானஸ்நானத்தில் சில கிராமங்களிலிருந்து வந்த விசுவாசிகள் அந்த முறைமையை நடத்தி தரும்படி கேட்டுக்கொண்டார்கள். அதற்கும் அவர் தன் குதிரயின் மீது போனார். கடும் வெயிலின் முழு நாள் பயணம் செய்ய வேண்டியதாயிருந்தது. ஆகயால் மிகுந்த களைப்புடன் அன்று படுக்கைக்குச் சென்றார். அவர் தெரு நாய்களிடமிருந்தும், புழுப் பூச்சிகளிடமிருந்தும் தன் சுகவீனத்தினிமித்தம் தன்னைக்

காதுக்கொள்ள நான்கு அடி உயரமான மடிக்கும் கட்டிலைப் பயன்படுத்தியிருந்தார். அன்று அவர் நடு இரவில் எழுந்து கட்டிலை விட்டு இரங்க முயற்சி செய்தார். தெரியாமல் பக்கத்தில் இருந்த நாற்காலியின் மேல் கால் வைத்துவிட்டார். நாற்காலி சாய்ந்து விடவே. க்ளோ பயங்கரமான நிலையில் கீழெ விழுந்துவிட்டார். இடுப்பின் வலப்பக்க எலும்பு முறிக்கப்பட்டு விட்டது. பின்பு அவர் சுகமடையவே இல்லை.

போகும் இடங்களுக்கெல்லாம் மக்கள் அவரை சுமந்து கொண்டு செல்ல ஆரம்பித்தார்கள். அதனால் அவருக்கு தாங்கொண்ணா வேதனை, மற்றும் மனநோய், ஏற்பட்டது. அதிக பெலனிழந்து மிகவும் சுகவீனமடைந்துவிட்டதால், அமெரிக்காவுக்கு திரும்பி சென்று. சரியான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள மருத்துவர்கள் ஆலொயனைக் கூறினார்கள். அனேக மாதக்காலம் க்ளோ அந்த ஆலோசனையைப் புறக்கணித்துக் கொண்டே இருந்து வந்தார். ஆனால் வலி தாங்க முடியாத கட்டத்தில், கடைசியில் அவர் அமெரிக்கா போக தீர்மானித்தார். தனனைப் பார்க்க வரும் மக்களை தடை செய்யுமாறு அனைத்து சபைகளையும் கேட்டுக்கொண்டார். ஆனாலும் ஆயிரக்கணக்கில் மக்கள் வந்து கொண்டு தான் இருந்தார்கள். அவரைக் கட்டிலில் படுக்கவைத்து இரயில் நிலையத்திற்குக் கொண்டு சென்றார்கள். எல்லா கிராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கான விசுவாசிகளும், மற்ற மக்களும் அவரை வழியனுப்ப இரயில் நிலையம் வந்தார்கள்.

அமெரிக்காவில் 18 மாதங்கள் தங்கியிருந்து அவர் தன் பிள்ளைகளையும், இனஜன பந்துகளையும், நண்பர்களையும் சந்தித்தார். சிறிதளவு நடக்க ஆரம்பித்தாலும் மற்றவர்களின் உதவி தேவைப்பட்டது. அவருடைய இருதயம் இந்தியாவில் ஓங்கோலில்தான் இருந்தது. அவர் தன் பங்களாவையும், தன் ஊழியங்களையும் நினைத்துக் கொண்டிருந்தார். அவரால் எந்த வேலையும் செய்ய முடியாவிட்டாலும், மீண்டும் இந்தியா வந்து விட்டார். அவரால் கடுமையான வெயிலைத் தாங்கிக் கொள்ள முடியவே இல்லை. மீண்டும் சோர்வும், பெலவீனமும், வியாதியும் அதிகரித்து அவரை மரணந்தருவாயில் தவிக்கக் கொண்டு சென்றது.

அவர் தன் ஆரம்பக்கால ஊழியத்தின் சிறிதளவு பகுதியையும் கூட சரிவர செய்ய முடியாத நிலைக்கு வந்துவிட்டார். 1905 இல் தன் எல்லா பணிகளையும் முற்றிலுமாக நிறுத்தி ஓய்வெடுக்க வேண்டியதாயிற்று. .கிராம மக்கள் கள்ளங்கபடமில்லாத அன்பு நிறைந்தவர்களாக மரித்துப்போன மிஷனெரிகளின் கல்லறைகளை வணங்கிக் கொண்டிருந்தது பற்றி அவர் நன்கு அறிந்திருந்தார். அப்படி தனக்கும் செய்துவிடக் கூடாதென்பது அவருடைய வாஞ்சையாயிருந்தது. ஏற்கனவே மக்கள் கிணறுகளைத் தோண்டும் போதும், ஏதாவது நல்ல காரியங்களைச் செய்யும் போதும் க்ளோ பெயரை சொல்லிதான் செய்து வந்தார்கள் என்று அவர் அறிந்து மனதில் நொந்துக்கொண்டிருந்தார். ஆகையால் விருப்பமில்லாமலேயே அவர் அமெரிக்காவுக்கு திரும்பிப்போய்விட தீர்மானித்தார்.

மக்கள் திரள் கூட்டமாக தன்னை வழியனுப்ப வந்துகொண்டிருப்பதை க்ளோ ரயிலிருந்தவாறே பார்த்தார். தம் பிரியமான துரை இனி திரும்பி வரமாட்டார் என்று மக்கள் அறிந்திருந்தார்கள்.

க்ளோ அமெரிக்காவில் நியூயார்கில் ரூபெஸ்ட் என்னுமிடத்தில் தங்கியிருக்க விரும்பினார், அவர் பிறந்த இடம் அங்கிருந்து 40 மைல் தூரத்தில் இருந்தது. தன் முடிவுநாள் சமீபித்ததென்பதை க்ளோ அறிந்து கொண்டார், இந்தியாவைப் பற்றியதாகவே அவர் பேச்சு இருந்தது. சில வேளை இந்தியா திரும்பி விடவேண்டுமென்று தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். ஒரு நாள் தன் மனைவியிடத்தில் பேசிக்கொண்டிருந்த போது, தேவனுடைய சித்தத்தைப்பற்றி சொல்ல ஆரம்பித்தார், 'நான் என் வாழ்க்கையைப்பற்றி நன்கு ஆராய்ந்து பார்த்தேன், எனது நியாயத்தீர்ப்பை நானே சொல்லிவிட்டேன். எனக்கு எந்த பதிலும் தேவையில்லை. நான் அதனை உணர்ந்து கொண்டால் அதுவே போதும்.' என்றார்.

க்ளோ 1910 நவம்பர் 24 அன்று எந்த கலக்கமுமில்லாமல் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். தூங்குபவரைப் போல் அவர் தன் கண்களை மூடிக்கொண்டிருந்தார். தான் மிகவும் அன்பாக நேசித்த, இந்த பரிசுத்த ஊழியத்திற்குள் வர காரணமாயிருந்த

டாக்டர் வாரேன் மற்றும் ரெவரெண்ட் ஜெவெட் அவர்களின் கல்லறைகளுக்கருகில் நல்லடக்கம் பண்ணப்பட்டார். அவருடைய கல்லறையில் இப்படியொரு வாசகம் எழுதப்பட்டிருந்தது:-

"நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துக் கொள்ளுங்கள்.: சங்கீதம். 46:10

A Junior Church opened by Rev. Edwin Martin Clough the eldest son of Rev. John Clough on 7, February 2002



ஹாரியட் க்ளோ அவர்களால் தொடங்கப்பட்ட பள்ளிக்கூடம் (இன்று அந்த பள்ளிக்கூடம்)

நன்றிகள்

1. "சேவா பாரத்" ஒய்வுநாள் வேதாகம பாடங்களை மொழிப்பெயர்க்கும் வேலை எனக்கு ஒப்புவிக்கப்பட்ட போது, "ஜான் எவரெட் க்ளோ" என்னைக் கவர்ந்தது.

   சேவா பாரத் ஸ்தாபனத்தின் டாக்டர். சிரஞ்சீவி அவர்களுக்கு எனது நன்றி.

2. ஆந்திராவின் ஓங்கோலின் ஜெவெட் மெமோரியல் ஆலயத்தின் மூத்த போதகரான ரெவ. டி. ஜே. ஆகஸ்டீன் அவர்களின் வழிநடத்துதல் மற்றும் சபை, பள்ளிக்கூடம் இவைகளின் போட்டோ படங்களை எடுக்க வசதி செய்துக்கொடுத்ததற்காக அவருக்கு நன்றி

3 ஆந்திராவின் சிகந்தராபாத்தில் ஆந்திரா கிறிஸ்டியன் தியோலோஜிக்கல் காலேஜின் பிரின்ஸிபால் மற்றும் பதிவேட்டு அறை மேல்பார்வையாளர்களுக்கு எனக்கு உதவியதற்கு நன்றி.

4 கொஞ்ச அளவில் செய்திகளை வைத்துக் கொண்டு அடுத்து என்ன? எப்படி? எங்குபோவது? என்று தவித்துக் கொண்டிருந்தபோது, சேவா பாரத் ரெ. சாமுவேல் ஆர்த்தர் அவர்கள் பல விஷயங்களை எனக்கு தெரியப்படுத்தினார். அவருக்கு நான் கடமைப் பட்டுள்ளேன்.

5 உடுப்பி, மங்களூர் ஊழியர்களும், சபை போதகர்களும் இந்த நூல் வெளிவர ஜெபித்து, உற்சாகப்படுத்தினார்கள். அவர்களுக்கும் நன்றிகள்.

மிகவும் விஷேஷமாக கன்னடத்தில் விஷயங்களை சேகரித்தபின்பு தயங்கியவனாக டா. சிகா ஆர்லெஸ் அவர்களை சந்தித்து காரியத்தை சொல்லும்போது, உடனடியாக என் வேலைகளை திறுத்தி அச்சுவேலைக்கு ஆவன செய்தார். எந்த பணியிடத்திலிருந்தும் e_mail மூலமாக எனக்கு பதிலளித்துக்கொண்டும் உற்சாகப்படுத்திக்கோண்டும், சகோதர அன்பையும், குரு உபதேசத்தையும், நண்பனின் இனிமையையும் தந்து உதவிவரும் இந்த அன்பர் Karnataka Mission Network-இன் தலைவரும், Centre for Contemporary Christianityயின்

முதல்வருமாயிருக்கும் Dr. Siga Arles அவர்களுக்கு எப்படி நன்றி சொல்ல வேண்டுமென எனக்கு தெரியவில்லை.

அமெரிக்காவில் Ph.D. படித்துக்கொண்டிருக்கும் Doctor Elisha James இதனுடைய முழு திருத்துதலை செய்து கொடுத்தார். அவருடைய பயிற்சிகளின் மத்தியிலும் உற்சாகப்படுத்தி வந்தார். அவருக்கு என் நன்றி.

ஜான் க்ளோ அவர்களின் போட்டோ படத்தை பெங்களூரின் United Theological College Librarian- Smt. Rita Wesley அவர்கள் தேடிக் கொடுத்தார். இந்த படம் 1914 இல் வெளியிடப்பட்ட நூலிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களுக்கு என் நன்றிகள்

மங்களூர் சபையிலிருந்து இந்த புத்தகத்திற்கான அதிகப்படியான செலவை ஒரு சகோதரர் தனது தாயார் Mrs. Adlien Betsie Anand அவர்களின் ஞாபகார்த்தமாக கொடுத்தார். அவர்களை தேவன் ஆசீர்வதிப்பாராக!

இந்த எல்லா காரியங்களிலும் என் போராட்டங்கள், சிரமங்களிலும், கஷ்டங்களிலும் துணை நின்று எனக்கு பக்கபலமாக ஆதரித்து, உற்சாகப்படுத்தின என் மனைவி, ஆஷா அவர்களை ஆசீர்வதிக்க தேவனை வேண்டுகிறேன்.

இங்ஙனம்.

K. Franklynn Jayaraj.
(வானொலி அண்ணய்யா)

Selection

1. Sevabharat VBS Childrens Books.
2. Rev. Dr. D. J. Augastine. Ongole
3. Andhra Christian Theological college, Secandarabad.
5. United Theological College, Bangalore.
6. John Everette Cloughs 1900 Diary Reports

ஜான் எவரெட் க்ளோ

1) இந்த நூலைப்பற்றி ஒரு சில குறிப்புகளை வெளிப்படுத்த எனக்கு வாய்ப்பு தந்தமைக்காக என் இருதய நிறைந்த மகிழ்ச்சியுடன் நன்றி செலுத்துகிறேன்.

இந்த பெரிய ஊழியரின் அறிமுகம் மற்றும் ஊழியவிவரங்கள் என்னைப் பலப்படுத்தியது. இது எனக்கு கற்றுக்கொடுத்த ஞானப்பாடம்- 'ஒருக்காலும் தேவன் தவறுசெய்பவர் அல்ல.' என்பதாகும் இந்த மகானின் வாழ்க்கையில் அவரும் கண்டு கொண்ட, அனுபவித்த சத்தியமாகும்.

இன்றைய வாழ்க்கை வரலாற்றுகளின் ஊடே வீரனான ஜான் க்ளோவைப் பற்றியும் சரளமாகவும் இத்தனை விஷயங்களை அடக்கியும் வெளிப்படுத்த இயலுமா? என்று சிந்திக்க தொடங்கினோம்.

இந்த ஆவிக்குரிய மேதாவி, சமூக தொண்டர் ஜான் க்ளோவை பற்றி எளிமையாக நேராக தெரியப்படுத்தி நம்மெல்லாரையும் நமது ஊழியங்களில் உற்சாகபடுத்த காரணராயிருக்கிற இந்த நூலாசிரியரின் செயலை நான் மிகவும் பாராட்டுகிறேன். அதற்காக என் மனமுந்த நன்றிகள்.

டா. எலீஷா ஜேம்ஸ்
கெனடா

❖❖❖

2) ஜான் எவரெட் க்ளோ என்னும் மாபெரும் தேவ மனிதன், இந்தியாவில் தெலுங்கு தேசத்தில் செய்த ஊழியத்தைக் குறித்து தெரிந்துக்கொள்ள கிடைத்த தருணத்திற்காக தேவனை துதிக்கிறேன்.

ஜாதிபற்று நிறைந்த மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஏழை எளிய, தாழ்ந்த ஜாதி மக்களுக்காக, பற்பல விதமான கஷ்டம், சோதனைகள், துன்பங்கள், சரீர பாடுகள், நிந்தை அவமானங்களின் மத்தியில் செய்த ஊழியம் மிகக் கடினமானது. அவர்களுக்காக பல ஆக்க வேலைகளை நடைமுறைக்குக்

கொண்டு வந்திருப்பது பிறகு வந்த மிஷனெரிகளுக்கு ஊழியங்களை செய்ய நல்லதொரு வழிகாட்டியாகும். இது தேவனையே சார்ந்து ஊழியம் செய்பவர்கள் நிச்சயமாக அதன் கனிகளை காணமுடியும் என்ற மனப்பாங்கை ஏற்படுத்துகிறது. இதை யாராலும் மறுக்க முடியாது என்பதை தெளிவாக அறிந்துக்கொள்ளலாம்.

இதை தமிழாக்கம் செய்த ஆசிரியர், அதை சுருக்கமாக எழுதி, வாசகர்களின் உள்ளத்தில் விருவிருப்பையும், ஆர்வத்தையும் உண்டாக்கும் நடையில் எழுதியுள்ளார். என் உறவினரான இவர் தேவ ஊழியத்திற்கு தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்தவர், மிகுந்த ஆர்வமுள்ளவர், கர்த்தருக்காக பாடுகளை சந்தோசத்துடன் சகிப்பவர், க்ளோவைப் பற்றி ஒரு சில விஷயங்களை கேள்விப் பட்டவுடன் ஊழியப் பாதையில் போராட்டங்களை பாராமல் நேராக ஓங்கோலுக்கே சென்று அவருடைய முழு வாழ்க்கை விவரங்களை தேடி கண்டுபிடித்தார். இதற்காக பல பாடுகளை சகிக்க வேண்டியிருந்தாலும் இந்நூலை நம் கரங்களில் கிடைக்க செய்தது ஆசிரியரின் ஒரு சிறந்த முயற்சியாகும்

.காலேப் போஜன்
தலைமை ஆசிரியர்(ஓய்வு)
உதகை, நீலகிரி

REFLECTION ON READING THE BOOK

* This small booklet on Rev. John Everett Clough has been an absorbing reading material in that it tells you about the travails and dedication of a man of God who willingly gave up his comforts in order to share the burdens of the people of a backward community of the country as to identify himself with their hopes and sufferings while preaching the Word of God.

Rev. John Everett Clough is a role model for any one who wants to be an evangelist. He practiced what he preached, just the way Christ did. The schools he built, The famine relief works he had undertaken, and the counseling he was offering to people shaken by disease and deprivation, all bespeak of a noble soul which instensely felt the human suffering of his fellowmen while spreading the Gospel of truth among the parched souls pining for the Word.

I commend the sense of sacrifice and dedication with which Bro. Franklyn Jayaraj and his wife Asha have taken upon themselves this arduous task and printing the life history of the jewel of the missionaries. I am sure their efforts will not be in vain. Jesus Christ will reward their efforts with may more souls won for His service.

Prof. Sam Daniel
Proffessor
Ex. Principal of M.G.M. College, Udupi
and Presently
Principal of Selas International School, Udupi

* I am really proud of the efforts taken by Mr Franklynn and his wife Asha Franklynn in coming out with a such a fine work which highlight the 'dedication" through the life and service of Rev. John Everett Clough.

I pray that more such biographies of servants of God from India and abroad would come out of their dask and inspire many to work for the Lord.

I wish this book in English and vernacular would be the channel of blessing to many

Rev. Samuel Jesudas Soans
Presbyter incharge and Area Chairman
CSI Southern Diocese
Udupi

* Thank you for sending me the Kannada version of the biography of this great man of God "John Everett Clough"

It was an great experience reading about his life and service which was effecting brought to life by the author. Clough's Christ like service among the down trodden in times of calamities like great famine and epidemic is challenging. I wish that more work like this about many great dedicated persons would be published through your ministry.

- Na D'Souza
Famous Writer and
Novelist in Kannada

About this book......

Thank you for the honour and pleasure of going through these pages. Personally I gather courage and inspiration by reading the works about and works by John Everett Clough. What appealed to me most was Clough's trust in "God who never makes mistakes". That was his creedal statement all through his life.

(Dr) James Elisha, Canada

The depiction of John Everett Clough as a modern day Moses and his way of leading dalits into liberation through education & employment opportunities are excellent model setters for our mission to our times. The work is not an academic analysis of the life & work of Clough, but an inspirational narrative - the kind which will be like a bedtime story to nurture faith & courage into the readers.......

I congratulate Franklynn for his excellent attempt & commend his work to you. At the same time I encourage him to look into many other such tales sung or unsung & to bring them into series of such monograms.

Dr Siga Arles
Professor of Missiology
Chairman of Karnataka Missions Network

Published by

My Soul Trust Publication (R.), Udupi

in collaboration with

Centre for Contemporary Christianity, Bangalore